# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 223 ஆனி 23ஆம் நாள் சனிக்கிழமை 07 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## பூம்புகாரில் நேற்றிரவு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் நேற்றிரவு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். வாள்களால் வெட்டப்பட்டதில் அவர்கள் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அரியாலை பூம்புகார் பகுதியில் நேற்று இரவு இரண்டு குழுக் >> 23

## ராணுவத்துக்கு கோட்டைக்குள் காணி வழங்கக் கடும் எதிர்ப்பு

### நாளை ஆர்ப்பாட்டத்துக்கும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இராணுவ முகாம் அமைப்பதற்கு காணி வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் >> 06

## இந்திய மீன்பிடி படகுகளை ஒரேயடியாக விடுவியுங்கள்

### இந்தியத் தூதுவர் மைத்திரியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 7
இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 184 இந்தியப் படகுகளையும் ஒரே தடவையில் விடுவிக்க வேண்டும் என்று இந்தியத் தூதுவர் தரணாத் சிங் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.
எல்லை தாண்டி வந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவது வழமை. பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான இணக்கத்தின் >> 06

# மாகாணத் தேர்தலுக்கு முன் புதிய அரசமைப்பு வேண்டும்

### நாடாளுமன்றத்தில் சம்பந்தன் நேற்று ஆணித்தரம்

கொழும்பு, ஜூலை 7
மாகாணசபை தேர்தலை நடத்த முன்னர் புதிய அரசமைப்பை உருவாக்கி அதனை நிறைவேற்றவேண்டும் என்று நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.
நாடாளுமன்றத்தில் மாகாணசபைத் தேர்தல் குறித்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசு உரிய நேரத்தில் தேர்தல்களை நடத்தவில்லை. இது அரசின் ஜனநாயகப் போக்கு மீதான கேள்வியை எழுப்புகின்றது. மாகாணசபைத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தாமையினால் ஜனநாயகத்தை அரசு எவ்வாறு கையாள்கின்றது என்ற சந்தேகமும் எழுகின்றது. தேர்தல் உரிமையை நிலைநாட்டவேண்டும். அதன் மூலமாக மக்களின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவேண்டும். >> 06

## யாழ். மாநகர ஊழல் விசாரணை அறிக்கைகள் வெளியே வரட்டும்!

### முதலமைச்சருக்கு அழுத்தமான பரிந்துரை.

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ்ப்பாணம் மாநகர சபையில் மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பி[illegible] நடத்தப்பட்ட விசாரணை[illegible] அறிக்கைகளை முழுமை[illegible]யாகப் பகிரங்கப்படுத்தவு[illegible]. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சருக் >> 06

கரும்புலிகளை நினைவுகூருமளவுக்கு

## வடக்கில் நடப்பது அராஜகம் கொக்கரிக்கிறார் வீரவன்ஸ



கொழும்பு, ஜூலை 7
கரும்புலிகள் தினத்தை ஆசிரியர்களும், மாணவர்களும் விளக்கேற்றிக் கடைப்பிடிக்கும் அளவுக்கு வடக்கில் நிலைமை மோசமடைந்துள்ளது. சட்ட ஆட்சிக்குப் பதிலாக அங்கு அராஜகமே இடம்பெற்றுவருகின்றது என்று >> 06

## மாகாணத் தேர்தலை அரசு நடத்த மாட்டாது

### கூட்டமைப்பு ஊடாக ஒத்திவைக்கவே முயற்சி என்று குற்றஞ்சாட்டுகிறது மகிந்த அணி

கொழும்பு, ஜூலை 7
மாகாணசபைத் தேர்தலை இந்த ஆண்டுக்குள் நடத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு ஒருபோதும் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பயன்படுத்தி தேர்தலை தள்ளிப்போடவே இந்த அரசு முயற்சிகின்றது.
இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் >> 06

## விஜயகலாவுக்கு ஆதரவாக சுவரொட்டிகள்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை "தமிழ்த்தலைவி" என குறிப் பிட்டு யாழ்ப்பாண நகரத்தில் நேற்றுச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. "நாம் உங்களுடன், தமிழ் பேசும் மக்கள்" எனப் பெயரிடப்பட்டு சுவரொட்டிகள் யாழ்ப்பாண >> 06

## எரிபொருள் விலை நேற்று கூடிக் குறைந்து குழப்பம்

கொழும்பு, ஜூலை 7
எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டதாக அரசு அறிவித்தபோதும் பழைய விலைக்கே அவற்றை விற்பனை செய்யுமாறு இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்ததை அடுத்து நேற்று எரிபொருள் விலை தொடர்பாகக் குழப்பம் ஏற் >> 23

## செயலாளர், அலுவலகம் கோருகின்றார் டெனீஸ்

### தலைமைச் செயலருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
அமைச்சின் செயற்பாட்டுக்காக செயலாளர் மற்றும் அலுவலக வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று வடக்கு மாகாணத் தலைமைச் செயலாளரிடம் எழுத்துமூலம் கோரியுள்ளார் பா.டெனீஸ்வரன்.
வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வீதி அபிருத்தி, வர்த்தக வாணிப அமைச்சராகப் பதவி வகித்தவர் >> 06




## சீனா கொடுத்த நிதி பற்றி மகிந்த விளக்க வேண்டும்

### நாடாளுமன்றத்தில் ரணில் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 7
2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் செலவுகளுக்காக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு 7.6 மில்லியன் டொலர்களைச் சீன நிறுவனம் வழங்கிய >> 23

## 63 பேரின் வேலை வாய்ப்பை முடக்கி வைத்திருக்கிறார் விக்கி

### குமுறுகிறார் டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடக்கு மாகாண போக்குவரத்து நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் ஊடாக 63 பேருக்கு வேலை வழங்க வாய்ப்பு ஏற்பட்டபோதும் அந்தத் துறைக்கான அமைச்சராக இதுவரை பதவி வகித்த வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னஸ்வரன் அதற் >> 06

## விஜயகலாவின் உரை குறித்து ஊடகங்களிடமும் விசாரணை

### அனுமதி வழங்கியது கொழும்பு நீதிமன்றம்

கொழும்பு, ஜூலை 7
தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்து குறித்து 4 தமிழ்ப் பத்திரிகைகள் உள்ளிட்ட 13 பத்திரிகைகளிடமும், 11 இலத்திரனியல் ஊடகங்களிடமும் விசாரணைகளை முன்னெடுக்கத் தேவையான உத்தரவுகளைக் கொழும்புத் தலைமை நீதிவான் ரங்க திசநாயக்கவிடமிருந்து திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவு பெற்றுக்கொண்டுள்ளது.
சிங்கலே ராவய அமைப்பின் தேசிய அமைப்பா >> 23



## கரும்புலிகள் தின நிகழ்வு

மட்டக்களப்பு,ஜூலை 7
மட்டக்களப்பு வாகரை கதிரவெளியில் கரும்புலிகள் தின நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.
நிகழ்வு புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் ஏற்பாட்டில் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட ஊடகப்பேச்சாளர் எம்.புவிதரன் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் ஒருங்கிணைப்பாளர் இ.வசந்தபாபு மற்றும் கட்சியின் அங்கத்தவர்கள், போராளிகள் குடும்பத்தினர் பிரதேச பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியினால் கரும்புலிகள் தினம் யாழ்ப்பாணத்திலும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி4)



## நினைவுகூறும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 7
திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் கட்டடத் திறப்புவிழாவின் போது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் போது உயிரிழ்தோருக்கான அஞ்சலி சொலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.
நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
இந்தக்குண்டுத்தாக்குதல் கடந்த 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி இடம்பெற்றது.
இதில் திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் அருணாசலம் தங்கத்துரை, சண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர் இராஜேஸ்வரி தனபாலசிங்கம், நாமகள் கல்லூரி அதிபர் சி. ஜோசப், கொழும்பு அதிபர் கா. சீவரத்தினம், பொறியியலாளர் வெ. ரட்ணராஜா, சமூகசேவகர் பெ.சி. கணேசலிங்கம் ஆகியோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி4)

## புலமைப்பரிசில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஜூலை 7
கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையமும் இந்து இளைஞர் கழகமும் இணைந்து தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் கருத்தரங்கு இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. இளவாலை ரோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலையில இன்றையதினமும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நாளையும் நடாத்தப்படவுள்ளது.

# பனையின் உச்சப் பயன்களை பெறத் திட்டங்கள் ஏதுமில்லை


### உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை 7
வடக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் பனை மரத்திலிருந்து உச்சப் பயனை முழுமையாகப் பெறக் கூடிய எந்தவொரு திட்டமும் உரிய திணைக்களங்களில் இல்லை. என்று பனைசார் உற்பத்தியாளர்கள் மற்றும் கூட்டறவுச்சங்கத்தினர் குற்றஞ்சாட்டினர்.

பனைஅபிவிருத்திசபையின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.
அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
பனை மரத்திலிருந்து இரண்டு வீதமான பயனை பெற்றக்கொள்ள கூடிய திட்டங்களே இங்கு நடைமுறையில் உள்ளன. மிகுதி 96 வீதமும் பயன்படுத்தப்படாமல் உள்ளது. அதற்கு பனை அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.
முன்னர் பனை அபிவிருத்தி சபை ஏற்றுமதி சபையுடன் இணைந்து பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்தது. போரின் பின்னர் அவை இல்லாமல் போய் விட்டது.
பருத்தித்துறை மற்றும் சாகவச்சேரியில் காணப்பட்ட பனை சார் உற்பத்தி மற்றும் விற்பனையுடன் கூடிய மாதிரிக் கிராமம் இப்போது அங்கு இல்லை. ஆயிரம் பேர் வரையில் அதனுடன் தொடர்புபட்ட அங்கத்தவர்களாக அப்போது இருந்தனர். அவர்கள் இப்போது என்ன செய்கிறனர் என்று கூடத் தெரியவில்லை.
பனை சார்ந்த திட்டங்களை வகுக்கும் போது அது நீண்ட காலத்துக்கு முன்னெடுக்க கூடிய பயனுள்ள திட்டங்களாக அவை இருக்க வேண்டும். சபையின் தலைவர் மாற்றத்தாலோ அல்லது ஆட்சி மாற்றத்தாலோ திட்டங்கள் பாதிக்கப்படக் கூடாது. ஒருசீரான நடைமுறையில் சபை இல்லாத நிலை காரணத்தால் இன்று கூட்டுறவையும் அங்கத்தவர்களையும் இழந்து நிற்கின்றோம்.
கள் அதிகமாக உற்பத்தி செய்யும் போது அதனை எவ்வாறு சேமிப்பது பயன்படுத்துவது என்று தெரியாமல் அதனை நிலத்தில் ஊற்றும் நிலையில் தான் பனை சார்ந்த நிலையங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. பனை அவிருத்திச் சபையினர் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தனர். பனை மரம் என்பது எமக்கு பல்வேறு பயன்களை தருகின்றது. அதனைவாழ்வாதாரமாககொண்டு வடக்கில் 70 ஆயிரம் பேர் உள்ளனர். ஆகவே அவர்களுக்கான தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். ஒரு பனை மரத்தில் இருந்து 800க்கும் மேற்பட்ட பயன்களை பெறலாம்.
கிராம மட்டத்தில் பனை சார் கைவினைப்பொருள்கள் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
குறிப்பாகப் பெண்களின் வாழ்வாதாரத்துக்கு மாத்திரம் 2 கோடி ரூபா நிதி தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான பனை சார் உற்பத்திபொருள்களின் பயிற்சி மற்றும் ஏனைய உதவிகளை வழங்கவுள்ளோம். முதலில் வேலணை பிரதேசத்தில் இதனை ஆரம்பிக்கவுள்ளோம் என்றனர்.
ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தின் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர் பொ.வாகீசன், பனை அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் எம்.பி.லோகநாதன் ஆகியோர் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.
இணைத் தலைவர்களான வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்கள ஆணையாளர் பொ.வாகீசன், பனைஅபிவிருத்திசபையின் பொது முகாமையாளர் எம்.பி.லோகநாதன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பனை சார் பயனாளிகள், சபையின் உயர் அதிகாரிகள், கூட்டறவுச் சங்க பிரதி நிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். பனை சார் பயிற்சிகளை நிறைவுசெய்தவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மூன்று மாதத்துக்கு ஒரு முறை நடைபெறவுள்ளமை குறிப்பிடதக்கது. (ரி4,7)

## மன்னார் மாவட்ட செயலராக மோகன்ராஜ் பதவியேற்றார்

மன்னார், ஜூலை 7
மன்னார் மாவட்டசெயலர் கிறிஸ்தோபர் அன்ரன் மோகன்ராஜ் நேற்றுக் கடமைககளைப் பெறுப்பேற்றார்.
மேலதிக மாவட்டசெயலர், அதிகாரிகள், உத்தியோகத்தர்களால் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.
சர்வமதத் தலைவர்கள் ஆசியுரைகள் வழங்கினர்.
''மன்னார் மாவட்டம் மூன்று மதங்கள் வாழும் அமைதியான பூமி முன்பிருந்த அதிகாரிகளால் நல்ல வளர்ச்சி கண்டுள்ளது. எங்கும் நகரங்கள் வளர்வதையே உள்ளதையே காணக்கூடியதாக உள்ளது. கிராமப்புற மக்களின் வாழ்வோ உயர்ச்சி அடைந்துள்ளதாகத் தெரியவில்லை. கிராமங்களையும் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் பணி செய்ய வேண்டும்" என்று தனது முதலுரையில் மோகன்ராஜ் தெரிவித்தார்.
கிறிஸ்தோபர் அன்ரன் மோகன்ராஜ் தனது முதலாவது நியமனத்தை கரைத்துறைபற்று பிரதேச செயலாளராகப்பெற்றார் பின்னர் வடக்குகிழக்கு மாகாணத்தின் கைத்தொழில் துறை திணைக்களத் தினுடைய மாகாண ஆணையாளராகவும். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளராகவும், கோப்பாய் பிரதேச செயலாளராகவும், முல்லைத்தீவின் மேலதிக மாவட்ட் செயலராகவும், வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். (ரி4,213)



## சட்டவிரோத இறைச்சியுடன் ஒருவர் கைது

வவுனியா,ஜூலை 7
வவுனியா பட்டுகாட்டில் சட்டவிரோதமாக மாடுகளை இறைச்சிக்காக வெட்டிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள வன்னிபிராந்தியபிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து 18 கிலோ கிராம் இறைச்சிமீட்கப்பட்டதுஎனக் கூறப்பட்டது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,110)

## பெண்ணிடம் கொள்ளை

யாழ்ப்பாணம் ஜூலை 6
யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் தனியே சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி இனந்தொரியாதோரால் அறுக்கப்பட்டது. இந்தச்சம்பவம் கடந்த 4 ஆம் திகதி இடம் பெற்றது எனத் தெல்லிப்பழைப்பொலிஸார் தெரிவித்தனர். அதே இடத்தைச் சேர்ந்த பெண்ணிடமே இரண்டு பவுண் சங்கிளி அறுக்கப்பட்டது. இதுதொடர்பாக தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி4,8)



## வவு. மாவட்ட செயலராக ஹனிபா கடமை ஏற்றார்

வவுனியா, ஜூலை 7
வவுனியா மாவட்ட செயலாராக ஜ.எம். ஹனிபா நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.
வவுனியா மாவட்ட செயலகத்துக்கு வந்த ஜ.எம். ஹனிபாவை, முன்னாள் மாவட்ட செயலர் சோமரத்தின விதாரன பத்திரன, மேலதிகமாவட்டசெயலர் தி.திரேஸ்குமார், பிரதேசசெயலர்கள், உத்தியோகத்தர்கள் வரவேற்றனர்.
இலங்கைத் தேசியக் கொடி ஏற்றப்பட்டு தமிழ், சிங்கள மொழிகளில் இலங்கை தேசிய கீதம் இசைக்கப்பட்டு மங்களவிளக்கேற்றலுடன் வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. மும்மதங்களையும் சேர்ந்த சமயத் தலைவர்கள் ஆசியுரைகள் வழங்கினர். "இந்த மாவட்டத்துக்கு நான் அரச அதிபராக நியமிக்கப்பட்டதையொட்டி மிகவும் பெருமையடைகின்றேன். என்னை நியமித்தமைக்கு ஒருகாரணம் இருக்கின்றது. இலங்கை வரலாற்றில் தொடர்ந்து 27 வருடங்கள் உதவிப் பிரதேச செயலாளராகவும், பிரதேச செயலாளராகவும் பணியாற்றிவன் நான் மட்டுமே. நான் நீண்டகாலம் பணியாற்றிய இறக்ககாமம், அட்டாளைச்சேனை போன்ற பகுதிகள் மூன்று இன மக்களையும் உள்ளடக்கிய பிரதேசங்கள். அனைத்து மக்களையும் அரவணைத்து செல்வது கடினமான காரியமாக இருந்தாலும் அதில் நான் வெற்றியடைந்திருக்கிறேன் என்ற ஒரு நம்பிக்கையில் இங்கு கடைமைகளை பொறுப்பேற்கிறேன். அதற்காக அனைவரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று மாவட்ட செயலர் ஜ.எம். ஹனிபா தனது முதலுரையில் தெரிவித்தார். (110)

## மாணவர்களிடையே கலாசாரப் பரிமாற்றம்

அனுராதபுரம் தலைவைக் க்ல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பண்டுகாபய வித்தியாலய மணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வாதரவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இன ஐக்கியம், கலாசார நல்லுறவை ஏற்படுத்துவதற்கான நல்லுறவுப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

பண்டுகாபய வித்தியாலய மாணவர்கள் 25 பேர் ஆசிரியர்கள் 5 பேர் உள்ளடங்கிய குழுவினர் நேற்று வெள்ளிக் கிழமை வாதரவத்தை தமிழ்க் கலவன் பாடசாலைக்குப் பயணம் மேற்கொண்டனர். காலை 9 மணிக்கு வருகை தந்த மாணவர் குழு பிற்பகல் 2 மணி வரை வாதரவத்தையில் தங்கி நின்று மாணவர்கள் ஆசியர்களுடன் கருத்துப்பரிமாற்றங்கள், விளையாட்டுக்கள் மற்றும் தமிழ் சிங்கள இன கலாசார நிகழ்வுகளில் கலந்து முழு நாளும் மகிழ்வுடன் நல்லுறவாடினர். வாதரவத்தை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர் மற்றும் ஆசிரியர் நல்லுறவுக் குழுவை அநுராதபுரத்துக்கு வருகைதந்து தமது பாடசாலையில் தங்கி இன நல்லுறவு கலாசார நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர். இந்தக் கலாசார நல்லுறவு விடயம் ஏப்ரல் மாதம் பாடசாலை விடுமுறைக் காலத்தில் நடைபெறும் என்று வாதரவத்தை தமிழ் கலவன் பாடசாலை அதிபர் எஸ். தவநாயகம் தெரிவித்தார். (ரி4,11)



## லஞ்சம் பெற்றவருக்கு 40 ஆண்டுகள் சிறை

கொழும்பு, ஜூலை 7

மேல்மாகாணசாலைபயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் முன்னாள் முகாமையாளருக்கு 40 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு வீதிப்போக்குவரத்து உரிமம்வழங்குவதற்காகதனியார்பஸ் உரிமையாளர் ஒருவரிடம் இலஞ்சம் பெற்றுக் கொண்டமை உள்ளிட்ட 8 குற்றங்களில்குற்றவாளியாகஇனம்காணப் பட்டதை அடுத்தே சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறைத் தண்டனை05ஆண்டுகளில்முடிவுறும் வகையில் விதிக்கப்பட்டுள்ளது என்று கொழும்புமேல்நீதிமன்றநீதிபதிகிஹான் குலதுங்க நேற்று உத்தரவிட்டார். இது தவிர பிரதி வாதிக்கு 40ஆயிரம் ரூபா தண்டமும் பஸ் உரிமையாளருக்கு 5 இலட்சம் ரூபா நட்ட ஈடும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ரி4)



# றெஜினாவுக்கு நீதிகோரி நேற்றும் ஆர்ப்பாட்டங்கள்

**கிளிநொச்சி, ஜூலை 7**

**யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் படுகொலை செய்யப்பட்ட சிறுமி றெஜினாவுக்கு நீதி கோரி கிளிநொச்சியிலும் புத்தளத்திலும் நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**



**கிளிநொச்சி**

முரசுமோட்டை றோ.க வித்தியாலய மாணவர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் நாடுமுழுதும் இடம்பெறும் பெண்கள் மற்றும் சிறுவர் மீதான வன்கொடுமைகளுக்கு கண்டனமும் வெளியிடப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் அருட்தந்தையர்கள், மனித உரிமைசெயற்பாட்டாளர்கள், பாடசாலைமாணவர்கள், பொது அமைப்புக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**புத்தளம்**

சிறுமிறெஜினாபடுகொலைசெய்யப்பட்டமையைக் கண்டித்தும் போதைப் பொருள் பாவனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கண்டன போராட்டமும் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று புத்தளத்தில் நடைபெற்றது.

புத்தளம் கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட ஊர்வலம் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு கட்டைக்காடு பகுதிக்கு சென்று மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.

றெஜினாவின் இறப்புக்குத் தீர்வு வழங்கப்பட்ட வேண்டும்', 'இளைய தலைமுறையினரை போதைப் பொருள் பாவனையில் இருந்து மீட்போம்', 'போதையற்ற உலகுக்கு பாதை அமைப்போம்', 'றெஜினாவின் கொலை மன்னிக்கப்பட முடியாது', இளைய சமுதாயமே விழித்தி டுவீர்', ' மதுவைஒழித்துவிடுவீர்' போன்றவாசகங்கள் அடங்கிய பாதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ரி4,6,35)

## விபத்தில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு, ஜூலை 7

ஏறாவூர்கொரகல்லிமடுவித்தியாலயத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார். பொலிஸ் அதிகாரி பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனப்பொலிஸார்தெரிவித்தனர். ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மிதல்தெணியவைச்சேர்ந்த 30 வயதுடைய பொலிஸ் அதிகாரியே இவ்வாறு உயிரிழந்தார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை

அநுராதபுரம், ஜூலை 7

அநுராதபுரம் விஜயபுரத்தில் வர்த்தகரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிக்கொலைசெய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதுஎனப்பொலிஸார்தெரிவித்தனர். வர்த்தகரை மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் அநுராதபுரம் தீபானி கல்லூரிக்குஎதிரில் அழைத்துச்சென்றுள்ளார்.

அங்குகூரிய ஆயுதங்களுடன் நின்ற நபர்கள் வர்த்தகரை தாக்கி கொலைசெய்தனர் எனக்கூறப்பட்டது.

விஜயபுர ராகுல மாவத்தையைச்சேர்ந்த 45 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டார். சந்தேகநபர்களைகைதுசெய்யும்நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## சுண்ணாம்புக் கல் ஏற்றிச் சென்றவர் தையிட்டியில் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 7



யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்டவிரோதமான முறையில் சுண்ணாம்புக் கல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரை காங்கேசன் துறை சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்றுக் கைது செய்தனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ரி4,26)



## போதைக்கு எதிராக ஊர்வலம்

வவுனியா, ஜூலை 7

வவுனியா பட்டானிசூர் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் போதைக்குஎதிரான விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற ஊர்வலம் முஸ்லிம் மகாவித்தியாலயம் முன்பாக ஆரம்பமாகி வவுனியா குருமன்காட்டு சந்திக்குச் சென்று மீண்டும் பாடசாலையைச் சென்றடைந்தது.

போதனைப்பாவனையால்ஏற்படும்சமூகப்பிரச்சனைகள் அதனால் ஒவ்வொரு குடும்பங்களிலும் ஏற்பாடும் பாதிப்புகள் மற்றும் வீதி ஒழுங்கு முறையை மீறுவதால் ஏற்படும் விபத்துகள் என்பன தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேரணி முன்னெடுக்கப்பட்டது. போதை பொருள் அற்ற நாட்டைக் கட்டி எழுப்புவோம், போதை பொருள் களை முற்றாகத் தடைசெய்வோம், போன்ற பதாதைகளை ஏந்தியவாறு மாணவர்கள் பேரணியில் கலந்துகொண்டனர். இதில் மாணவர்கள், ஆசிரியர்கள், வவுனியா நகரசபை உறுப்பினர்களான றசூல்லரிப், அப்துல் பாரி, மற்றும் வவுனியா போக்குவரத்து போலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர். தேசிய போக்குவரத்து வாரத்தை முன்னிட்டு இந்த ஊர்வலம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி4,110)

## வாள்களுடன் வந்தவர்கள் சிறுப்பிட்டியில் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 7



யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியில் வீடொன்றுக்குள் வாள்களுடன் புகுந்த குழு ஒன்று அங்கிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை சேதமாக்கியது. வீட்டிலிருந்தவர்களையும் அச்சுறுத்தியது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் முகங்களை மூடிக் கட்டியவாறு வந்த மூன்று பேர் தாக்குதலை மேற்கொண்டனர் என்று கூறப்பட்டது. வீட்டில் இருந்தவர்கள் வீட்டினுல் சென்று கதவை மூடிக்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். (ரி4,26)

## திருமஞ்ச வெள்ளோட்டம்

காரைநகர், களபூமி திக்கரை அருள்மிகு முருகமூர்த்தி கோவில் திருமஞ்ச வெள்ளோட்டமும் திருமஞ்சத் திருவிழாவும் மகோற்சவத்தின் 5 ஆம் நாளான இன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாகத் திருமஞ்சத் திருப்பணிக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், சுதுமலை வடக்கு ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும். ஆடித்திங்கள் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று பொங்கல் உற்சவம் 21 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும். (115)

## தென்மராட்சிப் பிரதேச மக்களின் சிறுதொழில் முயற்சிக்கு உதவிகள்

தென்மராட்சி, ஜூலை 7

யாழ்ப்பாணம், தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறு கைத்தொழில் மூலம் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேற்கொள்ள கிராமங்களில் உள்ள குழுக்கள் மற்றும் பொது அமைப்புகளுக்குச் சிறுதொழில் முயற்சிக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் பல்வேறு குழுக்கள் காணப்படுகின்றன. இந்தக் குழுக்களில் இணைந்து தொழில்களை நடத்த, நிதி உதவி மற்றும் சிறுதொழில் முயற்சிக்கான ஏனைய உதவிகளை வழங்குமாறு பிரதேச பொது அமைப்புக்களும் சிறுகைத்தொழிலாளர்களும் பிரதேச செயலகத்திடம் கோரியிருந்தன.

இவர்களது கோரிக்கையை ஏற்றுத் தேசிய சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம், சிறு தொழில்களைக் கூட்டாக மேற்கொள்ளவுள்ளவர்களின் விவரங்களையும் செயற்றிட்டங்களின் விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலகத்துக்கு அறிவித்துள்ளது.

எனவே புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்ள விரும்பும் அல்லது ஏற்கனவே செயற்படும் தொழில் நிலையத்தை, குழுக்களாக இணைந்து அபிவிருத்தி செய்ய விரும்பும் குழுக்கள் பிரதேச செயலகத் துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் மறுவாழ்வு அமைச்சின் கீழ் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ், பலர் சிறு கைத்தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிடைத்த உதவிகளின் மூலம் பலர் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர். இவ்வாறான சிறு கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் ஒன்றிணைந்து தொழில் நிலையத்தை ஆரம்பித்தால் அதனால் பல குடும்பங்கள் பயன்பெற வாய்ப்புண்டு என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ - 9)

## சபை பொறுப்பேற்று

# முதல் 3 மாதங்களில் ஏகப்பட்ட திட்டங்கள்

### சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

தென்மராட்சி ஜுலை 7

சபை பொறுப்பேற்று முதல் மூன்று மாதங்களில் பல மில்லியன் ரூபாவுக்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள சபையின் உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் சபையின் அலுவலர்கள் பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பினாலேயே இந்த வேலைத் திட்டங்களை மேற்கொள்ள முடிந்தது. எனச் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்

சாவகச்சேரி, பிரதேச சபையின் அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது கடந்த மூன்று மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர்ச்சியாக இவ்வாறான ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் பட்சத்தில் யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்ல நாடு பூராகவும் உள்ளூராட்சி சபைகளில் சிறந்த பிரதேச சபையாக எமது சபை திகழும் என்பதில் ஐயமில்லை.

கடந்த மார்ச் மாதம் 4 ஆம் திகதி நாம் அனைவரும் சபையைப் பொறுப்பெடுத்து நடத்தி வருகின்றோம். மக்களின் அவசிய கோரிக்கைகளை எம்மால் முடிந்தவரையில் விரைவில் செய்து முடித்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது எமது தலையாய கடமை என்பதை உணர்ந்த நாங்கள் மேற்கொண்ட முயற்சியால் பல்வேறு வேலைத்திட்டங்களை எம்மால் பூர்த்திசெய்ய முடிந்தது.

கொடிகாமம் சந்தையில் நீண்டகாலமாகக் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகள் தொடர்பாக வர்த்தகர்களும் அங்குள்ள வியாபாரிகளும் தெரிவித்திருந்தனர். அவை தொடர்பாக என்னுடன் அந்தக் குறைபாடுகளைப் பார்வையிட்ட உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் அவசியமாகக் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொண்டதால் சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் சிறு குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கொடிகாமம் கோவிலாமனை மயானப் பகுதியில் காணப்பட்ட திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டுத் தற்போது பாதுகாப்பான இடத்தில் கொட்டப்படுவதுடன் அப்பகுதியில் காணப்பட்ட கொல்களமும் சீரமைக்கப்பட்டுப் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து வருடங்களாக மூடப்பட்டிருந்த எழுதுமட்டுவாழ் சந்தையை மீளசெயற்படுத்துவது தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாகச் சந்தை மீள ஆரம்பித்துப் பெருமளவு விற்பனைப் பொருள்கள் சந்தைக்குக் கொண்டு வரப்படுகிறது. அங்கு பெருமளவு உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் வரத் தொடங்கியுள்ளனர். அதனால் சபைக்கு நாளாந்தம் வருமானம் கிடைக்கிறது.

சபை பொறுப்பேற்ற காலத்தில் பிரதேச சபையின் உப அலுவலகங்களில் காணப்பட்ட குறைபாடுகள் உறுப்பினர்கள் வழங்கிய முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக அங்கு காணப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டு தற்போது திறம்பட செயற்பட்டு வருகின்றன.

குடி தண்ணீர் பற்றாக்குறை காணப்படும் பிரதேசத்திற்கு உட்பட்ட 45 இடங்களுக்கு சபையின் நீர்த்தாங்கி மூலம் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. பிரதேசத்துக்குட்பட்ட 75 இடங்களில் சாலை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

தனங்களப்பு அறுகுவெளியில் 200 மில்லியன் ரூபா செலவிலான உப்பளம் அமைப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன.

தனங்களப்பு அறுகுவெளிப் பகுதியில் 2 கிலோ மீற்றர் நீளமான பகுதியில் கடற்கரை சுற்றுலா மையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மட்டுவில் சந்திரபுரம் கிராமத்தில் 8 மில்லியன் ரூபா செலவில் நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டம் ஆரம்பித்தல். அங்கு மேற்கொள்ளப்பட்ட குழாய் மூலம் குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பித்து வைத்தல், சபை மற்றும் ஏனைய நிதிகள் மூலம் 20 வேலைத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஏழு வேலைத் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சபையின் 100 நாள் வேலைத் திட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் சபை உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் மூலம் பல்வேறு நிதி மூலங்களைப் பெற முயற்சிக்க வேண்டும் - என்றார். (9)

## கடந்த ஆறு மாதத்தில் மாநகரில் 293 பேர் டெங்கால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

இந்த வருடத்தின் கடந்த ஆறுமாதக் காலப்பகுதியில் யாழ்ப்பாண மாநகரப் பிரதேசத்தில் 293 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவித்தது.

இதன்படி ஜனவரி 128, பெப்ரவரி 53, மார்ச் 37, ஏப்ரல் 15, மே 21, ஜூன் 39 மொத்தமாக 293 பேர் இந்த டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் இறுதியில் பெய்த மழையின் தாக்கத்தால் இந்த வருடத் தொடக்கத்தில் டெங்கின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்த தாக்கம் படிப்படியாகக் குறைந்து சென்ற நிலையில் ஜூன் மாதத்தில் அதன் தாக்கம் சற்று அதிகரித்தும் காணப்பட்டதாகச் சுகாதாரப் பிரிவு தெரிவித்தது.

தற்போது இந்த டெங்குத் தாக்கம் காணப்படும் இடங்களில் தொடர் விழிப்புணர்வு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (17)



## வணிக விழா

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம், நெல்லியடி மத்திய கல்லூரியின் வணிக விழா கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் கல்லூரி அதிபர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தேசிய சேமிப்பு வங்கியின் நிறைவேற்று அலுவலர்கள் அலுவலர் புவனேந்திரன் ரகுநந்தன் கலந்துகொண்டார். (7)

## புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழா

கொழும்புத்துறை, ஜூலை 7

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை மணியந்தோட்டம் உதயபுரம் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் மாலை 5.30 மணிக்கு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் பவனியும் இடம் பெறும். (135)

***

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக் கேணி பங்குக்குட்பட்ட புல்லாவெளி செபஸ்ரியார் ஆலயப் பெருநாள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குப் பெருநாள் வழிபாடுகள் வெற்றிலைக்கேணி பங்குத் தந்தை தலைமையில் இடம்பெறவுள்ளன. (160)

## வாழ்வாதார உதவிகள் தேவைப்படின் பதிவு செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச சபையினால் வட்டாரத்துக்கு ஒரு வீட்டுத்திட்டம் என்ற வகையில் 12 வட்டாரங்களுக்கும் 12 வீட்டுத்திட்டங்கள் கிடைக்கப்பெறவுள்ளன.

அத்துடன் வட்டாரங்களுக்கான வாழ்வாதார திட்டங்களும் வழங்கப்பட இருக்கின்றன, எனவே வட்டாரம் 02 இன் கிராம சேவகர் பிரிவுகள் ஜே/118, ஜே/119 ஐ சேர்ந்த பயனாளிகள் வாழ்வாதார உதவிகள் தேவைப்படின் புகையிரத நிலைய வீதி, கோண்டாவிலில் உள்ள அலுவலகத்தில் தங்கள் பெயர் விபரங்களினை பதிவு செய்யுமாறு வட்டார உறுப்பினர் கு.மதுசுதன் அறிவித்துள்ளார்.

## பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி ஆகியவற்றிலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களுக்கான கலந்துரையாடல் நிறுவன மாநாட்டு மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா மற்றும் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம்பெற்று, வெளியேறிய சகல மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனப் பழைய மாணவர் சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.



## 'நீள்கரை' உரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

'நீள்கரை' ஆற அமர்ந்து பேசுவோம் என்ற தலைப்பில் இரு பிரதிகள் பற்றிய உரையாடல் யாழ்ப்பாணம் கலைத்தூது அழகியற் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சி.ரமேஷின் தலைமையில் நடைபெறவுள்ளது. உடுவில் அரவிந்தனின் "பாழ்வெளி" சி.கருணாகரனும், ந.மயூரரூபனின் "புனைவின் நிழல்" தி.செல்வமனோகரனும் உரையாடவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## விழிப்புணர்வு பேரணி

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தால் போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணி ஒன்று பிரதேச செயலர் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (138)






யாழ்ப்பாணம், மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த புதன்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் சி.இந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது நிறுவுநர் சிலைக்கு ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன் மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதையும், முதன்மை விருந்தினர் மாணவருக்குப் பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# மயானங்கள் புனிதமாக போற்றப்பட வேண்டும்

## வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவிப்பு

அச்சுவேலி ஜூலை 7

மயானங்கள் மரியாதைக்குரிய இடங்களாகப் புனிதமான முறையில் போற்றப்பட வேண்டும். மயானங்களை பராமரிக்க வேண்டிய பொறுப்பு உள்ளூராட்சி சபைகளைச் சார்ந்ததாகும். ஆனால், பிரதேச சபைகளின் நிதிநிலைமைகளைக் கருத்திற்கொண்டு மயானங்களைச் சீரமைப்பது பராமரிப்பதில் இருந்து விலகி நிற்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது என வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா நிரோஷ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் அச்சுவேலி தெற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்து மயானங்கள் கழிவுகள் கொட்டப்படும் இடங்களாகவும் புதர் மண்டிய நிலையிலும் பெருமளவில் காணப்படுகின்றன. சில மயானங்கள் மயான அபிவிருத்திச் சபைகள் மூலம் சீர்செய்யப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருவது பாராட்டிற்குரியது. மயான அபிவிருத்தியில் சபைகளின் செயற்பாடுகளுக்கு வலி. கிழக்குப் பிரதேசசபை பக்கபலமாக நின்று உதவும்

வலி. கிழக்குப் பிரதேச சபை பிரிவில் 30 க்கு மேற்பட்ட இந்து மயானங்கள் உள்ள போதிலும் சில மயானங்களே மயான அபிவிருத்திச் சபைகள் மூலம் பராமரிக்கப்படுகின்றன. அந்தவகையில் அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயான அபிவிருத்திச்சபையின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியது. மயானங்களைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு அபிவிருத்திச்சபைக்கு உரியதாக இருந்தபோதிலும் நிதிநிலை நெருக்கடியால் பிரதேச மயான அபிவிருத்தியில் கவனஞ்செலுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

மரணமடைந்த பின்னர் சகலரும் சமத்துவமான முறையில் சங்கமமாகும் மயானங்கள் மரியாதைக்கு உரியதாகப் புனிதமான முறையில் பாதுகாக்கப்பட வேண்டும் - என்றார். (11)

## விவசாய உள்ளீடுகள் வழங்கல்

வடக்கு மாகாண சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்ளுக்கான மாங்கன்றுகள், பெரிய வெங்காய விதைகள் வழங்கும் நிகழ்வு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என மாகாண விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

திட்டத்தின் ஒரு பகுதியாக இன்று நடைபெறும் நிகழ்வில் 5 ஆயிரம் மாங்கன்றுகள், 900 கிலோ பெரிய வெங்காய விதைகள் வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் அமைச்சின் உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (7)

## பெருந்திருவிழா

சாவகச்சேரி, ஜூலை 7

சாவகச்சேரி, சங்கத்தானை அருள்மிகு வைரவ சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் இடம் பெறும். (131)

## கணபதி வழிபாடு

கொடிகாமம், ஜூலை 7

மீசாலை அருள்மிகு திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் கணபதி வழிபாடு நர்ளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. கடந்த 28 வருடங்களாக இந்தக்கணபதிவழிபாடு நடத்தப்பட்டு வருகின்றது. (159)



## முன்பள்ளி சிறார்களின் மாதிரிச் சந்தை

சாவகச்சேரி, ஜூலை 7

சாவகச்சேரி, கல்வயல் டேனிஜா முன்பள்ளிச் சிறார்களின் மாதிரிச் சந்தை முன்பள்ளி மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. சிறார்களின் விற்பனைத் திறனை ஊக்குவிக்கும் பொருட்டுப் பார்வையாளர்கள் பொருள்ள்களைக் கொள்வனவு செய்தமையைக் காணமுடிந்தது. (9)

# மீன்பிடிப் படகுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பதிவு செய்யப்படாத மீன்பிடிப்படகு களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மீன்பிடிப் படகுகள் யாவும் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்யப்படாத படகுகள் கடலில் தொழிலில் ஈடுபடுவதற்கு வரும் காலத்தில் அனுமதிக்கப்படமாட்டாது என்று கடற்றொழில் நீரியல்வள திணைக்களம் தெரிவித்தது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரைக்கும் எழுநூறு வரையிலான மீன்பிடிப் படகுகள் பதிவு செய்யப்படாமல் உள்ளன. இவை யாவும் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்யப்படாத மீன்பிடிப் படகுகள் அதன் உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட கடற்றொழில் பரிசோதகர்களிடம் தொடர்பு கொண்டு பதவிவுகளை மேற்கொள்ள முடியும். இவ்வாறு பதிவு செய்யப்படும் மீன்பிடிப் படகுகளுக்கே எதிர்காலத்தில் அரசால் வழங்கப்படும் நிவாரணஉதவித்திட்டங்கள்யாவும் வழங்க அனுமதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (17)

## இறுவட்டு வெளியீடு

அச்சுவேலி, ஜூலை 7

அச்சுவேலி, நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் அருட்பாமாலை இறுவட்டு வெளியீடு கோவில் முன்றலில் இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

# இசைக் கருவிகள் அன்பளிப்பு

சாவகச்சேரி, ஜூலை 7

யாழ்ப்பாணம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் கலைத்துறையை மேம்படுத்தும் முகமாகக் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தால் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான இசைக் கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கடந்த வருடம் இடம்பெற்ற தமிழ்த் தினப் போட்டிகளில் பங்குபற்றிச் சாதனை படைத்த கல்லூரியின் கலைக்குழுவின் கோரிக்கையின் பிரகாரம் ஆர்மோனியம் மற்றும் உடுக்கு ஆகியவற்றைச் சங்கத்தினர் அன்பளிப்பாக வழங்கினர்.

அத்துடன் கல்லூரியில் கற்கும் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 20 மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான ஜூலை மாதக் கொடுப்பனவும் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கான மாதந்தக் கொடுப்பனவுகள் கடந்த மூன்று மாதங்களாக வழங்கப்பட்டு வருகின்றன. (9)



## பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி மின்கம்பிகளுநக்கு பிளாஷ்ரிக் கவர்

சாவகச்சேரி, ஜூலை 7

யாழ்ப்பாணம், மட்டுவில், சரசாலை ஆகிய பகுதிகளில் இலங்கை மின்சார சபையின் கம்பிகளினூடாக வழங்கப்பட்டு வரும் மின் மார்க்கங்களைப் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதிக் கம்பிகள் பிளாஸ்ரிக் கவர்களுடன் கூடியதாக மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி சேவை நிலையம் ஊடாக இந்த வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. (131)

# பற்சிகிச்சை முகாம்



தென்மராட்சி, ஜூலை 7

யாழ்ப்பாணம், தென்மராட்சிக் கிழக்குக் கொடிகாமம் பிரதேச பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பற்சிகிச்சை முகாம் உசன் இராமநாதன் மகா வித்தியலயத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்சியாக நடைபெற்று வருகின்றது.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த 12 வயதுக்கு உட்பட்ட பற்களில் பாதிப்பு உள்ள மாணவர்களுக்குப் பற்சிகிச்சையாளரால் பரிசோதனைகள் நடத்தப்பட்டு சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகின்றன. உசன் இராமநாதன் மகா வித்தியாலயம், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், போக்கட்டி அ.த.க.பாடசாலை, கரம்பை அத.க.பாடசாலை, எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க.பாடசாலை, மிருசுவில் வடக்கு அ.த.க. பாடசாலை, மிருசுவில் றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை, எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம், கெற்பேலி அ.த.க. பாடசாலை, உள்ளிட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்குப் பற்சிகிச்சையளிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (9)

# ஒருநாள் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர், உப தவிசாளருக்கான ஒருநாள் பயிற்சிநெறி யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் விடுதியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தால் நடத்தப்படும் இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தவிசாளர், உபதவிசாளர் ஆகியோருக்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சிநெறி வடக்கு மாகாணத்திலுள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர், உப தவிசாளர்களுக்கும் படிப்படியாக அந்தந்த மாவட்டங்களிலும் நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (115)

## செயலாளர்...

பா.டெனீஸ்வரன். அந்தப் பதவியிலிருந்து எந்தக் குற்றச்சாட்டுக்களும் காரணங்களும் இன்றி அவரை நீக்கினார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். அதை எதிர்த்து டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

டெனீஸ்வரனைப் பதவி நீக்கியது தவறு என்றும் அவர் தனது பதவியில் தொடரலாம் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. இதையடுத்துத் தான் தனது பொறுப்புக்களை ஆற்றுவதற்கு வசதியாக ஏற்கனவே தனது துறைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அமைச்சர்களை அவற்றில் இருந்து விலக்கும்படி வடக்கு மாகாண ஆளுநரிடம் கேட்டிருந்தார் டெனீஸ்வரன். ஆனால் அதற்கான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

இதையடுத்தே தனது அமைச்சுச் செயற்பாட்டுக்காக ஓர் செயலாளரையும், அலுவலக வசதியையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று தலைமைச் செயலாளர் அ.பத்திநாதனுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்த விடயத்தைத் தலைமைச் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்றதுடன். ஆளுநருக்குத் தான் அனுப்பிய கடிதத்தின் பிரதியை பா.டெனீஸ்வரனுக்கும் அனுப்பியுள்ளார். (ற-105)

## ராணுவத்துக்கு...

செயலாளர் செ.கஜேந்திரன் அறிவித்துள்ளார். கோட்டைக்குள் இராணுவத்தினருக்குக் காணி ஒதுக்கீடு செய்தால் யாழ். நகரத்தில் உள்ள சிறு சிறு முகாம்கள் அனைத்தையும் தாம் விடுவிக்க முடியும் என்று இராணுவத்தினர் கோரியிருந்தனர். மே மாதம் 28ஆம் திகதி யாழ். செயலகத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த அபிவிருத்திக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கையை இராணுவத்தினர் வைத்திருந்தனர்.

யாழ்ப்பாணம் கோட்டை ஒரு தொல்பொருள் சின்னம் என்பதால் அதற்குள் வேறு கட்டுமானங்கள் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது என்று அப்போதே எதிர்ப்புக் காட்டப்பட்டது. தொல்பொருள் நினைவுச் சின்னம் அமைந்துள்ள இடத்திலிருந்து 400 மீற்றர் சுற்றளவுள்ள பகுதிக்குள் எந்தவிதக் கட்டுமானங்களும் மேற்கொள்ளப்படக்கூடாது என்பது விதி. அதனையும் மீறி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் அந்தப் பகுதிக்குள் மீளக் கட்டியெழுப்பப்பட்டது. ஏற்கனவே உள்ள துரையப்பா விளையாட்டு அரங்கமும் மறுசீரமைக்கப்பட்டு நவீனமயமாக்கப்பட்டது. இப்போது கோட்டைக்குள் இராணுவத்தினருக்கு முகாம் அமைக்கக் காணி கொடுக்கப்படக்கூடாது என்று வரலாற்று ஆய்வாளர்களும் ஆர்வலர்களும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில், கோட்டைக்குள் இராணுவத்தினருக்குக் காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டதாக இல்லை என்று யாழ். செயலக வட்டாரங்கள் நேற்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தன. ஆனால், கேட்டைக்குள் முகாம் அமைப்பதற்கு இராணுவத்தினருக்குக் காணி வழங்கப்பட்டதாக ஊடகங்கள் சிலவற்றில் வெளியான செய்தியை அடுத்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளைய ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோட்டையின் தென்புற நுழைவாயில் (பண்ணை கடற்கரைப் பக்கம்) நடைபெறும் என்று கஜேந்திரன் தெரிவித்தார். (உ-5)

## மாகாணத்...

அதிகாரப் பரவலாக்கல் என்பதை மிக நீண்ட காலமாக கலந்துரையாடி வருகின்றோம். நீண்ட காலமாகவே இது ஒரு கோரிக்கையாக பேசப்பட்டு வருகின்றது. அதிகாரப் பரவலாக்கல் வேண்டும் என்பதை மக்கள் ஒரு காத்திரமான கோரிக்கையாக முன்வைத்து வருகின்றனர்.

1920 முதல் இந்தக் கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன. அதனுடன் கூடிய புரட்சிகள், அமுத்தங்கள் எழுந்தபோதிலும் தீர்வு கிட்டவில்லை. நூறு ஆண்டுகளை எட்டவுள்ள நிலையில் இன்றுவரையிலும் அதற்கான தீர்வு கிடைக்கப்பெறவில்லை.

நம்பகத்தன்மை மிக்க, வினைத்திறனுடன் கூடிய அதிகாரப் பகிர்வை இன்று வரையில் பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது. வெறுமனே மாகாணசபைத் தேர்தலை நடத்துவதால் மாத்திரம் ஜனநாயகம் வெற்றியடையப்போவதில்லை. தேர்தலைத் தாண்டிய மக்கள் குரல், அவர்களின் தேவை, மக்களே மக்களை ஆளும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

1987, 1988 ஆம் ஆண்டுகளில் இருந்து மக்களின் குரலை அழுத்தமான குரலாக அவதானிக்க முடிந்தது. ஜே.ஆர். இன் ஆட்சியில், அதன் பின்னர் பிரேமதாச அரச தலைவராக இருந்த காலத்தில் 13ஆம் திருத்தம் குறித்து முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதுடன் 13 ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்ற அதிகாரப்பகிர்வு குறித்தும் பேசப்பட்டது. மக்களின் ஜனநாயகம் பலமடைய அதிகார பகிர்வு அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டது.

மங்கள முனசிங்க குழுவின் அறிக்கையை அவதானித்தால் அதன் உண்மை தெரியும். மாகாண சபைகளின் அதிகாரப் பகிர்வு குறித்து அரசமைப்பின் தேவைப்பாடு என்னவென்பதையும் அறிய முடியும். 13ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று செயற்படவேண்டும் என்ற நோக்கம் இருந்ததை அவதானிக்க முடியும்.

அதன் பின்னர் 1994ஆம் ஆண்டு சந்திரிகா குமாரணதுங்கவின் ஆட்சியில் இதே கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டு 1997ஆம் ஆண்டு சில பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அரசமைப்புச் சீர்திருத்தம், அதில் அதிகாரப் பரவலாக்கல் பெறும் முக்கியத்துவம் என்பன சுட்டிக்காட்டப்பட்டன. அப்போது மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன போன்ற அமைச்சர்கள் அந்த யோசனையை ஏற்றுகொண்டனர். 2000ஆம் ஆண்டு அந்த வரைவும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சியிலும் சர்வகட்சி குழு அமைக்கப்பட்டு அதிகாரப் பகிர்வு நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அதியுச்ச அதிகாரப் பகிர்வு வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஆட்சியிலும் ஆரம்பம் முதற்கொண்டு அதே நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமாக சகல அரச தலைவர்களும் இப்போதைய ஆட்சியாளர்களும் அதிகாரப் பகிர்வு அவசியம் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்துள்ளனர். 13ஆம் திருத்தத்திற்கு அப்பால் சென்று அதிகாரப் பகிர்வை வழங்கவேண்டும் என்ற நோக்கம் இருந்தபோதும் இந்த முயற்சிகள் ஏன் வெற்றிபெறவில்லை என்பது புதிராகவே உள்ளது.

அனைவரும் முயற்சிகள் எடுத்தும் அதிகாரப் பரவலாக்கலின் அவசியத்தை ஏற்றுக்கொண்டும் ஏன் அதனை நிறைவேற்ற முடியவில்லை என்ற கேள்வி எழுகின்றது. இன்று முக்கிய இரண்டு கட்சிகளின் ஆட்சி இடம்பெறுகின்றது, வழிநடத்தல் குழுவின் கூட்டங்களில் ஒரு சிலரைத் தவிரை அனைவரும் புதிய அரசமைப்புக் குறித்து இணக்கம் தெரிவித்துள்ளனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இந்தக் காரியங்களை வெற்றிகொள்ள முடியும். எதிர்க்கட்சியின் முழுமையான ஆதரவையும் பெற்றுக்கொள்ள முடியும். இந்த நகர்வுகள் குறித்து முன்னேற்றகரமாக நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

பிரிபடாத நாட்டுக்குள் அரசமைப்பின் மூலமாக அதிராகப் பரவலாக்கல் ஒன்றினைப் பெற்றுக்கொண்டு அதன் மூலமாகச் சமத்துவத்துடன் வாழ வேண்டும் என்பதையே நாம் உறுதியான கோரிக்கையாக வலியுறுத்தி வருகின்றோம். இதன் மூலமாக நாட்டினை முன்னோக்கி கொண்டுசெல்ல முடியும். இதுவரை காலமாக நாம் விட்ட தவறுகளைத் திருத்திக்கொள்ள இது சரியான ஒரு சந்தர்ப்பமாகும்.

கடந்த கால தவறுகளில் இருந்து படிப்பினையைப் பெற்றுக்கொண்டு அடுத்த கட்ட ஆரோக்கியமான நகர்வுகளை நாம் முன்னெடுக்க வேண்டும். புதிய அரசமைப்பை உருவாக்காது விட்டால் நாட்டுக்கு எந்த விடிவும் இல்லை. தீர்வுகளுக்கும் முன்னேற்றங்களுக்கும் புதிய அரசமைப்பு அவசியம். இதையே நாம் ஆரம்பத்தில் இருந்து தெரிவித்து வருகின்றோம். இது குறித்து சிந்தித்து இறுதித் தீர்வைப் பெறுவது குறித்து ஏன் சிந்திக்காது உள்ளீர்கள். ஏன் இன்றுவரை விடை கிடைக்காது உள்ளது. பிளவுபடாத நாட்டுக்குள் நிரந்தரத் தீர்வு ஒன்று எமக்கு வேண்டும். மாகாண சபைகள் உயிரோட்டம் உள்ளதாக அமையவேண்டும். மாகாண அரசு, மாகாண ஆட்சி அமையப்பெறவேண்டும். மாகாண் சபைத் தேர்தகள் நடத்தப்பட முன்னர் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும். சபைக்கு புதிய அரசமைப்பினைக் கொண்டுவர வேண்டும். மாகாணசபை முறைமைகள், அதிகாரப் பரவலாக்கல், அதியுச்ச அதிகாரப் பகிர்வு என்பன அரசமைப்பில் உறுதிப்படுத்தபட வேண்டும். தேர்தல்கள் காலதாமதம் இல்லாது இடம்பெறவேண்டும். மக்களின் ஜனநாயகம் பலமடைய வேண்டும். அதன் மூலமாக மக்களே தம்மை ஆளும் ஜனநாயக சூழல் பலமடைய வேண்டும் - என்றார். (உ-5,31)

## 63 பேரின்...

கான நடவடிக்கையை எடுக்கவில்லை. இதன் மூலம் 63 பேரின் வேலைவாய்பைத் தட்டிப் பறித்து விட்டார்.

இவ்வாறு குற்றஞ்சாட்டுகிறார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.டெனீஸ்வரன். நீதிமன்ற உத்தரவுப்படி வடக்கு மாகாண சபையின் மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் வர்த்தகவாணிப அமைச்சர் தானே என்று உரிமை கோருகின்றார் டெனீஸ்வரன்.

அந்த அடிப்படையில் தனது அமைச்சுக்கீழ் வரும் திணைக்களங்களின் தலைவர்களுடன் நேற்று சந்திப்பை அவர் ஏற்பாடு செய்திருந்தார். மன்னாரில் சந்திப்பு நடந்தது. எனினும் வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் மாத்திரமே சந்திப்பில் கலந்து கொண்டார். ஏனைய திணைக்களத் தலைவர்கள் பங்கேற்கவில்லை. கடந்த வெள்ளிக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றம் தான் அமைச்சராகத் தொடரலாம் என்று வழங்கிய தீர்ப்புக்கு அமைவாகவே கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தார் என்று டெனீஸ்வரன் தெரிவிக்கிறார்.

நேற்றைய சந்திப்பின் பின்னர் பா.டெனீஸ்வரன் தெரிவித்ததாவது: கடந்த ஆண்டு வடக்கு மாகாண சபை உருவாக்கிய போக்குவரத்து நியதிச் சட்டத்தின் மூலம் 63 பேருக்கு நிரந்தர அரச நியமனம் வழங்கும் வாய்ப்பு வடக்கு மாகாண சபைக்கு ஏற்பட்டிருந்தது. இந்தப் பதவிகளுக்கு இதுவரையில் எவருமே நியமனம் செய்யப்படவில்லை. அதற்கான தொடக்க நடவடிக்கைகள்கூட முன்னெடுக்கப்படவில்லை. இது கவலைக்குரிய விடயம். வடக்கில் ஆயிரக்கணக்கானோர் வேலை வாய்ப்பில்லாத நிலையில் அனுமதி உள்ள இடங்களை நிரப்பாமல் இருப்பது மக்களுக்குச் செய்யும் துரோகம் என்றார் டெனீஸ்வரன்.

வடக்கு மாகாண அமைச்சரவையிலிருந்து பா.டெனீஸ்வரன் கடந்த ஆண்டு முதலமைச்சரினால் நீக்கப்பட்ட பின்னர், போக்குவரத்து அதிகார சபை வடக்கு மாகாண முதலமைச்சரின் கீழேயே இயங்கிவருகின்றது. (உ-5,105)

## யாழ்...

குப் பரிந்துரைத்துள்ளது மாநகர சபை ஊழல் விசாரணை அறிக்கைகள் தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஆராய்ந்த குழு.

யாழ்ப்பாண்ம் மாநகர சபையின் முன்னைய ஆட்சியில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதையடுத்து ஓய்வுபெற்ற நீதிபதிகள் அரியரட்ணம், வசந்தசேனன் தலைமையில் இரண்டு விசாரணைக்குழுக்களை முதலமைச்சர் நியமித்தி ருந்தார். இரண்டு விசாரணைக் குழுக்களின் விசாரணையும் முடிந்து, முதலமைச்சரிடம் அறிக்கைகள் கொடுக்கப்பட்டன. அந்த அறிக்கையின் மீது, எப்படியான மேல் நடவடிக்கை எடுப்பதென ஆராயக் குழுவொன்றை நியமித்திருந்தார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா, உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன், முதலமைச்சரின் அமைச்சின் செயலர், முதலமைச்சரின் செயலர் ஆகியோர் அந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

இந்தக் குழு கடந்த திங்கட்கிழமை தமது அறிக்கையை முதலமைச்சரிடம் சமர்பித்தது. அதில் நான்கு பரிந்துரைகள் உள்ளடங்கியுள்ளன.

விசாரணை அறிக்கைகளைப் பகிரங்கப்படுத்துவது, முன்னாள் மேயர், சபையின் உறுப்பினர்கள், அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுப்பது உள்ளிட்ட பரிந்துரைகளே முன்வைக்கப்பட்டுள்ளன. (உ-5)

## இந்திய...

அடிப்படையில் மீனவர்கள் விடுவிக்கப்பட படகுகள் தடுத்து வைக்கப்படும். இந்திய மீனவர்கள் தொடர்ந்து அத்துமீறுவதன் காரணமாக அவர்களது படகுகள் விடுவிக்கப் படமாட்டாது என்று அரசு சார்பில் அமைச்சர்கள் தெரிவித்து வந்தனர். உள்ளூர் மீனவர் சங்கங்களும் படகுகளை விடுவிப்பதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

எல்லை மீறிய 184 இந்தியப் படகுகள் தற்போது இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்று இந்திய அதிகாரிகள் கூறுகின்றார்கள். அவற்றில் 10 படகுகளை விடுவிக்குமாறு அண்மையில் அரசு உத்தரவிட்டது. இதையடுத்து கடந்த வாரம் இந்தியாவில் இருந்து ஒரு குழு வந்து இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியப் படகுகளைப் பார்வையிட்டிருந்தது.

இந்த நிலையில் அனைத்துப் படகுகளையும் ஒரே தடவையில் விடுவிக்க வேண்டும் என்று இந்தியத் தூதுவர் கோரிக்கை முன்வைத்துள்ளார். இலங்கை அரசால் 2015ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட படகுகளில் 42 படகுகளை விடுவிக்க இணக்கம் காணப்பட்டது. அதில் 32 படகுகள் மட்டுமே நல்ல நிலையில் இருந்தன. எனவே அவை மட்டுமே விடுவிக்கப்பட்டன.

இந்தியத் தூதுவரின் கோரிக்கை தொடர்பில் அரச தலைவரால் இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனினும் இந்திய மீன்பிடிப் படகுகளை விடுவிப்பது அவர்கள் மீண்டும் மீண்டும் எல்லை தாண்டி வந்து தமது வாழ்வாதாரத்தை அழிப்பதற்கு வழிவகை ஏற்படுத்திவிடும் என்று கூறும் உள்ளூர் மீனவர் சங்கங்கள் படகுகள் விடுவிக்கப்படக்கூடாது என்று எதிர்க்கின்றன. (ற-105)

## வடக்கில்...

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல்வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியே வீரவன்ஸ இந்தக் கருத்தை வெளியிட்டார்.

"தற்கொலைத் தாக்குதல்களை நடத்திய கரும்புலிகள் தினம் வடக்கில் பகிரங்கமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. படங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. ஆசிரியர்களும், மாணவர்களும் வெளியே வந்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்துகின்றனர். மறுபுறத்தில் ஆவா குழுவும் தலைதூக்கியுள்ளது. பொலிஸாருக்கு விடுமுறை இல்லாமல் செய்யப்பட்டிருந்தாலும் அவர்களால் அங்கு சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியாதுள்ளது. அதுமட்டுமல்ல, வடக்கில் 25 வீதம் படைக்குறைப்பு இடம்பெற்றுள்ளது. இராணுவ முகாம்களும் அகற்றப்பட்டுள்ளன. இவ்வறானதொரு நிலைமையில்தான் புலிகள் மீண்டும் வரவேண்டுமென விஜகலா கூறியுள்ளார்" என்று விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார். (5)

## மாகாணத் தேர்தலை...

கொண்டு வரப்பட்ட மாகாண சபைத் தேர்தல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதம் நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தும் நோக்கம் அரசுக்குக் கிடையாது. அரசு தனது பலவீனத்தை மறைக்கவே முயற்சித்து வருகின்றது. மாகாணசபை கலைக்கப்பட்டு இன்று ஒரு வருடகாலமாகும் நிலையில் மூன்று மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறாது உள்ளன. இன்னும் மூன்று மாகாண சபைகள் கலையவுள்ளன.

இன்றைய தினம் (நேற்று) நடைபெறும் பிரேரணை மீதான விவாதத்தை ஆதரிக்க வேண்டுமென்பதற்காக நாங்கள் கலந்துக்கொள்ளவில்லை. சில மாதங்களுக்கு முன்னர் மாகாண சபைகள் தேர்தல் தொடர்பாக விவாதத்தை கோரியிருந்தோம். ஆனால் எமக்கு அது வழங்கப்படவில்லை. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கோரியபோது வழங்கப்பட்டுள்ளது. தேர்தலை நடத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக நடத்தப்படும் விவாதமல்ல இது. தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான பின்னணியை உருவாக்குவதற்கு அரசு இதனை பயன்படுத்தும்.

கடந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெறச் செய்ய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசுக்கு ஆதரவளித்தனர். ஆனால் அவர்கள் இன்று அது தொடர்பாக உணர்ந்து கொண்டுள்ளனர். தன் வினை தன்னைச் சுடும் வீட்டப்பம் வீட்டைச் சுடும் எனும் பழமொழியை அவர்களுக்கு இந்த வேளையில் கூற விரும்புகின்றேன். தமிழிலேயே அதனை நான் கூறுகின்றேன். இந்த அரசு மக்கள் ஆணையை மீறியே செயற்படுகின்றது. இந்த நாட்டில் தேசியப் பாதுகாப்பை அச்சுறுத்தும் வகையிலான ஒரு வார்த்தையை இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கூறினார். அவரே தனது பதவியை துறந்ததன் மூலம் தன் தவறுக்கான பரிகாரத்தை தேடியுள்ளார். ஆனால் இந்த அரசியல் மிகப் பெரும் ஊழலைச் செய்தவர்கள் பதவி துறக்கவில்லை. இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் மத்திய வங்கியில் மக்களின் பணத்தை கொள்ளையடித்து தனது கைவரிசையைக் காட்டியது. தினந்தினம் காலையில் எழும் வேளையில் இவை நினைவுக்கு வருகின்றன. இந்த தவறுக்கு அரசில் உள்ள குற்றவாளிகள் முதலில் பதவிதுறக்க வேண்டும் - என்றார். (உ-5,31)

## விஜயகலாவுக்கு...

பஸ் நிலையம் மற்றும் அதை அண்டிய பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன. (ற-7,114)

# ஈழத்தவருக்குப் புகலிடம் வழங்க டோக்கியோ நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஜூலை 7
ஜப்பானின் நீதியமைச்சால் புகலிடக்கோரிக்கை மறுக்கப்பட்ட இலங்கைத் தமிழர் ஒருவருக்குப் புகலிடம்வழங்குமாறுடோக்கியோவின்மாவட்ட நீதிமன்றமொன்று உத்தரவிட்டுள்ளது.
2006 ஆம் ஆண்டு ஜப்பானில் புகலிடம் கோரி விண்ணப்பித்திருந்தார். நீண்ட இழுபறியின் பின்னர் மீளவும் இவ்வாறு நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது. குறிப்பிட்ட நபர் இலங்கையில் தனது உயிருக்கு ஆபத்துள்ளதாகத் தெரிவித்து புகலிடக் கோரிக்கையை முன்வைத்திருந்தார்.
குறிப்பிட்ட நபர் கனடாவுக்குச் செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவேளை அவரிடம் உரிய கடவுச்சீட்டு இல்லாததால் ஜப்பானில் அதிகாரிகள் அவரைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.
அதனை தொடர்ந்து அவர் ஜப்பானில் புகலிடம் கோரியுள்ளார். எனினும்2006டிசம்பரில்அவரது புகலிடக்கோரிக்கையை ஜப்பான் நிராகரித்துள்ளது.
இதன் பின்னர் இந்த நபர் 2007 இல் ஓசாகா மாவட்ட நீதிமன்றில் முறையீடு செய்துள்ளார். அந்த நீதிமன்றம் 2011 இல் குறிப்பிட்ட நபருக்குப் புகலிடம் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.
எனினும் நீதிமன்றத் தீர்ப்பை ஜப்பானின் நீதியமைச்சு ஏற்க மறுத்துள்ளது.
இதனைத்தொடர்ந்துஅந்தநபர்ஜப்பான்அரசுக்கு எதிராகஇழப்பீடுகோரிவழக்குத்தாக்கல்செய்தார். அதை விசாரணை செய்த நீதிமன்றம் குறிப்பிட்ட நபரைஇலங்கைக்குத்திருப்பிஅனுப்பினால்அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று நீதிமன்று மீண்டும் சுட்டிக்காட்டி புகலிடம் வழங்க உத்தரவிட்டுள்ளது. (4)

தவறாக நடக்க முற்பட்டு தப்பிக்கும் முயற்சியாக

## பேருந்தில் இருந்து குதித்தவர் காயம்

கொழும்பு, ஜூலை 7
இலங்கைப்போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் பயணித்த பெண்களிடம், தவறாக நடந்துகொண்டார் என்று குற்றஞ்சாட்டப்படும்இளைஞர்தப்பிச் செல்லமுயற்சித்துபோது பேருந்தில் இருந்து வீழ்ந்து படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் புறக்கோட்டையில் இருந்து மத்துகம வரை பயணித்தபோது பேருந்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
பெண்களிடம் தவறாக நடந்துகொண்டபோது, அவர்கள்கூச்சலிட ஆரம்பித்தனர். அதனால் பேருந்தின். பின்பக்கக் கதவால் கீழே குறித்துத் தப்பி ஓட முயற்சித்த போதே காயமடைந்துள்ளார். பேருந்தில் உள்ள பயணிகள் தன்னைப் பிடித்துத் தாக்குவார்கள் என்ற அச்சத்தில் குதித்ததாகச் சந்தேகநபர் விசாரணையில் கூறியுள்ளார்.
அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று என்று பொலிஸாரிடம் தெரிவித்தனர். (4)

## கணக்காய்வுச் சட்டமூலம் ஏகமனதாக நிறைவேற்றம்

கொழும்பு, ஜூலை 7
கூட்டு அரசின் வாக்குறுதிகளில் ஒன்றான தேசிய கணக்காய்வுச் சட்டமூலம் நாடாளுமன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்த ஏப்ரல் 3ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த சட்டமூலம், நேற்றுமுன்தினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
இதன்போது, தேசிய கணக்காய்வுச் சட்டமூலம் திருத்தங்களுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. பன்னாட்டுச் சட்டங்களுக்கு அமைவாக, கணக்காய்வாளர்களின் நடவடிக்கைகளைச் சுயாதீனமாக நடைமுறைப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த சட்டமூலத்தின் மூலமாகத் தேசிய கணக்காய்வாளர் ஆணைக்குழுவைப் பலப்படுத்துதல் மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகம் நிறுவுதல் ஆகிய நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

# அரசியல் பழிவாங்கல்கள் கல்வித்துறையில் தாராளம்

### இதைக் கல்வி அமைச்சரே கூறுகிறார்

**கொழும்பு, ஜூலை 7**
**கல்வித்துறையில் சுமார் 12 ஆயிரம் பேர், அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டுள்ளனர் எனக் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.**



நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷாவிதானகே, கேட்ட வினாவுக்குப் பதிலளிக்கையில் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:
"கல்வித்துறையில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான 12 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதில் ஆயிரத்து 18 பேருக்குத் தரமுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. தகுதியற்றவர்களுக்குத் தரமுயர்வுகள் வழங்கப்படவில்லை. இது குறித்து ஏதாவது பிரச்சினைகள் காணப்படின், அவர்கள் நீதிமன்றை நாடலாம்.
அதுமட்டுமன்றி, மாணவர்களின் எதிர்காலத்தை வீணாக்கும் வகையிலான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று அதிபர், ஆசிரியர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்" என்று அவர்மேலும்தெரிவித்தார். (4)



## அரச தலைவர் மைத்திரியின் புதியசெயலராகசெனவிரத்ன

### நேற்று நியமனம் பெற்றார்

கொழும்பு, ஜூலை 7
அரசதலைவரின் புதிய செயலராக முன்னாள் மூத்த நிர்வாக அதிகாரி உதய ஆர். செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார் என்று அரசதலைவர் ஊடகப்பிரிவு தெரிவித்தது.
நேற்றுஅவர்அரசதலைவரிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.
விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சித்துறைஅமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய உதய ஆர். செனவிரத்ன, சிலமாதங்களுக்கு முன்னர் அந்தப் பதவியிலிருந்துஓய்வுபெற்றிருந்தார். 37க்கும் மேற்பட்ட வருடங்கள் அரச சேவையில் பணியாற்றி, பல்வேறு அனுபவங்களைப் பெற்றுள்ள அவர், இதற்கு முன்னர் விளையாட்டு, நெடுஞ்சாலைகள், முதலீட்டுஅபிவிருத்தி, உற்பத்தித் திறன் அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களின் செயலாளராகவும் வெளிவிவகார அமைச்சின்மேலதிகசெயலாளராகவும் நிதி, திட்டமிடல் அமைச்சின் பிரதிச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.
பொல்கொல்ல கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தை அமைப்பதற்கு முன்னின்று செயற்பட்ட இவர், தனது சேவைக்காலத்தில் பல்வேறு திட்டங்களுக்குத் தலைமை வகித்துள்ளார்.
களனிப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டதாரியான இவர், தொடர்பாடல் துறையில் முதுமானிப் பட்டத்தையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி தொடர்பாடல் துறையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவும் உள்ளூராட்சி ஆய்வு தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டத்தையும், திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத் துறையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர் என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

## 'சனிமாற்றம்' என்ற படப்பெயரால் குடும்பத்தலைவர் அறைக்குள் பூட்டு

கொழும்பு, ஜூலை 7
தொலைக்காட்சியில் 'சனிமாற்றம்' என்ற பெயரிலான படத்தின் விளம்பரத்தைப் பார்த்ததும் கணவனை வீட்டுக்கு வரவழைத்து அறைக்குள் விட்டுப்பூட்டி வைத்தார் மனைவி.
இந்தச் சம்பவம் கொழும்பு அம்பலன்கொடயில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றது.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
குடும்பத்தலைவி தொலைக்காட்சி பார்ப்பது வழமை. 'சனிமாற்றம்' என்று தொலைக்காட்சியில் அறிவிப்பு வெளியாகியது. அதைப்பார்த்த அவரது மனைவி, கணவரின் அலைபேசிக்கு அழைப்பு எடுத்துப் பதற்றத்துடன் உடனடியாக வீட்டுக்கு வருமாறுகூறி அழைப்பைத் துண்டித்துள்ளார்.
என்ன, ஏது என்று தெரியாது குடும்பத் தலைவர் வீட்டுக்கு ஓடிச் சென்றுள்ளார். அங்கு சென்றதும் அவரை அறைக்குள் அழைத்துச் சென்று அங்கு அவரை விட்டு அறைக்கு வெளியே வந்து கதவைப் பூட்டிவிட்டு, திறப்பை எடுத்து மறைத்துவிட்டார்.
குடும்பத் தலைவர் மீன்பிடித் தொழில் செய்பவர். அவர் தொழிலுக்காக அம்பலன்கொட துறைமுகத்துக்குக் காலையிலேயே சென்றிருந்தார். சென்ற சில மணிநேரத்தில் அவர் வீட்டுக்குத் திரும்பி அழைக்கப்பட்டு அறைக்குள் வைத்துப் பூட்டப்பட்டார்.
மனைவியிடம், ஏன் பூட்டி வைத்திருக்கிறாய் என்று கணவன் கேட்டபோது, இன்று மதியம் 12.30க்கு சனி மாற்றம் ஏற்படவுள்ளது. உங்களுக்கும் சனி உள்ளது. அதனால் 2.30 வரை வீட்டைவிட்டு வெளியே செல்லவேண்டாம் என்று மனைவி கூறியுள்ளார். ஆரம்பித்த வேலையை இடையிலேயே விட்டுவந்திருக்கிறேன். உடனேயே செல்லவேண்டும் என்று அவர் கூறியபோதும் மனைவி கேட்கவில்லை.
குடும்பத் தலைவர் கடுங்கோபமடைந்தார். அன்று மதியம் 12.30 மணிக்கு 'சனிமாற்றம்' என்ற திரைப்படம் ஒளிபரப்பப்படும் என்று அறிவிப்பு தொலைக்காட்சியில் வெளியாகியது. அதன்போதே, சனி மாற்றம் என்பது கிரகநிலை அல்ல, படத்தின் பெயர் என்பதை அந்தப் பெண் விளங்கிக் கொண்டார்.
கணவர், மனைவியைக் கடுமையாகத் திட்டிவிட்டு மீண்டும் தொழிலுக்கு சென்றுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

## நாடாளுமன்ற உறுப்பினராக கலா தொடர்ந்து இருக்கலாமா?

### விமல் எம்.பி. கேட்கிறார்



கொழும்பு, ஜூலை 7
முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினராக இனி இருக்க முடியுமா? இது தொடர்பில் சபாநாயகர் எடுக்கப் போகும் நடவடிக்கைஎன்ன? என்றுநாடாளுமன்றஉறுப்பினர் விமல் வீரவன்ச சபையில் நேற்று முன்தினம் வினா கேள்வி எழுப்பினார்.
அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதால் உணர்ச்சிவசப்பட்டு விஜயகலா மகேஸ்வரன் மீண்டும் புலிகள் வேண்டும் என்று கூறியுள்ளார். இந்தக் கருத்தினூடாகத்தான் அவர் அரசமைப்பை மீறியுள்ளார் என்பது தெட்டத் தெளிவாகியுள்ளது.
இவ்வாறான நிலையில் அவரால் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து இருக்க முடியுமா? தமிழ் மக்களின் ஏனைய பிரச்சினைகள், சாதாரண மக்களின் இன்னல்களைப்பற்றிப்பேசினால்எமக்குப்பிரச்சினையில்லை என்றாலும் பயங்கரவாதத்தை உருவாக்கமுனையும்கருத்தானதுபெரும் தவறு என்று கூறியுள்ளார். (4)



உ
முருகன் துணை

# காரைநகர் - க
# திக்கரை அருள்மிகு மு
# திருமஞ்ச வெள்ளோட்ட
## திருமஞ்ச வெள்ளே

### வாழ்த்துச் செய்தி




காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலயத்தில் புதிதாக நிறுவப்பட்ட அழகிய சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட திருமஞ்சத்தின் வெள்ளோட்ட நிகழ்வு இவ்வாலயத்தின் மகோற்சவ ஐந்தாம் திருவிழாவின் காலை உற்சவத்தில் இடம்பெறுகிறது. அன்றைய தினம் மாலை முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சகிதம் விநாயகர் தண்டாயுதபாணி ஆகிய சுவாமிகளோடு வீதியுலா வரவிருக்கின்றாகள்.

ஆலயங்களில் நித்திய பூஜைகளில் அல்லது நித்திய கருமங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய சிறிய தவறுகளையும் மற்றும் குறைகளையும் நிவர்த்தி செய்யும் விதத்தில் ஆலயங்களில் மகோற்சவ விழாக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த மகோற்சவ காலத்தின்போது இறைவன் தினமும் திருமஞ்சம், சப்பறம், தேர் போன்ற ஒவ்வொரு வகையான வாகனங்களில் வீதியுலா வருவர். ஒவ்வொரு வாகனங்களும் விதம்விதமாக அலங்கரிக்கப்படுவன. இவ்வாறான வேறு வேறான அலங்காரங்கள் இறைவனின் ஒவ்வொரு செயலைக் குறிப்பதாக அமையும். தேர்த்திரு விழாவின் போது இறைவன் சித்திரத் தேர் ஏறி மக்களின் மனங்களில் குடிகொண்டுள்ள ஆணவ மலங்களை நீக்கி அருள்பாலிக்கின்றான். அதே போன்று திருமஞ்ச பவனியானது இறைவனின் ஆனந்தக் களிப்பை வெளியிடுவதாக அலங்காரம் அமையும். திருமஞ்ச வெள்ளோட்ட நிகழ்வு சிறப்புற அமையவும் முருகப்பெருமானின் இடையறா அருள் வெள்ளம் அடியார்களுக்குக் கிட்டவும் எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டி இச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர் - வடமாகாணம்.**

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



ஆலயங்கள் மற்றும் அறநிலையங்கள் ஆன்மீகத் தேடலுக்கு ஆதாரமானவை. இங்கு நடைபெறும் கிரியைகள் மனிதனை இறைவன் மீது பற்றும் சமூகத்தில் ஆன்ம விழிப்புடன் நடைபெறும் உற்சவங்கள் அனைத்தும் ஆன்மீக வெளிப்பாட்டினையும் கலையம்சங்களையும் ரசிக்க வைக்கின்றன.

இதன் அடிப்படையில் அழகிய சிற்ப வேலைப்பாடு கொண்ட திருமஞ்சம் ஆலய அறங்காவலர் திருவாளர் P. உமாசங்கர் அவர்களின் அனுமதியுடன் திருவாளர் S.V. முருகேசு அவர்களின் குடும்பத்தினர் மற்றும் C.S.K. சிவபாதசுந்தரம் அவர்களின் குடும்பத்தினரது பெரும் நிதிப்பங்களிப்புடனும் இத் திருப்பணி பூரண மடைந்துள்ளது. ஆசாரியார் விஸ்வபிரம்மஸ்ரீ நடராசா சிவபாலன் அவர்களின் கைவண்ணத்தில் உரு வாக்கப்பட்டுள்ள திருமஞ்சம் அடியவர்களுக்கு திக்கரை முருகனின் அருள் கிடைப்பதற்கு அருமருந்தாக அமையும் எனக் குறிப்பிட்டு இப் போற்றுதற்குரிய நன்முயற்சியில் ஈடுபட்ட அனைவரையும் பாராட்டி திருமஞ்ச பவனி சிறப்புற எல்லாம் வல்ல முருகப்பெருமானின் பாதங்களை பணிந்து என் நல்வாழ்த்துக் களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

### வாழ்த்துரை



காரைநகர் என்னும் புண்ணிய பூமியானது தனக்கென தனித்துவமான பண்பாட்டு விழுமியங் களை அன்று தொட்டு இன்றுவரை பேணிப் பாதுகாத்து வருவது யாவரும் அறிந்த விடயமாகும். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற ஆலயங்கள் காட்சி அளிப்பதும் இங்கு வாழும் மக்கள் சைவ பாரம்பரியம் மிக்கவர்களாக வாழ்ந்து வருவதும் சமயத்தின் பெருமையினை பறைசாற்றி நிற்கின்றது. அந்த வகையில் களபூமி திக்கரை கிராமமக்கள் ஒன்றுகூடி முருகப் பெருமானுக்கு அழகிய சிற்ப வேலைப் பாடுகளுடன் கூடிய காண்போர் உள்ளத்தில் பக்தி பரவசத்தை ஏற்படுத்தும் வகையில் சிற்பியின் கைவண் ணத்தில் அழகிய திருமஞ்சம் வடிவமைக்கப்பட்டு வெள்ளோட்டம் காண இருப்பதையிட்டும் நடைபெற இருக்கும் மகோற்சவ 5 ஆம் திருவிழாவன்று எம்பெருமான் வள்ளி தெய்வானை சகிதம் அழகிய திருமஞ் சத்தில் எழுந்தருளி அடியவர்கள் இடர்களைய வேண்டியும் இவ்வரிய கைங்கரியத்தில் ஈடுபட்ட ஆலய நிர்வாகத்தினருக்கும் இவ் ஊர்மக்களுக்கும் இந்த நாட்டிலுள்ள அனைவருக்கும் அருட்கடாட்சமானது கிடைக்க எல்லாம் வல்ல முருகப்பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி நிற்கின்றேன்.

**திருமதி உஷா சுபலிங்கம்**
**பிரதேச செயலர், பிரதேச செயலகம், காரைநகர்.**

### வாழ்த்துரை



சைவமும் தமிழும் செழித்து வளரும் காரைநகர் திருவூர் புகழ்மிக்க ஆலயங்கள் பலவற்றை கொண்டதாகும். இவ்வூரிலே களபூமியில் அருளாட்சி செய்கின்ற முருகப்பெருமானுக்கு திரு மஞ்சம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் இறையருளால் இன்று நிறைவேறுவது கண்டு எல்லையில்லா ஆனந்தம் அடையும் அடியவர்களுடன் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

கலியுகக் கடவுள் எனப் போற்றப்படும் முருகப்பெருமானுக்கு திருமஞ்சம் அமைப்பதற்கு திக்கரை முருக மூர்த்தி கோயிலின் அறங்காவலர் அங்கீகாரமும், ஐந்தாம் திருவிழா உபயகாரர் சிவபாதசுந்தரம் அவர்களின் வேணவாகவும் பிரபல வர்த்தகர் எஸ்.வி. முருகேசு குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பும் இணைந்து வர திருவருள் கைகூடியமை திருமஞ்சத்தின் உருவாக்கத்திற்கு வழிசமைத்துள்ளது என லாம். மிக அழகுற அமைக்கப்பட்டுள்ள இத் திரு மஞ்சத்தை புகழ்மிக்க சிற்பாசிரியர் விஸ்வப்பிரம்மஸ்ரீ நட ராஜா சிவபாலன் உருவாக்கியுள்ளமை பெருமைக்குரியதாகும். மிகச்சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய இத்திருமஞ்சத்தை உருவாக்கிய சிற்பக்கலைஞர்கள் என்றும் புகழுக்கும், பெருமைக்கும் உரியவர் கள் ஆகும். திருப்பணி வேலைகள் தொடர்ந்தும் இக்கோயிலில் இடம்பெற வேண்டும்மென முருகப்பெரு மானின் பாதக்கமலங்களை இறைஞ்சுவதுடன் முருகப்பெருமானின் திருமஞ்ச வெள்ளோட்ட விழா கோலாகாலமாக இடம்பெற்று திருமஞ்சத்திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக இடம்பெற எல்லாம்வல்ல வள்ளி தெய்வானை உடனுறையும் திக்கரை முருகப்பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

**பேராசிரியர் க. தேவராஜா (முன்னாள் பீடாதிபதி)**
**முகாமைக்கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### செஞ்சொற் செல்வரின் வாழ்த்துச் செய்தி



அருள்வளம் நிறைந்த திருவூர் காரைநகர் திருக்கோயில் திருப்பணிக்கு தினம்தோறும் அள்ளிக்கொடுப்பவர்கள் இவ்வூர் பக்தர்கள். அதனால் காரைநகரில் உள்ள திருக்கோயில்கள் அனைத்தும் திருப்பணிகளால் செழிப்புற்று காட்சியளிக்கின்றது.

புகழ் பூத்த சிற்பக் கலைஞர் காரைநகர் விஸ்வ பிரம்மஸ்ரீ நடராசா சிவபாலன் அவர்களின் கைவண்ணத் தில் திருமஞ்சம் உருவாக்கப்பட்டமை பெருமைக்குரிய விடயமாகும். சிற்பக்கலைஞர் சிவபாலன் அவர்கள் சிறந்த ஆற்றலுடையவர். அவரால் உருவாக்கப்பட்ட ரதங்கள் இன்றும் பெருமையாக பேசப்பட்டு வருகி றது. இத் திருப்பணியில் பங்குகொண்டு உழைத்த அனைவருக்கும் முருகப்பெருமானின் அருட் கடாட்சம் நிறைவாகக் கிடைக்க வேண்டுகின்றேன். திக்கரையான் திருமஞ்சத்தில் பவனி வந்து எம்மண்ணுக்கு விடிவு தர பிரார்த்தித்து அனைவருக்கும் எனது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கின்றேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**ஸ்ரீ துர்க்காகதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

### ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி




திக்கரை முருகப்பெருமான் மீது அளவுகடந்த பக்தியும், பேரன்புடன், கேளிக்கை வினோ தங்கள் இன்றி அபிஷேகம் அலங்காரம் என்பவற்றை பக்திசிரத்தையுடன் மேற்கொள்வதுடன் பேர் புகழுக்காக அல்லாமல் கர்ணனை ஒத்ததாகவும் வலக்கை கொடுப்பது, இடக்கைக்கு தெரியாது போன்று திருப்பணிகளையும் 5 ஆம் திருவிழா உற்சவத்தை நிறைவேற்றும் சுட்டியர் பரம்பரை யினர் நிதியுதவியுடன் இவ்வருடம் முருகப்பெருமானின் அளப்பெரும் கருணையினால் அவன் அருளாலே அவன்தாள் வணங்கி என்ற மணிவாசகப் பெருமானின் திருவாசத்திற்கு அமைய இன்றைய நன்னாளில் எமது ஊரைச்சேர்ந்த சிற்பக்கலைஞர் விஸ்வப்பிரம்மஸ்ரீ நடராசா சிவபாலன் குழுவினரின் கைவண் ணத்தில் அழகிய திருமஞ்சம் அமைக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சி தருகின்றது. அந்தவகையில் இன்றைய பகல் திருமஞ்ச வெள்ளோட்டவிழா சிறப்பாக நடைபெறுவதற்கும், இரவு நடைபெறவுள்ள அழகிய திருமஞ்சத்தில் முருகப்பெருமான், விநாயகர், சிவசுவாமி சகிதம் வள்ளி, தேவசேனசமேதராய் எழுந்தருளி திருவீதியுலாவந்து அடியார்களின் பாவப்பிணிகளைப்போக்கி திருவருள்பாலிக்க வேண்டும். என்றும் எல்லாம் வல்ல திக்கரை திருமுருகப்பெருமானை வணங்கி ஆசிகள் கூறுவதுடன், இத் திருப்பணியை நிறைவுசெய்ய நிதியதவி புரிந்த சுட்டியார் பரம்பரை யைசேர்ந்த திருப்பணிக்குழுவினருக்கு என்ன சிந்தனைகளை அவர்கள் மனத்தில் கொண்டு பூர்த்திசெய்தார்களோ அவர்களின் எண்ணங்கள் ஈடேறவேண்டும் " நோயற்றவாழ்வு குறைவற்ற செல்வம்" அவர்கள் சகல செல்வங்களும் பெற்று சௌபாக்கியமாக வாழ்வதற்கும். இதை அழகாக அமைத்த சிற்பகலா வினோதன் நடராசா, சிவபாலன் ஆசாரியார் குழுவினரின் சிற்பக்கலை மேன்மேலும் வளரவேண்டும் என்றும் ஆசிகள் கூறி அமைகின்றோம்.

"லோகாசமஸ்த்த சுகினோபவந்து"

**ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ கு. சரவணபவானந்த சர்மா.**


### மகோற்சவ குருவின் ஆசியுரை



காரை நகர் மக்களின் குல தெய்வமாக விளங்கும் திக்கரை முருகப்பெருமானின் சந்நிதி, மூர்த்தி, தலம்,தீர்த்தமும்,அழகும், சிற்ப வேலைகளும் இறை அருள் ஒளியும் தன்னகத்தே கொண்டது. முருகப் பெருமானின் மகோற்சவ நன்நாளில் புதிதாக சிற்ப வேலைப்பாடுகளோடு மிகவும் கண்ணைக் கவரும் வகையில் (இந்திரு ரதம்) எனும் மஞ்சவாகனத்தை வடிவமைத்த உபயகாரர்கள் ஆலய மேலாண்மைகள் அடியவர்கள் அனைவருக்கும் முருகப்பெருமானின நல்லாசிகள் கிடைக்கப்பெற்று சகலரும் சகல சௌபாக்கியங்களுடன் வாழ எனது நல்லாசிகள் கூறுகின்றோம்.

**பிரதிஷ்டா ரத்தினம் சிவஸ்ரீ ஸ்ரீ. மதுசூதனக்குருக்கள்**

### ஆசியுரை



ஈழமணித்திருநாட்டின் சிகரம் என விளங்கும் யாழ். மாவட்டத்தின் காரைநகரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் திக்கரை முருகமூர்த்தி கோயிலில் திருமஞ்ச வெள்ளோட்ட சிறப்பு நாள்களிற்கு எமது ஆசியுரை "மஞ்ச" என்பது சமஸ்கிருத மொழியில் "ஆசனம்" எனப்பொருள் படும்.மகோற்சவம் மற்றும் உற்சவம் நிகழும் வேளைகளில் இறைவனை வீதியுலா வருவதற்கு எழுந்தருளச்செய்யும் ஆசனமே "மஞ்சம்" என்றாகின்றது. தேரினை நிகர்த்தாகவும் இராஜ கோபுரத்தினை பிரதிபலிக்கும் தன்மையிலும் மஞ்சம் எனும் சிறப்பு நூல் மரங்களில் இறைவனுக்குரிய வாகனங்களை எவ்வாறு அமைப்பது பற்றிய விவரங்களைக் கூறுகின்றது. நான்கு சில்லுகளுடன் கோபுரத்திற்குரிய ஆசன அமைவுடன் மேற்பகுதி சாலாகாரம் அல்லது சத்திராகார அமைப்பில் கோபுரத்தை நிகர்த்தன்மையில் கலை வனப்புடன் அமைந்து விளங்குவது. சிற்பிகள் வகுத்துக்காட்டும் முறையாக தொன்று தொட்டு பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்த ஆலயத்திற்கு திருமஞ்ச உலா நடத்துவது பெரும் பேறாகும். இம் மஞ்சம் அமைக்க உதவி புரிந்தவர்கள், பங்காற்றியவர்கள் யாவர்க்கும் காரைநகர் திக்கரை முருகமூர்த்திப் பெருமானின் கிருபா கடாட்ஷம் பெற்று உய்ய எமது நல்லாசிகள்.

**நல்லூர் சிவஸ்ரீ முத்துக்குமார வைகுந்த வரசக்குருக்கள்**

### அருளாசிச் செய்தி



இறைவனை தாங்கும் வாகனங்கள் வரிசையில் "திருமஞ்சம்" முக்கியமான சிறப்பான இடத்தினை வகிக்கின்றது. சிவபூமியாம் இலங்கைத்திருநாட்டின் கண் உள்ள ஆலயங்கள் சிலவற்றின் மஞ்சம் எனும் திருஉற்சவம் சிறப்பிடம் பெறுகின்றன. மஞ்சம் என்பது பொதுவழக்கில் அழைக்கப்பட்டாலும் சிற்பநூல்களில் உள்ள குறிப்புகளில் தேவவிமானம் என அடையாளப்படுத்துகின்றது. இந்திரவிமானம் எனவும் போற்றப்படுகின்றது. மஞ்சமானது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மூலயந்திரத்தினை ஒத்த வடிவமைப்பினை கொண்ட தன்மையினை கொண்டிருக்கும். மஞ்சத்தின் சிறப்பு என்னவெனில் அதன் கலையம் மிக்க சிற்ப வேலைப்பாடுகள். அனைவரும் இன்ப மகிழ்வுடன் இருக்கும் இச்சமயத்தில் நாமும் இணைந்து வசம்ச விருத்திக்கான முருகனின் திருவருள் பெருவருளாக அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என பிரார்த்தனை செய்கிறேன்.

**க.வைத்திஸ்வரக் குருக்கள்**

### மாவை ஆதீனகர்த்தாவின் ஆசிச்செய்தி



அருள்மிகு மாவை வடிவேலன் துணைகொண்டு காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்திப் பெருமானுக்கு செய்யப்பட்ட திருமஞ்ச வெள்ளோட்ட விழா இன்று 07.07.2018 இடம்பெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இன்னும் கலியுகவரதனாம் கந்தப் பெருமானது திருவருள் தங்களுக்கும் ஏனைய அடியார்கள் யாவர்க்கும் மிகையாக கிடைக்க எம் பெருமான் மாவை காங்கேய மூர்த்தியை பிரார்த்தித்து விழாக்கோலம் சிறக்கவும் அவன் அருட்கோலம் கண்டு யாவரும் மனம் குளிர வேண்டி எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**மகாராஜஸ்ரீ து.ச. இரத்தின சபாபதிக்குருக்கள்**

### திருமஞ்சத்திருப்பணி ஆசிச் செய்தி



முருகப்பெருமானின் பேரருளினால் திக்கரை முருகமூர்த்தி கோயிலுக்கு புதிதாக மஞ்சம் உருவாக்கப்பட்டிருக்கிறது. காரைநகரிலே சிறப்பாக மகோற்சவங்கள் நடைபெறும் ஆலயங்களிலே திக்கரை முருகமூர்த்தி ஆலயம் ஒன்றாகும். இந்த ஆலயத்தில் சண்முகப் பெருமான் கருணையே வடிவாக விளங்குபவர். பல சிறப்புக்கள் உண்டெனினும் மஞ்சத்திருவிழா நடைபெற இருப்பது ஒரு தனிச்சிறப்பாகும். முருகபெருமான் மஞ்சத்தில் ஆரோகணித்து வீதிவலம் வலம் வரும் கண்கொளாக் காட்சியினை காரைநகர் மக்கள் காண இருப்பது அவர்கள் செய்த தவப்பயனே ஆகும். இந்த ஆலயத்தில் நடைபெற்ற மூன்று கும்பாபிசேகங்களில் பங்குபற்ற முருகப்பெருமான் எனக்கு அருளியிருந்தார். அந்த தொடர்பில் இப்போது நடைபெறும் மஞ்சப் பெருவிழாவின் மூலம் பக்தர்கள் எல்லோரும் இஷ்ட சித்திகளைப் பெற்று சிறப்புடன் வாழ ஆசி கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்**
**இணுவில் காயத்திரி பீடம்**

### சந்நிதாச்சாரியாரின் ஆசியுரை



சைவத்தின் பாற்பற்றுடைய மாந்தர்கள் நிறைந்து வாழும் பதியாம் காரைநகர் அம்மையப்பன் நடுநாயகமாகவும் பிள்ளையார் முருகன் முதலான பரிவார தெய்வங்கள் தனித்தனி சந்நிதானங்களாக எழுந்தருளி சிவலோகமாக காட்சி தருகின்ற காரைநகரின் கண்ணே பக்திக்கும் தான தர்மங்களுக்கும் களபூமி திவ்ய கிராமத்தின் திக்கரை முருகமூர்த்தி பெருமானுக்கு அழகிய சிற்பவேலைப்பாடு கொண்டு திருமஞ்சம் அமைக்கப்பெற்று இன்று வெள்ளோட்டம் நடைபெறுவது அனைவருக்கும் கிடைத்த புண்ணிய பேறாகும். இப்புண்ணியமான பணியில் ஈடுபட்ட ஆயைத்தினர், உபயகாரர்கள், தொண்டர்கள், அடியார்கள் மற்றும் வடிவமைத்த காரை ஊர் கலைஞனுக்கும் ஆலயகுருமார்களுடன் சேர்ந்து ஆசிர்வதிக்கின்றேன். விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**சந்நிதாச்சாரியார், சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்**
**குரு முதல்வர் - வீணாகான குருபீடம் - சித்தன்கேணி.**

### ஆசிச் செய்தி



இன்று முற்பகல் நடைபெறுகின்ற திருமஞ்ச வெள்ளோட்ட விழா சிறப்பாக நடைபெற முருகப்பெருமானை பிரார்த்தனை செய்து நல்லாசிகள் கூறுவதுடன், இரவு நடைபெறுகின்ற திருமஞ்ச திருவிழாவில் அடியார்கள் கலந்துகொண்டு திருமஞ்ச வடம்பிடித்து இழுத்து தங்கள் பாவவினைகளை போக்கி முருகப்பெருமானின் திருவருளைப் பெறவேண்டும் என்று நல்லாசிகள் கூறிஅமைகின்றோம்.

"லோகா சமஸ்த்தா சுகினோபவந்து"

**பிரதமகுரு பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி ஆலயம்**
**சிவஸ்ரீ சோ.கு. சண்முகராஜக் குருக்கள், திக்கரை, களபூமி, காரைநகர்**

### அருளாசிச் செய்தி



திக்கரையில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப்பெருமானுக்கு அழகான



திருமஞ்சத் திருப்பணி சா
திரு.ச.சுகந்த

இந்த பூலோகத்தில் சொர்ண தீவு என்று சொல்லப்படு
அமைந்துள்ள காரைநகர் சைவமும் தமிழும் இறைப
வள்ளல்களும் கல்விமான்களும் தர்மவான்களும் வ
வரும் புண்ணிய பூமியில் சூரியன் உதிக்கின்ற திசை
வரம் தந்தரும் பொருட்டு திக்கரை பதியிலே கலியுக
சமேத முருகப் பெருமானாக வீற்றிருந்து அடிய
கொண்டிருக்கிறான். அவ்வகையில் முருகப் பெரும
பெருவிழாவானது ஆடி அமாவாசையைத் தீர்த்தே
தினங்கள் சிறப்பாக நடைபெற்று 11 ஆவது நாள் பூங்க
நிறைவடைகின்றது. அவ்வாறு இவ் ஆலயத்தில் கைல
திருவிழா, வேட்டைத் திருவிழா, பெரிய சப்பரம், தே
பூங்காவனம் என்பன சிறப்பாக நடைபெறுவதுடன்
இருந்தது. சுட்டியார் பரம்பரையைச் சேர்ந்த இளம்
முருகனுக்கு அழகிய திருமஞ்சம் அமைக்க வேண்டும்
அதை தீவிரமாக செயற்படுத்த முதலில் இத் திருப்பணி
பெற்றுக்கொள்ள திரு S.V.M குணரத்தினம் அவர
பூரண சம்மதத்தைத் தெரிவிக்க பின்னர் ஐந்தாம் திரு
சிவபாதசுந்தரம் அவர்களும் பூரண ஒத்துழைப்
வழங்குவதாகத் தெரிவித்தனர். இத்திருப்பணியை செ
உமா சங்கர் அவர்களும் தனது பூரண சம்மத
இத்திருப்பணியானது 2017ஆம் ஆண்டு ஆவணி மா
வழிகாட்டலுடன் சிற்பாசாரியார் விஷ்வ பிரம்மஸ்ரீ நட
ஒப்பந்தத்தைச் செய்து ஆரம்பித்தோம். மேலும் இதற்க
பரம்பரையைச் சேர்ந்தவர்களின் நிதியையும் பெற்
வேலைப்பாடு கொண்ட திருமஞ்சத்தை அமைக்க எண
காரைநகரில் எவ்வாலயத்திலும் திருமஞ்சம் இல்லை
நீங்கியது. அழகிய சிற்ப வேலைப்பாடு கொண்ட இ
அமைத் துத்தந்த சிற்பாசாரியார் நடராஜா சிவபா
நிதியுதவியினை வழங்கிய S.V. முருகேசு குடும்பத்தின
குடும்பத்தினருக்கும் எனக்குப் பூரணமான ஒத்துழை
அவர்களுக்கும் என்னோடு தினமும் இப்பணியினை
நின்று செயற்பட்ட துடிப்பான இளைஞர்களான திரு.
மேலும் இத்திரு மஞ்சத்தை அமைப்பதற்குப் பூரண
ஆலய அறங்காவலர் திரு. P.உமாசங்கர் அவர்களுக்கு
ஈடுபட்ட சகலருக்கும் முருகப் பெருமானுடைய திரு
செய்வதோடு அடியவனா கிய நான் பள்ளிப் பரு
சரியைத் தொண்டினைச் செய்யும் வாய்ப்பினை பெ
திருப்பணி கைங்கரியத்தை முருகன் திருவருளால்
இனிதே நிறைவடைந்ததை யிட்டு மனம் பூரி
வேளாண்மை வீடு வந்து சேராது" எனும் முது
அடியவனாகிய சிறியவன் வாழ்த்துரையினைச் செய
ஆனால் இத் திருப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கு
டக்க முருகன் திருவருள் கைகூடும் என்பது நிச்சயம் எ

திருமஞ்சம் அமைக்கப்பட்டு இன்று வெள்ளோட்ட நிகழ்ச்சி காண
தெரியாமல் இருந்த மக்களை கரை காட்டி தன்வசப்படுத்திய முருக
சிறப்புச் செய்யும் வகையில் மஞ்சம் அமைத்து முருகனை அமர்த்தி
எல்லாம் தந்த இறைவனுக்கு தேர், மஞ்சம், சப்பறம், கைலா
இறைவனை எழுந்தருளச் செய்வது சமயத்தின் வழிமுறையா
திருமஞ்சம் ஆகும். தேர் பகற்பொழுதிற்கும் சப்பறம் இரவுப் பொழுதி
சமர்ப்பணம் செய்து மஞ்சத்தை உருவாக்கிய சிற்பக் கலை
அறங்காவருக்கும் உபயகாரர்களுக்கும் இறையாசிகள் கிடைப்பதாக
"என்றும் வேண்டும் இன்ப அ
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக கு**



திருமஞ்ச தரிசனம் கோ
யாழ்ப்பாண நாட்டின் மேற்பால் அமைந்து கவினுடன் வி
பதியாம். மருதம், நெய்தல் நிலங்களைக் கொண்டு ம
அருட்பதிகள் பலவற்றுள் வரலாற்றுப் பெருமை மிக்கது திக்கரை மு
ஆகும்.
திருமஞ்சம் செய்வதும், அதைச் செய்விப்பதும் பார்த்து மகிழ்வ
கூறுகின்றது. இந்த வகையில் காரைநகர் களபூமி திக்கரை முருக
பரிவார மூர்த்திகளுக்கும் திருமஞ்சம் கிடைக்கப் பெற்றது மிகவு
வெள்ளோட்டம் காண இருப்பது இப்பகுதி மக்களுக்குக் கிடைத்த திரு
இத்தகைய நன்நாளில் சகல இந்துக்களும் மனநிறைவு கொ
வரலாற்றில் புதிய ஓர் அத்தியாயமாக இடம்பெறக் கூடிய அ
ஒன்றிணைந்த ஏறத்தாள இரண்டு ரூபாய் மதிப்பிலான அரும்பெ
ஆலய ஐந்தாம் திருவிழா உபயகாரர் திரு C.S.K. சிவபாதசுந்தரம் அ
முருகேசு குடும்பத்தினர் ஆகிய இருவரின் பெரும் நிதி உதவியுடனு
முருகனடியார்களின் நிதிப் பங்களிப்புகள், சிற்ப வேலைகளை மிகச்
பாராட்டுவதுடன் ஆலயத்தைச் சிறப்பாக நடத்த இப்பகுதி மக்கள் அ
என இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன். முருகப் பெருமா
தின் பெருமைக்கு அணி செய்யும் சிறப்பான அணிகலன்களுள் ஒன்
மாக நிமிர்ந்து நின்று அடியார்களுக்கு அருள்பாலிக்கும் குமரக்கோ
ஆலயம் மிளிர நாம் அனைவரும் அந்தக் கலியுக வரதனி
வேண்டுவோமாக.

## திருமஞ்சத் திருப்பணி சிறப்புற வாழ்த்துவோர்:

**S.V. MURUGESU**
No:154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021 492 5831 / 021 222 8899

**C.S கனகரத்தினம்**
சிவா வர்த்தக நிலையம்
102 (296), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:077 674 8369 Viber: 077 249 8370

**S. சிவஞ**
எரிபொருள் நிரப்பு
519/C, ஜெயந்தி மாவத்தை



## வியப்பில் ஆழ்த்திய விநோதத் திருமணம்

கொழும்பு, ஜூலை7
இலங்கையில் நடந்த விநோதத் திருமண நிகழ்வொன்று மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.
உலகக்கிண்ணகால்பந்தாட்டபோட்டிகள்ரஷ்யாவில் நடைபெற்று வருகின்றன.
இதன் காரணமாக உலகமெங்கும் உலகக் கிண்ண கால்பந்தாட்ட இரசிகர்கள் கொண்டாட்டத்தில் மூழ்கியுள்ளனர். இலங்கையில் உள்ளவர்களும் கால்பந்தாட்டப் போட்டிகளுக்குத் தீவிர இரசிகர்களாக மாறியுள்ளனர்.
கால்பந்து மீதான தீவிரத்தை வெளிப்படுத்தும் வகையில் ஜோடி ஒன்று தமது திருமண நிகழ்வை விநோத முறையில் நடத்தியுள்ளது. கலாசார ஆடைகளை அணியாது, கால்பந்து போட்டியாளர்களாக மைதானம்ஒன்றில்வைத்துத்திருமணம்செய்துகொண்டுள்ளனர். திருமணம்செய்துகொண்டவர்கள்தொடர்பில் தகவல் வெளியாகாத நிலையில் அவர்களின் ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன. (ரி2)

# விசாரணைகள் முடிந்ததும் நீதியை நிலை நாட்டுவேன்

## உறுதியளிக்கிறார் கருஜயசூரிய



கொழும்பு, ஜூலை7

விடுதலைப் புலிகள் மீண்டும் வர வேண்டும் எனக் குறிப்பிட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்துத் தொடர்பில் சட்டமா அதிபரின் விசாரணை நிறைவெய்தி அறிக்கை கிடைத்ததும் நீதியை நிலைநாட்டுவேன்.

இவ்வாறு சபாநாயகர் கருஜயசூரிய சபையில் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
விஜயகலா மகேஸ்வரனின் விவகாரம்தொடர்பாகநான்சட்டமாஅதிபரின் அவதானத்துக்குக் கொண்டு வந்தேன். இந்த விடயம் குறித்து சட்டமா அதிபரினால் சிறப்பு விசாரணை யொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதில், என்னால்சர்வாதிகாரியாகச் செயற்பட முடியாது. கட்சித் தலைவர்களின்அனுமதியுடனேதான் நான்எனதுநடவடிக்கைகளைமுன்னெடுத்து வருகின்றேன். ஆகவே சட்டமா அதிபரின் விசாரணை முடிவடைந்து அறிக்கைகிடைக்கப்பெற்றதும்நீதியை நிலைநாட்டுவேன்-என்றார். (ரி2)

## நிறைவேற்று அதிகாரத்தால் கலாவைச் சிறையிடுங்கள்

கொழும்பு, ஜூலை7
விடுதலைப் புலிகள் தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்தினால் இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து பதவி விலகிய விஜயகலா மகேஸ்வரனைக் கைதுசெய்யுமாறு, சிங்கள அமைப்பொன்று அரசதலைவருக்குக் கடிதம் கையளித்துள்ளது.
அரசதலைவர்செயலகத்தில்வைத்து, ராவயஎன்ற சிங்களஅமைப்பினால், நேற்றுக்கடிதம்கையளிக்கப்பட்டதாகஅந்தஅமைப்பின்செயலர்மகல்கந்தே சுகந்ததேரர்தெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது,
விடுதலைப் புலிகள் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டு, இராஜாங்க அமைச்சுப்பதவியிலிருந்து பதவி விலகினார் விஜயகலா.
இவரை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டுமென இன்று (நேற்று) காலை அரசதலைவர்செயலகத்தில் கடிதமொன்றைக் கையளித்தோம்.
அரசதலைவர்தனதுநிறைவேற்றுஅதிகாரத்தைப் பயன்படுத்தி இவ்வாறுபயங்கரவாதத்தைத்தோற்றுவிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு அரசமைப்புக்கு, எதிராகச் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரான விஜயகலா மகேஸ்வரனை கைதுசெய்ய பொலிஸ்மா அதிபருக்கு அரச தலைவர்உத்தரவுபிறப்பிக்கவேண்டுமெனக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளோம்.
தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்த இவரைக் காலம் தாழ்த்தாது உடனடியாகக் கைதுசெய்ய வேண்டிய நடவடிக்கைகளை நாட்டின் தலைவர் என்ற வகையில் அரச தலைவர் மேற்கொள்ள வேண்டும் என்றார். (ரி2)

## ரஞ்சன் ராமநாயக்க செய்தது துரோகமே

### சினக்கிறார் விஜயகலா



கொழும்பு, ஜூலை7
ரஞ்சன் ராமநாயக்க எனக்கு செய்தது துரோகம். இப்படியானவர்கள் தான் இந்த நாடாளுமன்றில் இருக்கிறார்கள்.
இவர்களின்கருத்தை எப்படி நாடாளுமன்றின் உள்ளேயும், வெளியேயும்செவிமடுக்க இயலும்.
இவ்வாறு, நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
"பிரதிஅமைச்சர்ரஞ்சன்ராமநாயக்க ஊடக சந்திப்பை நடத்திக் கொண்டு உங்களுடன் (விஜயகலா) தொலைபேசியில் பேசும் போது, அந்த உரையாடலை அவுட்ஸ்பீக்கரில் ஊடகங்களுக்கு வழங்கிக்கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியுமா?" என்று தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,
எனது உரையாடலை அவர் ஊடகங்களுக்கு வழங்க வேண்டிய தேவையில்லை. பிரச்சினைகள் முடிந்த பின் நான் தொலைக்காட்சிக்கு நேரடியாக வந்துள்ளேன்.
ஊடகங்கள் வாயிலாகவே எமது பிரச்சினையை வெளியில் கொண்டு வரமுடியும். அதற்காக ரஞ்சன் ராமநாயக்க ஊடகத்துக்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. சக நாடாளுமன்ற உறுப்பினர் என்றவிதத்தில் சிநேகித அடிப்படையில் அவர் அழைத்த தொலைபேசிஅழைப்பைசெவிமடுத்திருந்தேன்.
தொலைபேசியில் அழைப்பைபேசிமுடித்துதுண்டிக்கும் வரையில், இவர் நேரடியாக ஊடகங்களின் ஊடாக இருந்து கொண்டு தொலைபேசியை அவுட்ஸ்பீக்கரில் வைத்துக் பேசியது எனக்குத் தெரியாது.
அவர் அழைப்பைத் துண்டித்த பின்னர், எனக்கு வந்த அழைப்பின் ஊடாகவேகேட்டறிந்தேன். பின்னர்நான்அந்தக் காணொளிப் பதிவைப் பார்த்திருந்தேன்.
இவர் ஒரு பெண்ணுக்குத் துரோகம் செய்திருக்கின்றார். அதுவும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்குஎப்படித்துரோகம் செய்திருக்கின்றார் என்பதையே இந்த உலகம் அறிந்திருக்கின்றது.
இப்படியானவர்கள் தான் இந்த நாடாளுமன்றில் இருக்கிறார்கள். இவர்களின் கருத்தை எப்படி நாடாளுமன்றின் உள்ளேயும், வெளியேயும்செவிமடுக்க இயலும்.
நாடாளுமன்றஉறுப்பினராகிய ரஞ்சன்ராமநாயக்கமுற்றுமுழுதாக நூற்றுக்கு 52 வீதமாகப் பெண்கள் வாழுகின்ற இடத்திலேயேதுரோகம்செய்திருக்கின்றார்என்பதைநான்உண்மையில்வெளியில்கொண்டுவரவிரும்புகின்றேன்.
இதற்கான நடவடிக்கையை எதிர்வரும் காலங்களில் நாடாளுமன்றில் சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டுவந்து எனது சிறப்புரிமை மீறலைச் சுட்டிக்காட்டுவேன்.
என்னுடைய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகத்தான் இருக்கின்றது. அதை நான் உரிய இடங்களுக்குச்சமர்ப்பிப்பேன். என்றார்.
சில தினங்களுக்கு முன்னர் பிரதிஅமைச்சர்ரஞ்சன்ராமநாயக்க கொழும்பில் ஊடகசந்திப்பொன்றைநடத்தினார்.
இதன்போதுவிஜயகலாமகேஸ்வரனுக்கு அழைப்பெடுத்து அந்தஅழைப்பைஅவுட்ஸ்பீக்கரில் விட்டு உரையாடியிருந்தார். (ரி2)

## பொலிஸ்மா அதிபருக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஜூலை7
பொலிஸ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பதவி உயர்வு இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. என்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைக் கையளித்துள்ளார் கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித சிறிவர்த்தன.
மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சார்பில் சமூகமளித்திருந்தசட்டத்தரணிபி. துஷார குணவர்த்தன, ஆணைக்குழுவிடம் முறைப்பாட்டைக்கையளித்தார்.
அவர்தெரிவித்ததாவது
பொலிஸ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பதவி உயர்வை இதுவரையில் நடைமுறைப்படுத்தாது காலம் தாழ்த்தியமைக்கு எதிராகநாம்இலஞ்சஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைக் கையளித்தோம்.
இலஞ்ச ஊழல் சட்டத்தின் 70 ஆம் அத்தியாயத்தின் கீழ் இம் முறைப்பாட்டைக் கையளித்தோம்.
இதில், மூத்த பொலிஸ் அத்தியட்சகர்திணைக்களத்தில் அனுபவித்த அனைத்து இன்னல்கள் குறித்தும், அதற்கெதிராக எடுக்கப்படாதநடவடிக்கைகள் குறித்தும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். அண்மையில் விடுதி யொன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர், சட்டம்என்பதுஅனைவருக்கும்சமமானதுஎனவேஎத்தரப்பினராலும் நியாயமான தீர்ப்பு வழங்கப்படும் எனக் கூறியிருந்தார். அந்தக்கூற்றின் மீதுள்ள நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் இவ்வாறு முறைப்பாட்டைக்கையளித்துள்ளோம். விரைவில்இதற்கானவிசாரணைகள் அவரால் முன்னெடுக்கப்படும் என நம்புகின்றோம் - என்றார். (ரி2)



## நாடக விழாவுக்கான காசோலை அரசதலைவரால் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம்ஜூலை7
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையும், "வெறுவெளி அரங்கக் குழுவும்" இணைந்து ஏற்பாடு செய்யும் நாடக விழாவுக்கான நிதிஅரசதலைவரால் வழங்கப்பட்டது.
இதற்கானகாசோலைஅரசதலைவர் அலுவலகத்தில் வைத்து, நுண்கலைத்துறை மாணவனிடம் கடந்த 4ஆம்திகதி கையளிக்கப்பட்டது.
விழாவுக்கானநிதியைத்தருமாறுநுண்கலைத்துறை மாணவர்கள் அரச தலைவரை கோரியதன் அடிப்படையில் அந்த நிதி அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்டது.
நுண்கலைத் துறையின் வெறுவெளி அரங்கக் குழுவின் தலைவரும் நுண்கலைத்துறையின் மாணவனுமாகிய ச. சுஜீவனிடம் இதற்கான காசோலை வழங்கப்பட்டது. (ரி4,8)

# மரண அறிவித்தல்



தோற்றம் 07 12 1950

மறைவு 05 07 2018

## அமரர் திரு. நாகலிங்கம் தயானந்தன்

பட்டயக் கணக்காளர்,
முன்னாள் மக்கள் வங்கி உதவி பொதுமுகாமையாளர்
(வடமாகாணம்)

யாழ்ப்பாணம் கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தயானந்தன் அவர்கள் 05.07.2018 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலம்சென்ற திரு. திருமதி நாகலிங்கம் பொன்னம்மாள் அவர்களின் தவப்புதல்வனும் திரு. திருமதி கதிரவேலு மகேஸ்வரி அம்மாவின் மருமகனும்

தனபூபதியின் அன்புக் கணவரும், அஞ்சனா, அனோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தயாநிதி வரதராஜா, திருமதி தயாரதி ஆனந்தநாகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கன்கராஜா, திருமதி செல்வராணி, திருமதி லக்ஷ்மிதேவி, திரு. கந்தஞானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.07.2018 அன்று மஹிந்த மலர்சாலையில் பி.ப.12.00 மணி - 8.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு அதைத் தொடர்ந்து 06.07.2018 அன்று யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம்வீதி 48/5 அன்னாருடைய இல்லத்தில் வைக்கப்பட்டு 08.07.2018 காலை 8.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கோம்பயன் மயானத்தில் 10.00மணிக்கு தகனம் செய்யப்படும், என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல் மனைவி, பிள்ளைகள்
தொடர்புகளுக்கு : 0771 668 096, 0779 506 639


**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை பண்டத்தரிப்பு வீதியில்
யூனியன் கல்லூரிக்கு மிக அருகில் காணி உடனடி விற்பனைக்கு உண்டு. நீங்கள் விரும்பிய பரப்பளவின் படி பிரித்துக்கொடுக்கப்படும்.
(தரகர் வேண்டாம்)
077 690 3287

**ஆசிரியர் தேவை**

Year 9, Year 10 மாணவர்களுக்கு English Medium Science, ICT பாடங்களுக்கு ஆசிரியர் தேவை.
077 852 0472

**தென்னங்காணி விற்பனைக்கு**

வெள்ளாம் போக்கட்டி கொடிகாமத்தில் அமைந்துள்ள மூன்றரை ($3\frac{1}{2}$) ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்கு உண்டு.
077 843 5336


# மரண அறிவித்தல்

## கதிரவேலு தர்மராஜா (மகேந்திரன்)



புளியங்கூடலை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தர்மராஜா 01.07.2018 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - விசாலாட்சி தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான துரைராஜா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரின் பாசமிகு கணவரும், கீதாஞ்சலி (கனடா), கஜேந்திரன் (கனடா), கஜரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற சொர்ணகாந்தி மற்றும் கமலாதேவி (வவுனியா) சண்முகராஜா (சண் கதிரவேலு கனடா) ஆகியோரின் அன்பு சகோதரரும், நவநீதன் (கனடா), சர்மிளா (கனடா), கஸ்தூரி (கனடா) ஆயோரின் அன்பு மாமனும், கந்தசாமி (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற வடிவேலு, மற்றும் இரகுபதி (ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர்), நிர்மலாதேவி ( கனடா), பவளராணி, கோமதியம்மாள் (கனடா), சண்முகராஜா (ஜேர்மனி), குலேந்திரன் (கனடா), லோகநாதன் (டென்மார்க்), விஜயராஜா (சுவிஸ்), விஜயரெட்ணம் (லண்டன்), கிருபாகரன் (லண்டன்), சிறிஸ்கந்தராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிலன், நிவேன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.07.2018) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். அன்றையதினம் 29, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சண் கதிரவேலு (கனடா + 1416 876 0923)
இராஜேஸ்வரி (கனடா + 1905 913 2184)
செல்வநாயகி (இலங்கை -021 222 6763)

தகவல்:
க.நிமலன்
077 036 4806
(cs 18037) (13.17)

# கேள்வி அறிவித்தல்

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை-2018

1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையானது. குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதியினை கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டத்திற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. தலைவர், பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை . புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு. வடமாகாணம். தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்விகோரப்படுகின்றது .ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. வேலைக்குரிய விலைக்குரிய விலை கேள்விதாரர் உழவு இயந்திர மின்னொட்டு வேலைக்கான வியாபார பதிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை. புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு தொலைபேசி: -021-2290851 தொலைநகல்: 0212061640 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் 23.07.2018 வரை காலை 09.00 மணிமுதல் மாலை 04.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் செயலாளர். புதுக்குடியிருப்பு பிரதேசசபை. புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு எனும் இடத்திலிருந்து 07.07.2018ம் திகதியிலிருந்து 23.07.2018 வரை வேலை நாள்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர். புதுக்குடியிருப்பு பிரதேசசபை. புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு எனும் முகவரிக்கு 23.07.2018 ம் திகதி மாலை 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
   கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 63 (அறுபத்து மூன்று – 25.09.2018) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. மோட்டர் வாகனப்பதிவு திணைக்களத்தில் பதிவு செய்து தருதல் முக்கியமாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/44(04)//PS D/G W-05/2018 | குப்பை சேகரித்தலுக்கான உழவு இயந்திரப்பெட்டிகள் தயாரித்தல் - 02 (இரு வேறு கலர்களில்) | 0.686 | 2 மாதம் | | 7000.00 | 23.10.2018 |

11. கேள்விகோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 16.07.2018 ஆம் திகதி பி.ப 02.30 மணிக்கு புதுக்குடியிருப் பிரதேசசபை, புதுக்குடியிருப்பு. முல்லைத்தீவு அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ. மீள்கேள்விகோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

செ.பிறேமகாந்
தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை,
முல்லைத்தீவு.
06.07.2018

(in.7223) (13.17)


SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் ▶ 825
சீட்டிழுப்பு திகதி ▶ 2018.07.05 வியாழக்கிழமை

L 10 18 28 69

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 44,416,904/-

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

# வேலையாள் தேவை

## Rapid Pick Taxies
## Enterprise (Private) Limited

சகலருக்கும் சேவை - சகலருக்கும் வருவாய்

வவுனியாவில் முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை. நேர்முகத் தேர்வுகள் 09.07.2018 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிமுதல் நடைபெறும்.

- க.பொ.த.சாதாரணதரம் (O/L)
- க.பொ.த.உயர்தரம் (A/L) படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

(CS/18052) (11.17)

076 443 5299, 077 799 4445
No. 27/A, UC Cross Mannar Road, Vavuniya.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நடராஜா துரைராஜா

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே!
ஓராண்டு கடந்தாலும்
ஆறவில்லை
எங்கள் துயரம் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

மண்ணில் 03.07.1932
விண்ணில் 18.06.2017

குடும்பத்தினர்.
077 323 3136
கட்டிமேடை, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

திதி:- அபரபட்ச நவமி

# ஆயிரத்து 18 ஏக்கர் காணி பாதுகாப்புப் படைகளிடம்

*கிளி. மாவட்டச் செயலகம் தகவல்*

கிளிநொச்சி, ஜூலை 7
கிளிநொச்சி மாவட்டத்தில் திணைக்களங்களுக்குரிய ஆயிரத்து 18 ஏக்கர் காணி பாதுகாப்பு படைகளின் பயன்பாட்டில் காணப்படுவதாகமாவட்டச்செயலகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் திணைக்களகங்களுக்குரிய காணிகள் பாதுகாப்பு படைகளின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன.

அதனடிப்படையில்கரைச்சி பிரதேசசெயலாளர்பிரிவில் இராணுவத்தினர்35ஏக்கர் காணியையும் சிவில் பாதுகாப்புத்திணைக்களத்தினர் 415 ஏக்கர் காணியையும் பயன்பாட்டில் வைத்துள்ளனர்.

அதேவேளை, கண்டாவளைப்பிரதேசசெயலாளர் பிரிவில் 20 ஏக்கர் காணியையும்பூநகரிபிரதேசசெயலாளர் பிரிவில் 479 ஏக்கர் காணியையும்இராணுவத்தினர் பயன்பாட்டில் வைத்துள்ளனர். மேலும் பச்சிலைப்பள்ளிபிரதேசசெயலாளர் பிரிவில் இராணுவத்தினர்68ஏக்கர்காணியையும் பொலிஸ் 0.5 ஏக்கர் காணியையும் கடற்படை 0.5 ஏக்கர் காணியையும் வைத்துள்ளனர்.

இவற்றில் விவசாயத் திணைக்களத்துக்குரிய 430 ஏக்கரும் நீர்ப்பாசன திணைக்களத்துக்குரிய 15 ஏக்கரும் பரந்தன் இராசாயனகூட்டுறவுதுறைக்குரிய 15ஏக்கரும்கரைச்சிபிரதேச செயலகத்துக்குரிய 5 ஏக்கரும் மரமுந்தரிகை கூட்டுத்தாபனத்துக்குரிய479ஏக்கரும் தேசிய உப்பு உற்பத்தி துறையின் 73 ஏக்கரும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மற்றும் கிளாலி பகுதியில் ஒரு ஏக்கர் காணியும் என மொத்தமாக ஆயிரத்து 18 ஏக்கர் திணைக்களக் காணிகள்பாதுகாப்புப்படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன என்று அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றைவிடுவிக்கவேண்டும் எனக் கடந்த வாரம் கிளிநொச்சிக்கு வருகை தந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம்எடுத்துக்கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

*சுதாகரனை விடுவிப்பது தொடர்பில்*

# அரசதலைவர்மைத்திரியிடம் உருப்படியான பதிலில்லை

**யாழ்ப்பாணம், ஜூலை 7**

**அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் விடுதலைக்குச் சரியான சட்ட நடைமுறைகளைப் பின்பற்றியே செயற்படுவது என்று தீர்மானிக்கப்பட் டுள்ளது. எனவே இது தொடர்பில்தீர்மானம்எடுத்தபின்னர்தான் மேலதிகத் தகவல்கள் கூறப்படும் என்று அரசதலைவரின் சட்டத்துக்குப் பொறுப்பான செயலரால் எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.**



இதுபற்றியகடிதம்கடந்த20ஆம்திகதியிடப்பட்டு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு மாகாண கல்விச் சமூகத்தினரால் மூன்றுலட்சம்கையெழுத்துக்கள்சேகரிக்கப்பட்டன. அவை அடங்கிய மனு கடந்த 18ஆம் திகதி கிளிநொச்சியில் வைத்து அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

வடக்குமாகாணகல்விஅமைச்சர்தன்னுடைய கோரிக்கைக் கடிதத்தையும் மனுவுடன்இணைத்துமைத்திரியிடம் கையளித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, கோரிக்கைக்கான அரசதலைவரின் பதில் கிடைக்கப்பெற்றுள்ளது.

கடிதத்தில், "அரசதலைவருக்கு இது தொடர்பில் பல வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. இது விடயம் தொடர்பில் ஏற்கனவே உரியகரிசனை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் சரியான சட்ட நடைமுறைகளைப்பின்பற்றி செயற்படுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்த விடயம் தொடர்பாகதீர்மானம்மேற்கொள்ளப்பட்டதும் மேலதிகதொடர்புகள்மேற்கொள்ளப்படும்" என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல்கைதி ஆனந்தசுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி பலதரப்பட்டதமிழ்மக்களாலும்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. பொது அமைப்புக்கள், ஊர் மக்கள் எனப் பல இடங்களில்சேகரிக்கப்பட்டலட்சக்கணக்கான கையெழுத்துக்கள் அடங்கிய மனுக்கள் கடந்த காலங்களில் உரியவர்களிடம்வழங்கப்பட்டன. இந்த நிலையின் இவ்வாறானதொருபதில்தமிழ்மக்களிடையே ஒருவித சலனத்தைஏற்படுத்தியுள்ளது. (எ)

# நவீன இயந்திரம் மூலம் பனம்வெல்ல உற்பத்தி

*பனை அபிவிருத்திச்சபை ஆரம்பித்தது*

யாழ்ப்பாணம், ஜூலை 7
நவீன ரக இயந்திரம் மூலம் பனம் வெல்லத்தை உற்பத்தி செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது பனை அபிவிருத்திச் சபை.

அதற்காக ஏழு மில்லியன் ரூபா செலவில் நவீனரக இயந்திரம்ஒன்றைச்சபைகொள்வனவுசெய்துகாரைநகரில்உள்ள பனம்பொருள்உற்பத்திநிலையத்தில்பொருத்தப்பட்டுஅதன் ஊடாக பனை வெல்லம் உற்பத்தி செய்யும் பணி கடந்த செவ்வாய்க்கிழமைசம்பிரதாயபூர்வமாகஆரம்பித்துவைக்கப்பட்டது என்று சபையில் விரிவாக்கல் முகாமையாளர் கே. கோ. பாலகிருஷ்ணன்தெரிவித்தார். நிகழ்வில்சபையின்தலைவர் மருத்துவர் இ. சிவசங்கர் முதன்மைவிருந்தினராகக்கலந்துகொண்டு இயந்திரம்மூலமான பனைவெல்ல உற்பத்தியை ஆரம்பித்து வைத்தார்.

இருநூறு லீற்றர் பதனீரை கொண்டு ஒரு மணித்தியாலத்தில் சுமார் இருபது கிலோ பனை வெல்லத்தை இந்த இயந்திரம் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுவரை காலமும் மின்சார இயந்திர சாதனங்கள் எதுவும் இன்றி மனித வலுவைப் பயன்படுத்தி நெருப்பு மூட்டி பதனீரைக் காய்ச்சிஅதனூடாக ஊடாக பனை வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

தற்போது இயந்திர சாதனம் மூலம் சிரமம் இன்றிப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இயந்திரம்மூலம்உற்பத்திசெய்யப்படும்பனைவெல்லங்களைஅதிகளவில்உள்ளூர்வெளியூர்களுக்கு சந்தைப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்புட்டுள்ளன. அதேசமயம் இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லத்தை இந்த இயந்திர சாதனம் ஊடாகவே பொதியாக்கி (பைக்கற்) வைப்பதற்கும் நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ-17)

*மக்கள் தமக்குள் இருக்கும்*

# வேறுபாடுகளைத் தகர்த்தெறிவதே வடக்கு அபிவிருத்திக்கு ஒரே வழி

*பிரதியமைச்சர் காதர் மஸ்தான் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 7
போர் வடுக்களால் பல இன்னல்களைச் சுமந்து வாழ்ந்துவருகின்ற வடபுலமக்கள்இன, மத, கட்சிபேதங்களைக் கடந்து ஒற்றுமை உணர்வுடன் வாழ்கின்றபோதே தமது எதிர்கால அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்ல முடியும். இன்று பொதுவாக எமது பிரதேசங்களில் இன, மத, கட்சிவேறுபாடுகளைப்பெரிதுபடுத்தி அதன்மூலம் குழப்பகரமான சூழ்நிலையொன்றை உருவாக்க பல தீய சக்திகள் முனைப்புடன் செயற்படுகின்றன. இவ்வாறான விரும்பத்தகாத செயற்பாடுகளை தகர்த்தெறிதவன்மூலமே எமது இலக்கைவெகுவிரைவாகஅடைந்துகொள்ளமுடியும்எனபிரதியமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

மீள்குடியமர்வு, மறுவாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி பிரதியமைச்சர் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது சில விரும்பத்தகாத சக்திகள் எமது பகுதிகளில் உருவெடுத்து பண மூட்டைகளுடனும் பசப்பு வார்த்தைகளுடனும்வலம்வருகின்றன. இப்படியான சமூக அவசிந்தனையாளர்களிடம் யாரும் சோரம் போய்விடக் கூடாது. இவர்கள் ஒட்டுமொத்த மக்களையும் தவறான முறையில் பயன்படுத்தி தமது இலக்கை அடைய முனைப்புடன் செயற்படுகின்றனர். வன்னி மாவட்டத்தின் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகியபகுதிகளில்மீள்குடியமர்வு இன்னும்முழுமை அடையவில்லை. எனது அமைச்சின் வேலைத்திட்டங்களைமுழுமுயற்சியுடன்பிரயோகித்துஇருக்கின்றகுறுகிய காலத்துக்குள் எனது அமைச்சால், என்னால்முடிந்த அனைத்தையும் செய்யவுள்ளேன். அதற்கான ஒத்துழைப்பை மக்கள் எனக்கு வழங்க வேண்டும்-என்றார். (எ)

# சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைதுசெய்ய பொதுமக்கள் உதவ வேண்டும்

*யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு*

தென்மராட்சி, ஜூலை 7
பொதுமக்களால் வழங்கப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்து சட்டத்தின் முன்னால் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வர்ண ஜெயசுந்தர தெரிவித்தார். கொடிகாமம் பொலிஸ் நிலையப் பிரி வுக்குட்பட்ட சிவில் பாதுகாப்புக்குழுக்களுக்கிடையிலான கலந்துரையாடல் கொடிகாமம் பொலிஸ் நிலைய மண்டபத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எதிரிசிங்க தலைமையில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

இதன்போதேஅத்தியட்சகர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களுக்காக கடமையாற்ற வந்துள்ள நாம் அவர்களின் முறைப்பாடு களுக்கு நடவடிக்கைகள் எடுப்பின் மணல் கடத்தல் போதைப்பொருள்கள் கடத்தல், கால்நடைகள்கடத்தல், குழு மோதல்கள்போன்றசட்ட விரோதச் செயற்பாடுகளை நிறுத்த முடியும்.

சட்டவிரோதச்செயல்கள்அதிகரித்துவருவதற்கு போதைப் பொருள் பாவனையே காரணம்.

சட்ட விரோதச் செயற்பாடுகள் இடம்பெறுவதாகப் பொது மக்கள் அறிவித்தால் உடனடி நடவடிக்கைகள் மேற்கொண்டு குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகை யில் அவர்களைக்கைதுசெய்துசட்டத்தின் முன் நிறுத்துங் கள்.

பொதுமக்களும் சட்டவிரோதச் செயற்பாடுகளை அவதானித்தால்பொலிஸ்நிலையத்துக்கு அச்சமின்றித் தெரியப்படுத்த வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் தகவல் தருபவர்களின் விவரங்கள்வெளிப்படுத்தப்படமாட்டாது. இரகசியமாகப் பாதுகாப்பப்படும்--என்றார். (எ-9)

# வடக்கு மாகாண அரிசி ஆலைகள் உரிமையாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கென புதிய சம்மேளனம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடக்கு மாகாண அரிசி ஆலைகள் உரிமையாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்காகவடக்கில்ஐந்துமாவட்டங்களிலும் முதற்கட்டமாக அரிசிஆலைஉரிமையாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குமான சமாசங்களை அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.

"அரிசி ஆலைகள் உரிமையாளர் கூட்டுறவுச்சங்கங்களின்செயற்பாடுகளைஅதிகரிக்கும்முகமாகஇந்தசமாசங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக ஐந்து மாவட்ட சங்கங்களின் சமாசங்கள் ஒன்றிணைந்துசம்மேளனம் உருவாக்கப்படும். சங்கங்களின் சம்மேளனத்தின் செயற்பாடுகளுக்கான உபவிதிகள்தயாரிக்கும்பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காலபோக நெற்செய்கையின்போது அறுவடை செய்யப்படும் நெல்லை அதிகளவில் கொள்வனவு செய்து அதை அரிசி ஆலைகள் ஊடாக அரிசியாக்கி சந்தைப்படுத்தவும் நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. போதியசெயற்பாடுகள் இன்றிஇருக்கும்சில கூட்டுறவுச் சங்கங்களின் அரிசி ஆலைகள் இந்தச் சம்மேளனத்தின் ஊடாக தரம் உயர்த்தப்படும்" என்று ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (எ-17)

வடக்கு மாகாணத்தில்

## ‘1990’ அவசர அம்புலன்ஸ் வண்டி சேவை எதிர்வரும் 21ஆம் திகதியிலிருந்து ஆரம்பம்

வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் தெரிவிப்பு



மன்னார், ஜூலை 7

வடக்கில், இந்தியஅரசின் நிதி உதவியுடனான '1990 சுபாஸ்அரிய' அவசர அம்புலன்ஸ் வண்டி சேவை இந்த மாதம் 21ஆம்திகதி உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் தெரிவித்தார்.

குறித்த செயல் திட்டத்தைநடைமுறைப்படுத்துவது தொடர்பான அவசரக் கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை வடக்குசுகாதார அமைச்சில்வடமாகாண சுகாதார அமைச்சர்ஜீ.குணசீலன் தலைமையில்மாகாண சுகாதாரசேவைகள்பணிப்பாளர், 'சுபாஸ்அரிய' அவசரஅம்புலன்ஸ்வண்டி சேவை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தினர், சுகாதார சேவைகள்பணிப்பாளர்கள், பொதுவைத்தியசாலைகளின் இயக்குனர்கள் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றது.

இதையடுத்தே அமைச்சர் நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

"இதில் வடமாகாணத்துக்கு 20 அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

அவற்றில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 7 வண்டிகள், கிளிநொச்சிமாவட்டத்துக்கு 4வண்டிகள், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய 3 மாவட்டங்களுக்குத் தலா 3வண்டிகள் வீதம் 20 வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

அவசர அம்புலன்ஸ் வண்டி உதவி தேவைப்படுபவர்கள் குறித்த'1990'அலைபேசி இலக்கத்துக்குதொடர்புகொண்டு 'சுபாஸ்அரிய' அவசர அம்புலன்ஸ் வண்டி சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்' என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-56)

## வவுனியா நகரைப் பசுமையாக்கும் ‘துப்புரவு வாரம்’ இன்று ஆரம்பம்

வவுனியா, ஜூலை 7

வவுனியாநகரசபைக்குட்பட்டபிரதேசத்தை சுத்தமான பசுமை நிறைந்த பிரதேசமாக மாற்றுவதற்காக இன்று சனிக்கிழமைமுதல் ஆறு வாரங்களை துப்புரவு வாரங்களாக கடைப்பிடிக்க என வவுனியா நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'சுத்தமும் பசுமையும்' என்ற தொனிப்பொருளில் துப்புரவு வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

ஆரம்பநாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வவுனியா சகாயமாதா தேவாலயத்தின் முன்றலில் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இந்தப் பணியில் மக்கள்பிரதிநிதிகள், வவுனியா நகர சபை உறுப்பினர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், துப்பரவுத்தொழிலாளர்கள், பொது அமைப்புகள், பொலிஸார், பொதுமக்கள் எனப் பல்துறை சார்ந்தவர்களும் இணைந்து செயற்படவுள்ளனர். அனைவரையும் துப்புரவுப்பணியில்இணைந்து பங்களிப்புநல்குமாறு வவுனியாநகரசபை தெரிவித்துள்ளது. (எ-110)

சபையால் ஒழுங்கமைக்கப்பட்ட

# உறுப்பினர்களுக்கான கருத்தமர்வில் இரண்டு பேர் மட்டுமே பங்கேற்றனர்

ஏனையோர் அக்கறைப்படவில்லை

சாவகச்சேரி, ஜூலை 7

**சாவகச்சேரி நகரசபையால்சாவகச்சேரி நகரசபையின் பொதுநூலகத்தின் அபிவிருத்தித்திட்டங்கள்தொடர்பில் ஆராய்வதற்காகஒழுங்கமைக்கப்பட்ட சபை உறுப்பினர்களுக்கான கருத்தரங்கில்வெறும்இரண்டு உறுப்பினர்களேகலந்து கொண்டனர்.**



யாழ்ப்பாணம், சாவகச்சேரி நகரசபையின்பொதுநூலகத்தைப்பயன்படுத்துவோரின் எண்ணிக்கை தற்போது மிகையாகக் குறைவடைந்துள்ளது. இது தொடர்பில் ஆராய்வதற்காகவும், பொதுநூலகத்தின் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காகவும் சபை உறுப்பினர்கள் மற்றும் நூலக அபிவிருத்திச் சபையினர் ஆகியோருக்கான கருத்தரங்கு நேற்றுமுன்தினம்ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலை நூலகர், வளவாளராக அழைக்கப்பட்டிருந்தார். கருத்தரங்கில்கலந்து கொள்ளுமாறு சபையின் 17 உறுப்பினர்களுக்கும் தவிசாளர் அழைப்பு அனுப்பியிருந்தார்.

தவிசாளர், உபதவிசாளருடன்இரண்டு உறுப்பினர்கள் மட்டுமே கருத்தரங்குக்கு வருகை தந்தனர். கருத்தரங்கு ஒரு மணிநேரம் தாமதமாக ஆரம்பித்தது. அதுமுடியும்வரையில்கூடஏனைய உறுப்பினர்கள் எவரும் வருகை தரவில்லை.

சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்களின் மோசமான வருகைப்பதிவு தொடர்பில் கருத்தரங்கில் கலந்து கொண்டநூலக அபிவிருத்திச் சபையினர்கவலை தெரிவித்தனர்.

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்கென மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்கட்சிபேதமின்றிச் செயற்படுவதாக தெரிவிக்கின்றபோதிலும்சபையால்மேற்கொள்ளப்படும் பிரதேசத்துக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்குபற்றாமல் இருப்பது தொடர்பிலும் கவலை தெரிவிக்கப்பட்டது. கருத்தரங்குக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த தவிசாளர் சிவமங்கை இராமநாதன், உப தவிசாளர் அ.பாலமயூரன் அதே கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் த.பௌலினாசுபோதினி மற்றும்தமிழர்ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சபைஉறுப்பினர் க.சிவராசா ஆகியோரே சமூகமளித்தனர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சு.நிதிகேசன், வ.பிரகாஸ், யோ.ஜெயக்குமார், ப.ஜயகாந்தன், ம.நடனதேவன், பா.உதயசந்தர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த க.கஜிதன், க.தர்சன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ந.திருக்கும ரன், ர.லலிதாராணி, ச.சண்முகரஞ்சினி, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கு.சர்வானந்தா மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த ப.நந்தகோபால், க.வேலாயுதம்பிள்ளை ஆகிய 14 உறுப்பினர்களே கருந்தரங்குக்கு வருகை தராத உறுப்பினர்கள்.

கலந்துகொள்ளாமை தொடர்பில் கேட்பதற்காக குறித்த உறுப்பினர்களுக்கு அழைப்பைஏற்படுத்தியபோதும்சிலர் பதிலளிக்கவில்லை.

சிலஉறுப்பினர்கள்தெரிவித்ததாவது: முதல்நாள் பிற்பகலே எமக்கு கூட்டம் தொடர்பாகஅறிவிக்கப்பட்டது. எனவே கூட்டத்தில் கலந்து கொள்ளவதற்கான நேர ஏற்பாடுகளை உடனடியாக செய்யமுடியாது போய்விட்டது. எனினும் கலந்துகொள்ளாமை வருத்தமளிக்கின்றது- என்றனர்.

4 உறுப்பினர்கள், "நாம் அரச பணியாளர்களாக இருக்கின்றோம். முதல் நாளில் அறிவிக்கப்பட்டதனால் உடனடியாக விடுமுறை கிடைக்கப் பெறாது கலந்துகொள்ளமுடியவில்லை"என்று தெரிவித்தனர்.

இருவர், 'வீடு இடம் மாற்றம், திருமண நிகழ்வு ஆகிய தனிப்பட்ட சில அவசர வேலைகள்காரணமாககலந்துகொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கவில்லை' என்று தெரிவித்தனர்.

ஒருவர் 'வட்டார ரீதியாக இடம்பெறும் நடமாடும்சேவை காரணமாக கலந்துகொள்ளவில்லை' என்றார்.

கூட்டத்துக்கு நேரம் தாழ்த்தி அறிவிக்கப்பட்டமைதொடர்பில்தவிசாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது,

"அவர்களுக்கு நேரம் தாழ்த்தி அனுப்பப்பட்டமை மற்றும் அவர்களது வேலைப்பழு காரணமாகத்தான் கலந்து கொள்ளவில்லை என்பது ஏற்றுக்கொள்ளமுடியாத காரணமாகும்.

ஒருமணித்தியால கலந்துரையாடலால், வேலைகளில் பாதிப்பு இடம்பெறப்போவதில்லை. அத்துடன் இவர்கள் கலந்துகொள்ளாததுதொடர்பாகஎனது தனிப்பட்ட கருத்து திட்டமிட்டே ஏதோ ஒரு காரணத்துக்காக இவர்கள் புறக்கணித்துள்ளார் கள் என்பதே" என்று தெரிவித்தார்.

எங்களுக்குச்சேவை செய்வதேதமது நோக்கம்என்றுபரப்புரைசெய்துபதவியேற்ற உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவிப்பதால் அடுத்த தேர்தபில் அவர்களுக்கு 'உரிய கவனிப்பை' கொடுப்போம் என்று அந்தப் பகுதி மக்கள்தெரிவித்தனர். (எ-114,9)

# காணி அபகரிப்புத் தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்திடம் வினவவும்

மன்னார் மாவட்டச் செயலகத்திடம் சாள்ஸ் எம்.பி. வலியுறுத்து

மன்னார், ஜூலை 7

மன்னார், திருக்கேதீஸ்வரர் ஆலயத்தை அண்மித்த பகுதியில் உள்ள மக்களின் காணிகள் அபகரிப்புத் தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்தின் உயரதிகாரியிடம்மாவட்டச்செயலகம்வினவ வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்சாள்ஸ்நிர்மலநாதன் தெரிவித்தார்.

திருக்கேதீஸ்வரத்திலிருந்து போர்க் காலத்தின்போது இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் அந்த இடங்களில் குடியமர முற்ப டும் போது தொல்பொருள்ஆராய்ச்சித் திணைக்களம்தடைவிதித்துவருகிறது.

திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தை அண்மித்துவீடுகள்அல்லதுவீட்டு மதில்கள் கட்டுவதற்குக் கிடங்குகள் தோண்டவோ, மின்சார இணைப்புக்குக் கம்பங்கள் நடுவதற்வோ அந்தத்திணைக்களம் அனுமதிக்கவில்லை. மன்னார் சிவபுரம் என்ற புதிய மீள்குடியமர்வுக் கிராமத்துக்கு குடிதண்ணீர்வழங்குவதற்கு நிலத்தடியின் கீழ் குழாய்கள் பதிப்பதற்கும்தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் தடைவிதித்துள்ளது.

எனினும் அந்தப் பகுதிகளில் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் மற்றும் இராணுவத்தின்ஆசீர்வாதத்துடன்பௌத்த விகாரைப் பகுதியை விஸ்தரிப்பதற்கான கட்டுமானங்களுக்கான வேலைகள்நடைபெற்றுவருகின்றன இது தொடர்பில் அந்த மக்கள் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்சாள்ஸ்நிர்மலநாதனிடமும், மன்னாருக்குச் சென்ற அமைச்சர் மனோகணேசனிடமும் முறையிட்டிருந்தனர்.



இந்தச் சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்தெரிவித்ததாவது: திருக்கேதீஸ்வரர் ஆலயத்தைஅண்டிசுமார்15 ஏக்கர் காணிகளை தொல்பொருள்திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது. இதில் மக்களுடைய உறுதிக்காணிகள், அரசால்மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் அடங்குகின்றன.

இந்தஅபகரிப்புத்தொடர்பில்பலதடவைகள்தொல்பொருள்ஆராய்ச்சித் திணைக்களத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் பேசியுள்ளேன். தற்போதுஅந்தத்திணைக்களத்துக்கு பொறுப்பாக புதிதாக நியமிக்கப்பட்டஅமைச்சருடனும் பேசியுள்ளேன். ஆனால்அவர்கள் யாரும் பதில் கூறுகி றார்கள் இல்லை. தொல்பொருள்திணைக்களத்தின் அதிகாரிகளும் இதற்கான உரிய பதிலைக் கூறுகின்றனர் இல்லை.

எனவேஅந்தத்திணைக்களத்தின் உயரதிகாரியை அழைத்து மன்னார்மாவட்டச்செயலகத்தில்இந்த விடயம் தொடர்பில் கண்டிப்பாகப் பேசவேண்டும் என்று மன்னார் மாவட்டச் செயலரைக் கோரியிருந்தேன். தற்போது அவர் இல்லை. எனவேபுதிதாகவருபவரிடமும் இதைத்தான் வலியுறுத்தவுள்ளேன். திருக்கேதீஸ்வரர் ஆலயத்தை அண்மித்த காணிகளுக்கு பொறுப்பான பிரதேச செயலர். மாவட்டச் செயலர் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் உயரதிகாரியுடன் பேச வேண்டும்-என்றார். (எ-21)

# போரில் மீட்கப்பட்ட நகைகள் எங்கே என்பது புரியாத புதிர்!

## சரத் பொன்சேகா கூறுகின்றார்



**கொழும்பு, ஜூலை 7**
**போர் நிறைவடைந்ததன் பின்னர் மீட்கப்பட்ட தங்க நகைகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் தனக்கு சந்தேகம் நிலவுவதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

"தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட பெட்டகங்களில் எவ்வளவு நகை இருந்தது என்பதைப்பற்றி இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கணக்கு ஒன்றைத் தெரிவித்திருந்தார்.
விடுதலைப் புலிகளிடம் மீட்க்கப்பட்ட நகை தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்டபோது, அரசு ஒரு எண்ணிக்கையைக் குறிப்பிட்டது.
அந்தக் காலத்தில் சிறையிலிருந்த பொன்சேகா, நீதிமன்றுக்கு வந்த போது, நாடாளுமன்றத்தில் அரசு தெரிவித்த தகவல் பொய்யானது.
அவர்கள் கூறியதைப் போன்று இரண்டு மடங்கு நகை மீட்கப்பட்டது என்று பொன்சேகா என்னிடம் கூறியிருந்தார். அதனை நாடாளுமன்றத்தில் தெரியப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டிருந்தார்"
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கடந்த திங்கட் கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின்போது, குறிப்பிட்டிருந்தார்.
இந்த நிலையிலேயே, போர் முடிந்த பின்னர், அலரி மாளிகைக்கு கொள்கலனில் கொண்டு வந்ததாகக் கூறப்படும் பணம் மற்றும் தங்கத்துக்கு என்ன நடந்தது? என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.
இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே நகைகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் தனக்கு சந்தேகம் நிலவுவதாக சரத் பொன்சேகா தெரிவித்தார்.
இராணுவத் தளபதிப் பதவியிலிருந்து தான் ஓய்வு பெற்றதன் பின்னர் அது அலரி மாளிகைக்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கலாம். எனத் தெரிவித்த அவர், தான் இருக்கும்போது சுமார் 220 கிலோ (27,500 பவுண்) தங்கத்தை மீட்டதாகவும் குறிப்பிட்டார்.
மீட்ட தங்கத்தை தாம் சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப எழுத்துமூல ஆவணங்களுடன் வவுனியாப் பொலிஸாரிடம் வழங்கியதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்தார். அதன் பின்னரான செயற்பாடுகளைப் பாதுகாப்பு அமைச்சே மேற்கொண்டிருக்க வேண்டும்.
அதற்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் கூற முடியாமல் தற்போது தான் ஊமை போன்றிருப்பதாகவும், நகைகள் குறித்த விடயம் தொடர்பில் தனக்கும் தற்போது சந்தேகம் எழுவதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்தார். (ரி2)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு

# ரூ.800 மில்லியன் வழங்க எயார்லைன்ஸ் இணக்கம்

கொழும்பு, ஜூலை7
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு, சிறிலங்கன் எயார்லைன்ஸ் 800 மில்லியன் ரூபா நிதியை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.
சிறிலங்கன்எயார்லைன்ஸ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மிகப் பெரிய நிதியை நிலுவையாகச் செலுத்தவேண்டியிருந்தது. நிதியை மீளப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துடன் பல பேச்சுகளையும் நடத்திவந்தது.
இந்த நிலையிலேயே, சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தா பனத்திற்கு நிதி வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நீல் ஜயசேகர தெரிவித்துள்ளார்.
ரூபா 13.45 பில்லியன் கடன் நிலுவையில், முதல் கட்டமாக ரூபா 800 மில்லியனை வழங்க சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.
மிகுதிப் பணத் தொகையைச் செலுத்துவதற்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுத் தனியார் வங்கியில் கடன்பெற முயற்சிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை, தொடர்ந்தும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு எரிபொருளை வழங்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. (ரி2)

# ஆயிரம் கிராமங்களில் அபிவிருத்தி நடவடிக்கை

கொழும்பு, ஜூலை7
குளங்கள் சார்ந்த ஆயிரம் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் "ஆயிரம் குளங்கள் ஆயிரம் கிராமங்கள்" என்ற திட்டத்தை விவசாய அமைச்சு முன்னெடுத்துள்ளது. இவ்வாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார் அவர் தெரிவித்ததாவது,
இந்தத் திட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் குருணாகல் மாவட்டத்தின், நிக்கவரெட்டிய பிரதேசத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.
ஆயிரம் குளங்கள், ஆயிரம் கிராமங்கள் என்ற திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வாரமும், குளம் சார்ந்த கிராமம் ஒன்று அபிவிருத்தி செய்யப்படும்.
இந்தத் திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்யத் திட்டமிட்டப்பட்டுள்ளது. முதலாவது விவசாயக் கிராமம் பண்டாரவளை ஹகத்தே பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பாரம்பரிய முறைகளுடன் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்யப்படுகின்றது.
இதேவேளை இலங்கையில் பத்து இலட்சம் பலா மரங்களை நடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவற்றின் முன்னேற்றத்தை ஆராய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்என்றார். (ரி2)

# குருநாகல் தமிழ் பாடசாலைக்கு விஞ்ஞான ஆசிரியர் இல்லை

## கல்வி அமைச்சும் அசமந்தப்போக்கு

குருநாகல், ஜூலை7
குருநாகல் கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள இந்து தமிழ்ப் பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியர் இன்மையினால், பணம் செலுத்திக் கற்பிக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர். வருமானம் குறைந்த மாணவர், மாணவிகள் இந்தப் பாடத்துக்கு சமூகளிப்பதில்லை. என்றும் கூறப்படுகிறது.
இந்தப் பாடசாலையில் தரம் ஒன்று முதல் க. பொ. த. உயர் தரம் வரையிலும் சுமார் 200 மாணவர், மாணவிகள் வரை கல்வி பயிலுகின்றனர். நான்கு வருடங்களாக விஞ்ஞான பாட ஆசிரியரின்றி மாணவர் மாணவிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.
இதனால், கல்வி கற்கக் கூடிய மாணவர் மாணவிகளுக்குப் பிரத்தியேகமாகப் பணம் செலுத்தி விஞ்ஞான பாடம் கற்பிக்கப்படுகிறது.
விடயம் தொடர்பில், கல்வி அமைச்சுத் தொடக்கம் அது தொடர்பான உயர் அதிகாரிகள் வரைக்கும் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் இதுவரையில் எந்தவித பரிகாரமும் கிடைக்கவில்லை என்று பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (ரி2)

# பகிரங்கப்படுத்தப்பட்டது பிணைமுறி ஆவணம்

கொழும்பு, ஜூலை7
பிணைமுறி கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான அரச தலைவர் ஆணைக் குழு அறிக்கையின் சி350 ஆவணத்தை பகிரங்கப்படுத்துவதற்கு அரச தலைவரின் செயலர் அனுமதி வழங்கியுள்ளதாக அரச சுவடிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்த ஆவணத்தில் 127 பக்கங்கள் உள்ளன. இவற்றை அச்சுப் பிரதிகளாக அல்லது இறுவட்டுகளாகப் பெற்றுக்கொள்ளத் தேவையான வசதிகள் சுவடிகள் திணைக்களத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகச் சுவடிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நதீரா ரூபசிங்க குறிப்பிட்டார்.
சுவடிகள் திணைக்களத்திடம் விண்ணப்பித்து அந்த ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.
சி350 என்ற இந்த ஆவணமானது கோப் குழு உறுப்பினர்களுக்கும், முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடல்களை மையப்படுத்தியதாகும். ஆவணத்தை வெளியிடுவதால் விசாரணைக்குப் பாதிப்பில்லை எனச் சட்ட மா அதிபர், அரச தலைவர் செயலருக்கு அறிவித்திருந்தார்.
இந்த நிலையிலேயே அதனைப் பகிரங்கப்படுத்த அரச தலைவர் செயலர் அரச சுவடிகள் திணைக்களத்துக்கு அனுமதியளித்திருந்தார். (ரி2,71)

# தந்தையைக் கடத்தினார் கோத்தா; ஐ.நா வில் இளைஞர் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை7
தனது தந்தையை வெள்ளை வானில் கடத்திச் சென்றதாகத் தெரிவித்து, இளைஞர் ஒருவர், கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக ஜெனீவாவில் முறைப்பாடு செய்துள்ளார்.
கடந்த 2008 ஆம் ஆண்டு கொழும்பு கறுவாத்தோட்டப் பகுதியில் வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம்.
இதன்போது பின்னால் வந்த வாகனமொன்று எமது வாகனத்தை நிறுத்தி, எனது தந்தையைக் கடத்திச் சென்றது.
தனக்கு 8 வயதாக இருக்கும்போது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகப் 17 வயதுடைய அந்த இளைஞன் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, ஜெயனி தியாகராஜா எனும் இளம் பெண்ணொருவரும், தனது சகோதரரின் கடத்தல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலருக்கு எதிராகக் கடந்த மே மாதம் நடைபெற்ற ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைபடொன்றைப் பதிவு செய்ததாகக் கூறப்படுகின்றது. (ரி2)

# ஐ.நா வதிவிடப் பிரதிநிதியுடன் த.தே.கூ பிரதிநிதிகள் சந்திப்பு

கொழும்பு, ஜூலை7
ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி டெரன்ஸ் டிலோரன்ஸ் மற்றும் குகதாசன் தலைமையில், திருகோணமலை தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.
தற்போதைய தமிழ் மக்களின் நிலமைகள் தொடர்பில் இதன்போது, கலந்துரையாடப்பட்டது. இந்தச் சந்திப்பில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைத் தவிசாளர் மருத்துவக் கலாநிதி ஞானகுணாளன், சட்ட நிபுணர் திருக்குமரநாதன், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கனகசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி2)



# தனி மனிதரொருவரின் அபார சாதனை இது!

ஆர்மினியாவின் அரிஞ் கிராமத்தில் வசித்த 44 வயது லெவோன் அராகெல்யானிடம் அவரது மனைவி டோல்ஸ்யா, தோட்டத்தில் உருளைக் கிழங்குகளைப் பறித்து வரச் சொன்னார். மண்ணைத் தோண்டியவரால், தோண்டுவதை நிறுத்தவே முடியவில்லை. கடந்த 1985ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 23 ஆண்டுகள் நிலத்தைக் குடைந்து, பாதாளத்தில் ஒரு தேவாலயத்தையே உருவாக்கிவிட்டார்! தனி மனிதரின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்த இடத்தைப் பார்ப்பதற்கு உலகம் முழுவதிலுமிருந்து மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்.

"லெவோன் மண்ணைத் தொட்டதும் மந்திரம் போட்டதுபோல் இருந்ததாகச் சொன்னார். மண்ணைத் தோண்டத் தோண்ட, ஏதேதோ குரல்கள் கேட்டதாகவும் அவைதான் தன்னைத் தோண்டும்படிக் கட்டளையிட்டதாகவும் கூறினார். ஒரு நாளைக்கு 18 மணி நேரம் என்று 23 வருடங்கள் நாள் தவறாமல் இந்தப் பணியைச் செய்து முடித்திருக்கிறார். முதலில் சில அடி ஆழம் தோண்டுவது சிரமமாக இருந்திருக்கிறது. எரிமலைக் கற்கள் வந்த பிறகு, வேலை எளிதாகிவிட்டது. நவீனக் கருவிகள் எதையும் பயன்படுத்தாமல், சுத்தியல், கடப்பாறை, மண்வெட்டி போன்ற கருவிகளை மட்டுமே வைத்து, அவர் ஒருவர் மட்டுமே இந்தப் பாதாள தேவாலயத்தை உருவாக்கியிருக்கிறார். 280 சதுர மீற்றரில், 20 மீற்றர் ஆழத்தில், 7 அறைகளுடன் இது அமைந்திருக்கிறது.

அனைத்து அறைகளின் சுவர்களும் ஓவியங்கள், சிற்பங்களால் செதுக்கப்பட்டிருக்கின்றன. மின் விளக்கு, காற்றோட்ட வசதி என்று சகலமும் இங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. தனி மனிதர் கைகளால் உருவாக்கிய இடம் என்று சொன்னால் எல்லோரும் ஆச்சரியப்படுகிறர்கள். தினமும் 4 மணி நேரம் மட்டுமே தூங்குவார். அப்போது கூட அந்த வேலையில்தான் மனம் செல்கிறது என்பார். இப்படி அர்ப்பணிப்புடன் செய்ததால்தான் இதை உருவாக்க முடிந்திருக்கிறது. இங்கிருந்து வெளியேற்றப்பட்ட 450 டிரக் லோடு கற்களையும் மண்ணையும் பல்வேறு பணிகளுக்காகப் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கிவிட்டார். இந்த மாபெரும் பணியைச் செய்த லெவோன், 2008ஆம் ஆண்டு தனது 67ஆவது வயதில் மாரடைப்பால் உயிரிழந்தார். இந்த வேலைதான் அவர் உயிரைப் பறித்திருக்கும் என்று நான் நம்புகிறேன். இவ்வளவு கடுமையாக வேலை செய்யும் ஒருவர் என்னுடன் நீண்ட நாள்கள் இருக்க மாட்டார் என்பதை உணர்ந்தே இருந்தேன். அவர் இல்லை என்ற வருத்தம் இருக்கிறது. அதே நேரத்தில் தனி ஒரு மனிதர் உலகம் வியக்கும் அளவுக்கு ஒரு பணியைச் செய்துவிட்டுப் போனதில் நானும் எங்கள் குழந்தைகளும் பேரக் குழந்தைகளும் லெவோனை நினைத்துப் பெருமைகொள்கிறோம். இந்த உழைப்பைப் புரிந்துகொண்டவர்களால்தான் பாதாள தேவாலயத்தை ரசிக்க முடியும். ஆர்வமாக வரும் சுற்றுலாப் பயணிகளை நானே அழைத்துச் சென்று, ஒவ்வொன்றையும் விளக்கிச் சொல்வேன். முதல் தளம் லெவோனுக்கானது. அவரது கருவிகள், உடைகள், டைரி, படங்கள், புத்தகங்கள், காலணிகள் என்று அனைத்தையும் காட்சிப்படுத்தியிருக்கிறோம். கடைசி அறையில் சிறிய தேவாலயம். எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, பாராட்டுவதைக் கேட்கும்போது லெவோன் பட்ட கஷ்டத்துக்குப் பயன் இருப்பதாக நினைத்துக்கொள்வேன்" என்கிறார் டோல்ஸ்யா. (ம)





# டாரா பெருநகரில் தொடர் தாக்குதல்

டமஸ்கஸ், ஜூலை 7
சிரியாவின் டாரா நகரில் அரச தரப்புக்கும், அரசுக்கு எதிரான ஆயுதக் குழுவுக்கும் இடையில் தொடர் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

சிரியாவின் டாரா நகத்தில்தான் சன்னி ஆயுதக் குழுக்கள் தற்போது வலுவாக உள்ளன. அலெப்போ, பல்மைரா, டமஸ்கஸ், ஹோம்ஸ் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயுதக் குழுக்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளன. எனினும் டாராவில் ஆயுதக் குழுவின் ஆதிக்கம் வலுவாகவே வேரூன்றியிருந்தது. இந்தப் பின்னணியில் டாராவில் ஆயுதக் குழுவுக்கும் சிரிய அரச தரப்புக்கும் இடையில் சமீப நாள்களாக தொடர்ந்து போர் இடம்பெற்று வருகின்றது.

கடந்த புதன்கிழமையும், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும் மட்டும் அரச தரப்பால் சுமார் 60 ஆயிரம் வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று லண்டனைத் தலைமையமாகக் கொண்டு செயற்படும் போர்க் கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

சிரிய அதிபர் அசாத் பதவி விலக வேண்டும் என்று சன்னி ஆயுதக் குழுக்கள் கடந்த ஆறு ஆண்டுகளாக உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



மலேசியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் நஜீப் ரசாக் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் மீதான நகர்வுகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அவரின் ஆதரவாளர்கள் கோலாலம்பூரில் நேற்றுமுன்தினம் திரண்டு தமது ஆதரவை அவருக்குத் தெரிவித்தனர். (ம)

# இந்துக்கள் மீதான தாக்குதலுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்

## ஆப்கானின் அதிபர் அஸ்ரப் உறுதி

காபூல், ஜூலை 7
ஆப்கானிஸ்தானில் சீக்கியர்கள், இந்துக்களை இலக்குவைத்து அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி வழங்கியுள்ளார் ஆப்கானிஸ்தான் அதிபர் அஸ்ரப் கானி. ஜாலாபாத் நகரில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் உலகெங்கும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. சீக்கியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் ஆப்கானிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லுறவு பாதிப்படையும் சூழ்நிலையும் ஏற்பட்டது. இதையடுத்தே இந்த அசம்பாவிதத்துக்குக் காரணமானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார் கானி. (ம)



# தீ விபத்தால் 17 பேர் சாவு

மெக்சிக்கன் சிற்றி, ஜூலை 7
மத்திய மெக்சிக்கோவில் உள்ள மிகப்பெரிய பட்டாசுச் சந்தையில் தீ பரவியதை அடுத்து 17 பேர் உடல்-கருகி உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களைத் த்விர மேலும் பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடம் என்று சொல்லப்படுகிறது. தீ எவ்வாறு பரவியது என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)



# ரஷ்யாவில் நிலநடுக்கம்

மொஸ்கோ, ஜூலை 7
ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தில் நேற்றுக் கடுமையா்ன நிலநடுக்கம் ஏற்பட்டது. ரஷ்யாவின் கிழக்கு முனையில் அமைந்துள்ளது கம்சட்கா தீபகற்பம். இந்தத் தீபகற்பத்தில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. தீபகற்பத்தின் தெற்கு முனையான ஒசர்நோவ்ஸ்கி



யில் இருந்து 58 மைல் தூரத்தில் கடலுக்கடியில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தாகவும், ரிச்டர் அளவுகோலில் 6.0 அலகாக பதிவாகியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள வீடுகள் குலுங்கின. பொதுமக்கள் பீதி அடைந்து வீடுகளை விட்டு வெளியேறினர். எனினும் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கூட்டுறவே நாட்டுயர்வு

தர்மராஜா ரமேஸ்குமார்




> முதலாளித்துவ மேலாண்மைகள் மேற்கொண்டு வந்த சுரண்டல்களால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். அதனை எதிர்த்துப் போராட தொழிலாளர்கள் ஒற்றுமையாக ஒன்று திரண்டனர். இவ்வாறு முதலாளித்துவத்தை எதிர்த்து குரல் கொடுக்க தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உருவாக்கிய இயக்கமாகவே கூட்டுறவு இயக்கம் தோற்றம் பெற்றது.

## இன்று பன்னாட்டு கூட்டுறவு தினம்

**'கூட்டுறவு'**

கூட்டுறவு என்ற சொல்லாடல் புனிதமானது. உறவு நிலையில் வலிமை உடையது. அந்தவகையிலே கூட்டுறவு என்பது, " குறித்ததோர் இலக்கினை கண்டடைதல் என்ற உயரிய நோக்கத்தின் வழி, ஒன்றுக்கு மேற்பட்டோர் தாமாகவே முன்வந்து ஒற்றுமை உணர்வோடு செயற்படுதல்" என்று பொருள்படும். இங்கு கூட்டுறவு என்பதன் சாதாரண பொதுநிலைக்கருத்து 'கூடி உழைத்தல்' என்பதை சுட்டி நிற்கிறது. கூட்டுறவு என்பதன் ஆங்கிலப் பதத்தை எடுத்து நோக்கின் அது 'COOPERATION' என்பதாக பொருள் நிலை தரும். இது இலத்தீன் மொழிச் சொல்லான 'COOPERARI' என்பதிலிருந்து தோற்றம் கொண்டது. இதில், 'CO' என்பது, 'ஒன்றுபட்டு அல்லது ஒன்றுகூடி என்ற கருத்தை தருகிறது. அதேபோன்று 'OPERARI' என்பது, தொழிற்படுதல் அல்லது செயற்படுதல் என்ற கருத்தை குறித்து நிற்கிறது.

**வரைவிலக்கணம்**

இந்த சந்தர்ப்பத்திலே கூட்டுறவு தொடர்பில் பல அறிஞர்கள் வெளிப்படுத்தியுள்ள வரைவிலக்கணங்கள் நோக்குதற்குரியவை. அவர்கள் தாங்கள் வாழ்ந்த சமூக,பொருளாதார பின்னணிகளையும், அவரவர் வாழ்ந்த காலப்பகுதியையும் மையமாகக் கொண்டே வரைவிலக்கணங்களை தந்துள்ளனர். இவர்களுள் 'கல்வேட்' கூட்டுறவு தொடர்பில் குறிப்பிடும் போது, "மக்கள் தமது பொதுப் பொருளாதாரத் தேவைகளை நிறை வேற்றும் பொருட்டு எவ்வித நிர்ப்பந்தமுமின்றி தாமாகவே முன்வந்து மனிதர்கள் என்ற ரீதியில், சமத்துவ அடிப்படையுடன் ஜனநாயக முறையில் ஒன்றிணைந்து செயற்படும் முறையே கூட்டுறவு" - என்கிறார்.

இந்தக் கருத்துரை எக்காலத்துக்கும் பொருத்தமானதாகவும், அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் அமைந்துள்ளது.

**கூட்டுறவின் அடிப்படைப் பண்புகள்**

கூட்டுறவு என்பது ஒரு தனித்துவம் மிக்க புனிதமான அமைப்பாக விளங்குகிறது. இது பின்வரும் அடிப்படைப் பண்புகளை கொண்டுள்ளது.

- சுய உதவி
- பரஸ்பர உதவி
- சிக்கனம்

இவற்றுள் ஒருவர் தனது திறமையையும் வளங்களையும் கொண்டு தனது தேவைகளை ,தானே நிறைவேற்றிக்கொள்ளும் தன்மை 'சுயஉதவி' எனப்படுகிறது. ஒருவர் செய்த உதவிக்கு கைமாறாக அவருக்கு தேவையான உதவிகளை இன்னொருவர் செய்து கொள்கின்ற செயனூக்கத்தை 'பரஸ்பர உதவி' என வரையறுக்கலாம். அதேபோன்று 'சிக்கனம்' என்பது ஒருவர் தான் பெற்றுக்கொள்கின்ற வருமானத்தை திட்டமிட்டுச் செலவு செய்கின்ற செயல் வெளியை குறித்து நிற்கின்றது. இங்கு, சிக்கனத்தின் மறுபக்கம் சேமிப்பாக மாற்றங்கொள்கிறது. எந்தவொரு மனிதன் தனது வருமான ஈட்டத்துக்கு ஏற்ப செலவுகளை திட்டமிட்டு மேற்கொள்ள தீர்மானங்களையும் முயற்சிகளையும் மேற்கொள்கிறானோ, அன்று தொடக்கம் அவன் பொருளாதார ரீதியில் மேம்பாடு காண ஆரம்பிக்கிறான்.



**கூட்டுறவு இயக்கம்**

ஐரோப்பிய நாடுகளில் இடம்பெற்ற கைத்தொழிற் புரட்சியை தொடர்ந்து 19 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியின் மத்திய பகுதியில் இங்கிலாந்து தேசத்தில் 'கூட்டுறவு' இயக்கம் தோற்றம் பெற்றது. கைத்தொழில் புரட்சி காரணமாக உலகில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. மக்கள் சாதகமான விளைவுகளையும்,பாதகமான விளைவுகளையும் அனுபவிக்கத் தொடங்கினர். இதன்வழியே பொருளாதார முறைமைகளும் மாற்றம் கண்டன. முதலாளித்துவ பொருளாதாரம் தோற்றம் பெற்றது. முதலாளித்துவ மேலாண்மைகள் மேற்கொண்டு வந்த சுரண்டல்களால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். அதனை எதிர்த்துப் போராட தொழிலாளர்கள் ஒற்றுமையாக ஒன்று திரண்டனர். இவ்வாறு முதலாளித்து வத்தை எதிர்த்து குரல் கொடுக்க தொழிலாளர்கள்அனைவரும் ஒன்று சேர்ந்து உருவாக்கிய இயக்கமாகவே கூட்டு றவு இயக்கம் தோற்றம் பெற்றது.

**'றொபேட் ஓவன்'**

இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கத்தை உருவாக்குவதற்கு முன்னின்று உழைத்தவர்களுள் 'றொபேட் ஓவன்' மிகமுக்கியமானவர். இவரை உலக கூட்டுறவாளர்கள் அனைவரும் 'கூட்டுறவு இயக்கத்தின் தந்தை' எனப் போற்றிப் புகழ்கின்றனர். ஆம், உலகப் பொதுமையுள் பொருளியலின் தந்தையாக 'அடம் சிமித்', பொதுவுடமையின் தந்தையாக 'கால்மாக்ஸ்', கூட்டுறவின் தந்தையாக 'றொபேட் ஓவன்' ஆகியோர் போற்றி வணங்கப்படுகின்றனர்.

'றொபேட் ஓவன்' (1771 - 1858) முதலாளித்துவ அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடினார். தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தினார். குறிப்பாக தொழிலாளர்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற கொடுமைகளையும், துன்பங்களையும் நீக்கினார். அவர்களுக்குரிய ஊதியத்தையும் வேலை நேரங்களையும் நிர்ணயம் செய்தார். பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தினார். தொழிலாளர்களுக்கு இருக்க வேண்டிய கூட்டு உழைப்பு மற்றும் பொறுப்பு என்பவற்றை தெளிவுபடுத்தினார்.

இவரை உலகின் முதலாவது, "ஜனநாயக சோசலிசவாதி, சமூக சீர்திருத்தவாதி, தொழிற்சங்கவாதி, கல்வி முன்னோடி, தொழிலாளர்களின் தோழன் மற்றும் கூட்டுறவு இயக்கத்தின் தந்தை" என பிற்கால பொருளாதார மேதைகள் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். இவருடைய நினைவுக்கல்லறையில், "நல்லெண்ணத்துடன் உலக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வது மனித சமுதாயத்தின் கொடை" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளது.

**'றொச்டேல்' முன்னோடிகள்**

இவர் கொண்டிருந்த கூட்டுறவுச் சிந்தனை களில் பொதிந்திருந்த உயர்ந்த கருத்துக்களை 'றொச்டேல்' முன்னோடிகள் ஒழுங்கமைத்தனர். அதனை வடிவமைத்து 1844 ஆம் ஆண்டு கூட்டுறவுக் கொள்கைகளாக பிரகடனப்படுத்தி யுள்ளனர். குறிப்பாக, 28 நெசவுத் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ஒரு பவுண் வீதம் மூலதனமிட்டு ஒரு கட்டடத்தை வாடகைக்கு எடுத்து அதில் 'நுகர்ச்சியாளர் கூட்டுறவு சங்கத்தை' நிறுவி அதனை நட்புறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டனர். இந்தச் சங்கம் இங்கிலாந்து தேசத்தில் றொச்டேல் என்னும் இடத்தில் அமையப் பெற்றது. இதுவே உலகில் முதன் முதலில் வெற்றிபெற்ற சங்கமாக விளங்கியது. இந்தக் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கிய 28 நெசவுத் தொழிலாளர்களே 'றொச்டேல்' முன்னோடிகள் (Rochdale Pioneers) என அழைக்கப்பட்டனர்.

**பன்னாட்டு கூட்டுறவு தினம்**

இதனைத் தெடர்ந்து 1923ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஐக்கிய நாடுகள் சபை முதல் தடவையாக 'பன்னாட்டு கூட்டுறவு தினத்தை' அறிவித்தது. அன்று தொட்டு ஒவ்வோர் வருடமும் 'பன்னாட்டு கூட்டுறவு தினம்' கொண்டாடப்பட்டு வருகிறது. உலகில் உள்ள அனைத்து கூட்டுறவாளர்களும் இந்தத் தினத்தை கூட்டுறவின் மகோன்னதம் சிறக்க ஒவ்வோர் ஆண்டும் கடைப்பிடித்து வருகின்றனர்.

அந்தவகையிலே, "பசுமையான ஓர் உலகம் மற்றும் சிறந்த ஓர் உலகின் பொருட்டு கூட்டுறவு" என்பது இவ்வாண்டுக்குரிய கூட்டுறவு தின தொனிப்பொருளாக அமைந்துள்ளது. இலங்கையிலும் பன்னாட்டு கூட்டுறவு தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள 'வெபர்' விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ள 96 ஆவது பன்னாட்டு கூட்டுறவு தின நிகழ்வுகள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளன.

*கட்டுரையாளர்: கல்விப் பயிற்சியளிப்பு உத்தியோகத்தர், யாழ். மாவ்ட்டக் கூட்டுறவுச்சபை.*

---

**நாளை**

**08.07.2018**

ஞாயிற்றுக்கிழமை

ஆனி 24

திதி: தசமி மு.இ. 07.18 வரை
நட்சத்திரம்: பரணி பி.இ. 03.38 வரை
சுபநேரம்: 08.58 – 10.28 வரை
ராகுகாலம்: 04.28 – 05.58 வரை

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நல்ல செய்திதான், ஆனால் ஆட்சியாளர் காதில் ஏறுமா?

இலங்கையில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவது நாட்டுக்குப் பொருளாதார ரீதியில் நன்மையளிப்பதாக இருக்கும் என்று தெரிவித்திருக்கிறார் கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப். தனது தூதுவர் பதவியில் இருந்து விடைபெற்றுச் செல்லுகையில் எதிர்க் கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

2015 தை மாதத்தில் அதிகார மாற்றம் ஒன்று இலங்கையில் ஏற்பட்டதன் பின்னர் கொழும்புக்கான தூதுவராக வந்தவர் கெசாப். அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவால் அவரது நியமனம் வழங்கப்பட்டிருந்தது. சீனச் சார்பு மகிந்த ராஜபக்ச அரசின் ஆட்சி வீழ்த்தப்பட்ட நிலையிலும், மேற்கு நாடுகளையும் இந்தியாவையும் அனுசரித்துச் செல்லக்கூடிய மைத்திரி ரணில் ஆட்சி அதிகாரத்திற்கு வந்திருந்த நிலையிலும் பணிக்கு வந்தவர் அவர்.

அதாவது இலங்கையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு மற்றும் நல்லிணக்கம் சார்ந்த மேற்குலகின் பிரதிநிதியாக அவரைப் பார்க்கலாம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மைத்திரி–ரணில் அரசு பதவியேற்றதன் பின்னர் இடம்பெற்ற அரசியல் நகர்வுகள் அனைத்தினதும் பன்னாட்டுச் சாட்சி அவர். அதற்கும் மேலாக, அந்த நகர்வுகளின் பின்னணியில் அவர் கணிசமான பங்கைக் கொண்டிருந்தார் என்றும் சொல்லலாம்.

புதிய அரசமைப்புக்கான பணிகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம், நல்லிணக்கச் செயற்பாடுகள் என்று அனைத்தினதும் பார்வையாளனாகவும், பங்காளியாகவும் இருந்தவர் அவர். ஆட்சியில் இருக்கும் கூட்டு அரசின் பலம், பலவீனம், எதிர்காலம் குறித்து ஆழ அகலமாகத் தெரிந்திருக்கக்கூடியவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களின் அதிக நம்பிக்கையைப் பெற்றவர்களில் ஒருவர் என்றும்கூடச் சொல்லிக்கொள்ளலாம்.

அவரும் அவரது நாடும் எதிர்பார்த்ததுபோல, இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகள் வெற்றிகரமான பாதையில் நகரவில்லை என்பதைப் பார்த்தவர் என்பதற்கும் அப்பால், அந்த முயற்சியை வெற்றியை நோக்கி நகர்த்துவதில் தோல்வியைக் கண்டவர் என்றும் அதுல் கெசாப்பைச் சொல்லலாம்.

அவர் பதவியில் இருந்து விலகிச் செல்லும் இன்றும்கூட இலங்கையில் நிரந்தர அமைதி உருவாகுமா இல்லையா என்பது கேள்விக்குறியாகவே தங்கியிருக்கிறது என்பது துன்பியல்தான். இலங்கையில் தனது அனுபவங்களின் அடிப்படையில் இலங்கை அரசுக்கு கெசாப் ஒரு சில விடயங்களைச் சம்பந்தனது சந்திப்பின் ஊடாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஐ.நா. மனித உரிமைகள்சபையில் உறுப்பினராக இருந்தாலென்ன இல்லாவிட்டால் என்ன, அங்கு நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு (இதனை அவர் முன்னரும் வலியுறுத்தியிருந்தார்), நிலையான அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்குச் சாதகமான சூழல் அவசியம், பன்னாட்டு அரங்கில் கொழும்பு பெற்றுள்ள நன்மதிப்பை அலட்சியம் செய்யக்கூடாது, புதிய அரசமைப்பை உருவாக்குவதன் மூலம் முதலீட்டாளர்களைக் கவர்ந்து பொருளாதார அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்ள முடியும் ஆகியவற்றை அவர் எடுத்துக்கூறியிருக்கிறார்.

ஏனைய விடயங்கள் இதற்கு முன்னரும் பல தடவைகளில் அமெரிக்காவால் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு புதிய அரசமைப்பு முக்கிய பங்கை ஆற்றமுடியும் என்பதும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது.

விரைவான பொருளாதார வளர்ச்சி ஒன்றையும், மேம்பட்ட வாழ்க்கை முறை ஒன்றையும் இலங்கை வாழ் மக்கள் குறிப்பாகச் சிங்களவர்கள் அவாவி நிற்கின்றபோது, அதுவும் போர் ஓய்ந்து அதற்குச் சாதகமான சூழல் ஏற்பட்டிருக்கின்றபோது புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உறுதியான அடித்தளம் ஒன்றை ஏற்படுத்திவிட்டால் முதலீட்டாளர்கள் நம்பிக்கையுடன் இலங்கையில் முதலிட வருவார்கள். முதலீடுகள் அதிகரிக்கும்போது விரைவான பொருளாதார வளர்ச்சியும் சாத்தியமாகும். இது சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் நன்மை பயக்கும்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது இலங்கையில் நிலையான அமைதிக்கான அத்திபாரம். அந்த அத்திபாரம் அமைந்துவிட்டால் இலங்கையில் பொருளாதாரம் உள்ளடங்கலாக அபிவிருத்தியும் சாத்தியமாகிவிடும். அதனைச் சாத்தியமாக்கவேண்டுமானால் தீர்வுக்கான அடித்தளமான புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதுவே கெசாப் கூறிச் சென்றிருக்கும் விடயம். கட்சி அரசியலுக்குள் அமிழ்ந்துபோய், எல்லா வாய்ப்புகளையும் நாசமாக்கிக்கொண்டிருக்கும் கொழும்பின் ஆட்சியாளர்களுக்கு [illegible] செய்தி [illegible]

# தத்தமது எதிர்தரப்புக்கள்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் அரசியல்வாதிகள்

*நாட்டின் இன்றைய அரசியல் நிலைமை குறித்து 'டெயிலி நியூஸ்' ஆங்கில நாளிதழில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.*

தமிழில்:- ஆனந்த்



சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிரி ஜயசேகர, கனவிலும்கூட கற்பனை பண்ணியிருக்க மாட்டார், நிதிமோசடி சம்பந்தமாக அவர் வெளியிட்ட கருத்து இவ்வளவு விரைவிலேயே அவருடைய குருவான மகிந்த ராஜபக்சவின் தலைமேல் தான் பெரும் இடியாக இறங்கிவிடும் என்று.

தான் ஒரு மில்லியன் (10இலட்சம்) ரூபாய் பெறுமதியான காசோலை ஒன்றை தேர்தல் நிதியாக பெற்றுக்கொண்டமையை தயாசிறி ஜயசேகர ஒப்புக்கொண்டபோதிலும், அதனை அனுப்பியவர் யார் என தனக்குத் தெரியாது என்று கூறியுள்ளார். ஆயினும் குறிப்பிட்ட இந்த 10இலட்சம் பெறுமதியான காசோலை 'பேர் பேச்சுவல் றெசறீஸ்' நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் தான், இந்தத் தொகையை அனுப்பியுள்ளமை நீதிமன்ற விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

### தேர்தல் செலவுக்குப் பணம்பெற்றுக் கொண்டமையை ஒப்புக்கொண்ட அமைச்சர்கள்

இதனைத் தொடர்ந்து அமைச்சர் சரத்பொன்சேகா மற்றும் ராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க ஆகியோரும் தேர்தல் செலவுகளுக்காக பேர் பேச்சுவல் றெசறீஸ் நிறுவனத்திடமிருந்து தாம் பணம் பெற்றமையை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இப்பொழுது வெளிவந்துள்ளது மாபெரும் ஊழல் செயற்பாடொன்று தொடர்பான இரகசியம். மகிந்த ராஜபக்ச தமது அரசதலைவர் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகளுக்காக வர்த்தகரொருவரிடமிருந்தோ, அல்லது உள்நாட்டு வங்கியொன்றிடமிருந்தோ பணம் பெறவில்லை. வெளிநாடொன்றிடமிருந்து அதாவது சீனாவிடமிருந்து ஏறக்குறை 1.2பில்லியன் ரூபா நிதியை (7.6மில்லியன் அமெரிக்க டொலர்) தேர்தல் பரப்புரைச் செயற்பாடுகளுக்கான அன்பளிப்பாகப் பெற்றுக்கொண்டுள்ளதாக நியூ யோர்க்டைம்ஸ் என்ற பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மேற்குலக நாடுகளுடன் தொடர்புகளைப்பேணி நாட்டை சீரழிக்கிறது என்ற குற்றச்சாட்டை முன்வைத்து மகிந்த ராஜபக்ச கூட்டரசுக்கு எதிராகப் பரப்புரை செய்துவரும் நிலையில்தான் அவருக்கெதிரான 1.2 பில்லியன் ரூபாய் ஊழல் விவகாரம் குறித்த தகவல் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை ஊடாக வெளிவந்துள்ளது.

சீனாவின் சீனதுறைமுக பொறியியலாளர் கூட்டுத்தாபனம்தான் இந்த 1.2பில்லியன் ரூபாய் பணத்தை, மகிந்த ராஜபக்சவின் தேர்தல் பரப்புரைக்காக இலங்கையின் சார்ட்டட் வங்கி ஊடாகவே வழங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

### சீனாவுக்கு முன்னுரிமை வழங்கிய மகிந்த

சீனாவின் மிகநெருங்கிய ஆதரவாளரான மகிந்த ராஜபக்ச, இலங்கையில் மேற்கொள்ளப்படும் சகல பெரிய திட்டங்களின் நிர்மாணப்பணிகளையும் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் தெற்கு அதிவேக பாதை போன்றவை உட்பட , மற்றும் எல்லாவற்றுக்குமான அபிவிருத்தித் திட்டங்களைச் சீனாவுக்கே வழங்கியிருந்தார்.

இந்த நிலையில்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராசகருணா, நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் செய்திப்படி, மகிந்த ராஜபக்ச சீனாவிடமிருந்து 7.6மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொண்டுள்ள கூறப்படுவதன் உண்மையைக் கண்டறிவதற்கான அரசதலைவர் விசாரணை ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ச அம்பாந்தோட்டை துறைமுகப் பணியை ஆரம்பித்ததன் நோக்கமே, சீனாவிடமிருந்து இலஞ்சம் பெறுவதற்காகத்தான் எனவும், இந்த திட்டம் நட்டத்தில் இயங்கி பின்னர் அதனை சீனாவுக்கு விற்பதுதான் மகிந்தவின் திட்டம் என்றும் அவர் கூறியிருந்தார். மகிந்த அப்படிக் பெற்றக் கடனையே இந்த அரசு மீள்செலுத்துகிறது எனவும் அவர் கூறினார்.

### மகிந்தவுக்கு நிதி வழங்கப்பட்டதான குற்றச்சாட்டுத் தொடர்பாக வெளியான விமர்சனங்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராசகருணவின் எதிர்பார்ப்புபடி அரசதலைவர் விசாரணை ஆணைக்குழுவொன்று நாட்டின் பொருளாதாரத்தை பெரிய அளவில் பாதித்த மத்திய வங்கி பிணைமுறி மோசடி பற்றி விசாரிப்பதற்காக உருவாக்கப்பட்டது. அதேபோல நாட்டின் பொருளாதாரத்தை பெரிய அளவில் உறிஞ்சியெடுத்த அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணிகளுக்காக சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடன் இலங்கை மக்கள்மீது பெரும் சுமையாக அமைந்துள்ளது. தற்போதைய அரசு நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்துவிட்டது என குற்றம் சாட்டும் மகிந்த ராஜபக்ச, தாம் இந்த நாட்டின் பொருளாதாரத்தை எவ்வளவு தூரம் சீரழித்துள்ளார் என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

நியூயோர்க்டைம்ஸ் பத்திரிகையின் குறிப்பிட்ட இந்த ஊழல் சம்பந்தமான குற்றச்சாட்டுக்கு கூட்டு எதிரணியினர் விநோதமான கருத்துக்களை வெளியிட்டு அந்தக் குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவிக்கிறார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பொதுச் செயலாளராக அந்தவேளையில் கடமையாற்றிய சுசில் பிரேம ஜயந்தவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளராக அநுர பிரியதர்சன யாப்பாவும் இந்தக் கொடுக்கல் வாங்கல் உண்மையில் இடம் பெற்றதா என்பது குறித்து அறிவர். ஆகவே அவர்களிருவருக்கும்தான் என்ன நடந்தது என்பது தெரியும் என்று கூறியமை மக்களை முட்டாள்களாக்கும் முயற்சியாகும் எனவும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட சுசில் பிரேமஜயந்த அநுர பிரியதர்சன ஆகியோருடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் புரட்சிக் குழுவும், பெயரளவில் கூட்டு முன்னணியின் அங்கத்தவர்களும் இந்தச் செய்தியை ஊதித்தள்ளிவிடுவார்கள்.

கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செகான் சேமசிங்க நியூ யோர்க்டைம்ஸ் பத்திரிகையின் செய்திக்கு மறுப்புத் தெரிவித்தது மட்டுமல்லாது அந்த பத்திரிகையுடன் தொடர்பு ஏற்படுத்தியதாகக் கூறப்படும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் ஆங்கில அறிவையும் பரிகசித்துக் கருத்துக் கூறியுள்ளார். குறிப்பிட்ட இந்த நியூயோர்க்டைம்ஸ் பத்திரிகை, 60மில்லியன் ரூபாய் பணம் ராஜபக்சவின் ஆதரவாளரான ஒரு பிரபல பௌத்த பிக்குவுக்குத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. அரசுக்கு எதிரான தவறான பிரசாரங்கள் இப்படிப்பட்ட பிக்குமார்களால்தான் மேற்கொள்ளப்படுகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பௌத்த விகாரைகள் தான் இப்போது மகிந்த ராஜபக்சவின் தேர்தல் பரப்புரை நிலையங்களாக மாறியுள்ளன.

# அடுத்து வரும் மாகாண சபை தேர்தல் பற்றிய ஒரு பார்வை

அன்ரனி பீற்றர்

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஆட்சியில் அமர வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

எதிர்காலத்தை முன்னோக்கிய சிந்தனையும், செயற்பாடுமுள்ள தலைவர்களைத் தான் மக்கள் விரும்புவார்கள். தலைவர்கள் திடீரென்று தோன்றுவதில்லை. மக்களுக்காக - இனத்தின் விடிவுக்காக, விருத்திக்காக, பாதுகாப்புக்காக, யார் உண்மையுடன் செயற்படுகின்றனரோ அவர்களை மக்கள் மறந்து விடுவதில்லை. இதுவே உரிமைப் போராட்டங்களால் வெற்றி பெற்ற நாடுகளின் வரலாறு. இது அரசியல் சமூக பொருளாதார ஆன்மிக வாழ்வுக்கும் பொருந்துவதாகும்.

**மாகாணசபைத் தேர்தல்**

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் படி அன்றைய காலத்தில் விடுதலைக்காகப் போராடிய தலைவர்களால் ஏற்றுக்கொள்ள மறுப்புத் தெரிவித்த ஒருசபைதான் மாகாண சபை. வடக்கு கிழக்கு இணைந்திருந்த நிலையில் முதலாவது மாகாணசபை வலிந்து திணிக்கப்பட்டது. எந்தவித அதிகாரமும் இல்லாத சபை என்று சொல்லப்பட்ட மாகாணசபைத் தேர்தல் வடக்கு, கிழக்கு என மாகாணங்கள் பிரிக்கப்பட்ட பின்னர் இரண்டாவது மாகாண சபைத் தேர்தல், இந்த ஆண்டின் இறுதியில் நடைபெற இருக்கின்றது. குறிப்பாக வட மாகாண சபைத் தேர்தல் இம்முறை பல முனைப் போட்டித் தேர்தலாக இடம்பெறப் போகின்றது என்பதை நாளேடுகளில் எழுதப்படும் செய்திகள் சுட்டி நிற்கின்றன. முதலாவது வட மாகாணசபையின் ஆட்சியிலே, மக்கள் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் எதுவும் கண்ணுக்கு புலப்படாமல் இருப்பதாக மக்கள் மத்தியில் இருந்து கருத்துக்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. காரணம், ஆமை வேகம். செயற்பாடுகளைத் திட்டமிடுவதிலும், செயற்படுத்துவதிலும் இரண்டுபட்ட நிலைமை, முடிவுகள் எடுக்கப்படும்போது செயற்றிட்டங்கள் காலாவதியாகும் நிலமை, தேவையுள்ள விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமை, மக்கள் கருத்துக்கள் மதிக்கப்படாமை, நிர்வாகத்துக்குள்ளே ஒற்றுமையில்லாத நிலைகள் என்பவை இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் மக்களுக்கு அரசியல் தலைவர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன. நடைபெறப்போகும் மாகாணசபைத் தேர்தலிலே போட்டியிடும் தலைமைகள் மக்களின் கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாக நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

**வெற்றிபெறமுடியாமற்போன காரணங்கள்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து செயற்பட்டுவந்த தமிழ்க் கட்சிகளிலே தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஏற்கனவே கருத்து முரண்பாட்டால்



வெளியேறி இருந்தது. ஏனைய கட்சிகளான ரெலோ, புளட், ஈ பி.ஆர்.எல்.எப் கட்சிகளுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே தொகுதிப் பங்கீடுகளில் முரண்பாடுகள் ஏற்பட்டு பின்னர் சமரசத்துக்கு வந்த நிலையிலே சென்ற (செயற்பட்டுக் கொண்டு இருக்கின்ற) மாகாணசபையின் பதவிக்காலம் நிறைவுக்கு வரும் கட்டத்தை எட்டியுள்ளது. ஒன்றிணைந்து செயற்பட்டிருக்கவேண்டிய மாகாண சபை, கருத்துப் பிறழ்வுகளாலும், செயற்பாட்டுப் பின்னடைவுகளைச் சந்தித்தது. அமைச்சுக்களின் செயற்பாடுகளிலே குற்றம் கண்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட முறைகள், புதிய அமைச்சரவையால் ஏற்பட்ட சர்ச்சைகள், இவற்றிலே காலம் வீணடிக்கப்பட்டமை, என்பவை காரணமாக முழுமையான நிர்வாக அபிவிருத்தியை அடைய முடியாமல் பின்தள்ளப்பட்டது. ஒரே கட்சி உறுப்பினர்களே இரு அணிகளாகச் செயற்பட்டமை, அமர்வுகள் ஒழுங்காக நடைபெற்றனவே ஒழிய, வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தித்திட்டமெதனையும் கூடச்செயற்படுத்த முடியாமல் போனமை, கிராம ரீதியிலான அபிவிருத்தியில்கூட அக்கறை செலுத்தப்படாமை, போன்றவை மக்கள் மத்தியிலே விசனத்தை ஏற்படுத்தியுள்ளன. இருந்ததைக் கொண்டு எவ்வளவு முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது என்பதும், தெளிவற்ற நிலையிலேயே உள்ளதையும் குறிப்பிடலாம்.

**கூட்டமைப்பின் ஒற்றுமை வலுப்படுத்தப்பட வேண்டும்**

உள்ளதை உயர்வாகச் செய்திட, தமிழர் உரிமைக்காகப் போராடும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும். ஆரம்பகாலத்திலிருந்த ஒற்றுமையும், உரையாடலும், செயற்பாடும் மீண்டும் கட்டி எழுப்பப்படும்போது உறுதியான, வலுவான, விடுதலைக்கான அழுத்தத்தை நாம் பிரயோகிக்க முடியும். அவர்களாலே எமது மண்ணும் வளமும் பாதுகாக்கப்பட முடியும். கூட்டிணைவானது, மாற்றத்துக்கு வழிவகுத்து அதிகாரப் பகிர்வை நோக்கி நகரக்கூடிய நிலைமை உருவாகும். இதனை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்றால் தேர்தலுக்காக மட்டும் எமது ஒற்றுமையை வலுப்படுத்தாது, தொடர்ச்சியான கூட்டமைப்பின் செயற்பாட்டிலே, கட்சிகளிடையே பிளவு ஏற்படா வண்ணம் தொகுதிப் பங்கீடோ, ஆட்சிப் பங்கீடோ, செயற்பாட்டுப் பங்கீடோ அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் வகையில் எழுத்துமூலமான உடன்பாட்டுக்கு வருவதுடன், முரண்பாடுகள் ஏற்படும்போது ஒன்றுபட்டு சுமுக நிலைக்கு வரக்கூடிய கட்டமைப்பை உருவாக்க வேண்டும். பாகப்பிரிவினையாலே பல பிரிவினைகளும் முறிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன. பேச்சுவார்த்தை, உடன்பாடு, எழுத்து மூலமான ஆவணப்படுத்தல் மூலம் பிரிவினை ஏற்படாமல் தடுக்கலாம். உதாரணத்துக்கு மாகாணசபைத் தேர்தலை கூட்டமைப்பில் ஆரம்பத்தில் இணைந்திருந்த கட்சிகளை மீண்டும் ஒன்றிணைந்து அதிகூடிய வாக்குகளைப் பெறும் கட்சியின் பிரதிநிதியை முதலமைச்சராகவும், ஏனைய நான்கு கட்சிகளின் பிரதிநிதிகளில் கட்சி சிபார்சு செய்யும் ஒருவர் என்ற அடிப்படையில் நால்வரை நான்கு அமைச்சர்களாகவும் ஐந்து ஆண்டுகளுக்கோ அல்லது இரண்டரை ஆண்டுகள் நால்வர் மற்றைய இரண்டரை ஆண்டுகள்வேறு நால்வராக எண்மருக்கு வாய்ப்புக்கள் அளிக்கும்போது, பகைமைகளுக்கு இடமில்லாமல் போகும். இதனை விட, கூடியவாக்குகளைப் பெற்ற கட்சி முதலமைச்சரையும் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகள் இரண்டரை ஆண்டுகள் நால்வர் அமைச்சர்களாகவும், ஏனைய இரண்டரை ஆண்டுகள் (முதலமைச்சரைவிட்டு) கட்சிகளின் அங்கத்தவர் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் விகிதாசார முறையில் நான்கு அமைச்சர்களைத் தெரிவு செய்து அந்தக் கட்சி அங்கத்தவர்களுக்கு உரிய இடம் அளிக்கும்போது பாகுபாடுகள், செல்வாக்குகள், முன்னுரிமைகள் இல்லாமல் போகச் செய்ய முடியும்.

**வாக்காளர்களே தீர்ப்பாளர்கள்**

மக்கள் சக்தியே மாற்றத்தின் சக்தி. மக்கள் தான் முடிவுசெய்வார்கள். வரப்போகும் மாக்காணசபைத் தேர்தலில் மக்கள்தாம் விரும்பும், தீர்மானிக்கும் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு இடையூறுகள் செய்யாமல் பொது அமைப்புக்கள் கண்காணிக்கும்போது, நீதியான, நியாயமான, வன்முறையில்லாத ஜனநாயக ரீதியிலான வாக்களிப்பு இடம்பெற வாய்ப்புக்கள் அதிகரிக்கும். பரீட்சையில் புள்ளிகள் அடிப்படையில் திறமைகள் குறிப்பிடப்படுவது போல் விகிதாசார முறையில் கட்சிபெற்ற வாக்குக் ஏற்ப பிரதிநிதிகள் தெரியப்படும்போது பிரச்சினைகளுக்கு இடமில்லாமல் தத்தமது தகுதிப்பாட்டின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட உரிமைப்பாட்டை ஒற்றுமையுடனும், கூட்டிணைவுடனும் ஒரே குரலாக வெளிப்படுத்தும்போது சிறு பான்மையிலும் பெரும்பான்மை வலுவை கொண்டதாக, எமது தமிழ்மக்களின் ஒட்டு மொத்தக் குரலும், எதிர்ப்புக்களும், அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட தமிழ் கட்சிகள் ஒற்றுமையுடன்செயற்படமுன்வாருங்கள். தேவைகளைவிடத் தீர்வே முக்கியம்.

## ஆசிரியருக்கான கடிதம்

# உரிய பொருத்தமான மாற்றுத் திட்டமொன்று அவசியம்

தீவக மக்களின் குடிதண்ணீர் வழங்கல் பிரதேசமாக சாட்டி , மண்கும்பான் பிரதேசம் இன்றுவரை இருந்துவருகிறது. மண்கும்பான் குழாய் மூலம் குடிதண்ணீர் பெறும் பிரதேசமாகவும், சாட்டி குழாய் மூலமும் பவுசர் மூலமும் குடிதண்ணீர் பெறும் இடமாகவும் உள்ளன. சாட்டி பகுதியில் பல கிணறுகள் உள்ளன. சாட்டி சித்தாத்திரை மாதா ஆலயத்திலும் ஆலய நிர்வாகத்திற்கு உட்பட்ட இடங்களிலும் நன்னீர்க் கிணறுகள் உள்ளன. குடிதண்ணீர் பெறுவதற்காக பல கிணறுகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. சில கிணறுகள் அயல் கிராமத்தவர்களால் நேரடியாகப் பயன்படுத்தப்பட்டன. திருநாள் காலங்களில் ஆலயக்கிணற்றைப் பொதுமக்கள் பயன்படுத்தினர். முகாமைத்துவம் எதுவும் இல்லாத நீர் பெறுகையால் ஆலயத்தின் அருகில் உள்ள கிணறு, வாசலில் உள்ள கிணறு உட்பட இந்தப்பிரதேசத்தில் உள்ள பல கிணறுகளின் நீரின் தன்மை மாற்றமடைந்து நன்னீர் உவ்ர் நீராகி வருகிறது. இந்தப் பகுதி மக்கள் பலர் தமது விவசாய முயற்சிகளைக் கூடக் கைவிட்டு விட்டனர். தொடர்ந்து குடிதண்ணீர் பாவனைக்காக மேலும் மேலும் நீர் பெறப்படுவதால் மிகுதிக் கிணறுகளின் நன்னீர்த் தன்மை பாதிப்பு அடையுமா? என்ற அச்சம் இந்தப் பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இந்த விடயம் அரச உயர் அதிகாரிகள் மட்டம் வரையில் தெரியப்படுத்தப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக வேலணை பிரதேச செயலாளர் நேரடியாக நிலமைகளை ஆராய்ந்து பிரதேசசபை தவிசாளர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உத்தியோகத்தர்கள் அனைவரதும் ஒத்துழைப்புடன் துரிதமாக சில மாற்றங்களை ஏற்படுத்தினார்.

நீர் வழங்கலில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் காரணமாக, நீர் பெறுகையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பல கிணறுகளின் நீரின் நன்னீர்த் தன்மை மாற்றமடைந்த நிலையில் சில கிணறுகளில் மட்டும் நன்னீர் பெறக்கூடியதாக உள்ளது.

தொடர்ந்து குடி தண்ணீரை எடுத்து வந்தால் விரைவில் எல்லாக் கிணறுகளும் உவர்ப்பாகிவிடுமா? என்றதோர் அச்சம் இந்தப் பகுதி மக்களிடம் நிலவுகிறது. மக்களிடையே ஏற்பட்டுள்ள இந்த அச்சத்தைப் போக்கக்கூடிய வகையில் உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும் இது வரையில் வெளியிடப்பட்டதாக அறிய முடியவில்லை. இந்த இடர் நிலையிலும் இந்தப் பகுதி மக்கள் தமது பகுதிகளிலுள்ள கிணறுகளிலிருந்து குடிதண்ணீர் பெறுவதற்கு எவ்வகையிலும் இடையூறு செய்யவில்லை. தொடர்ந்தும் நீர் பெறுவதால் பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதி மக்களுக்கும், ஏனைய மக்களுக்கும் நீர் பெறுகைக்கான மாற்றுத்திட்டமொன்றை விரைவாக செயற்படுத்த வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த விடயத்தின் உண்மைத் தன்மையை எவர் விரும்பினாலும் நேரடியாக வந்து பார்க்கலாம். உரிய தரப்பினர்கள் இந்தப் பிரச்சினைக்கான உரிய தீர்வை விரைவாகப் பெற்றுத் தருவார்களா?

*அ.அன்ரன் யேசுதாசன்*
*வேலணை.*

## சிந்திக்க ...

சிரியுங்கள் தண்ணியடிக்காமல்...
பேசுங்கள் அலைபேசி இல்லாமல்...
கனவு காணுங்கள்
போதை வஸ்து இல்லாமல்...
புன்னகையுங்கள் கமரா இல்லாமல்...

சிலதை காதில போட்டுக்குங்க... பலதுக்கு காதை குளோஸ் பண்ணிடுங்க... எதையுமே இதயத்துக்கு கொண்டு போகாதீங்க...

வாழ்க்கையில் ரிஸ்க் எடு... ஜெயிச்சா நீ லீடர். இல்லாட்டி அட்வைஸர்..

ஊரைச் சுத்தி புயலே அடிச்சாலும் டியூப்ல காத்து இருந்தாதான் சைக்கிள் ஓடும்...



**தவழ்வது, நடப்பது, பிறகு மொபைல் பார்ப்பது. இவைதான் இன்றைய குழந்தைகளின் வாழ்வியல் வளர்ச்சி!**





## பார்வையற்றவராக நடிக்கும் வரலட்சுமி

தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் நடிகைகளுள் ஒருவரான வரலட்சுமி சரத்குமார் தொடர்ந்து வித்தியாசமான கதைக்களங்களைத் தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார். அவரது நடிப்பில் மிஸ்டர்.சந்திரமௌலிஅடுத்ததாகசண்டக்கோழி2,எச்சரிக்கை, இது மனிதர்கள் நடமாடும் இடம், கன்னிராசி, வெல்வட் நகரம், சர்கார்,மாரி2,நீயா2,பாம்பன்.சக்திஎனபடங்கள்வரிசைக்கட்டி வருகின்றன. தற்போது கன்னட இயக்குநர் ஜே.கே இயக்கும் 'ராஜாபார்வை' என்ற படத்தில் வரலட்சுமி பார்வையற்ற பெண்ணாக நடிக்கவுள்ளார். இந்தப் படம் தனக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கும் என வரலட்சுமி தெரிவித்துள்ளார்.



## 'செல்' அரிக்கும் மனம்

ஒருவர் நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்தார். அவர் செல்போனில் உரையாடிக் கொண்டு சைகையிலேயே அவரை வரவேற்று உட்கார வைத்துவிட்டு தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தார். காத்திருந்து நொந்துபோனவர் ஒரு கட்டத்தில் அங்கு இருந்தபடியே அவருடைய நம்பருக்கு போன் செய்தார். கால் வெயிட்டிங்கில் அவரின் நம்பரை பார்த்தவர்"டேய்உன்னோடநம்பர்லஇருந்துபோன்வருதுடா" என்று அதிர்ச்சியானார். "வீட்டுக்கு வந்தும் உன்கூடப் பேச முடியல்ல அதான் போன் பண்ணினேன்" என்றார்.

**செல்போன் வந்த பிறகு கவனம், விழிப்பு, உணர்வு, அன்பு, அளவளாவல், குழந்தைகளுடனான கொஞ்சல்** என்று எல்லாவற்றையும் இழந்து நிற்கிறோம்.
'அருளில்லாதவருக்கு அவ்வுலகம் இல்லை...
செல்லில்லாத வருக்கு இவ்வுலகம் இல்லை'ன்னு ஆகிப்போச்சு நிலைமை

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | | 7 | | | |
| 3 | 4 | 9 | 8 | 5 | 1 | | | 7 |
| 5 | | | 2 | | 3 | 9 | | |
| | 3 | 2 | 1 | | | | | |
| | | | | | | | | |
| | | | | | 2 | 7 | 3 | |
| | | 3 | 6 | | 9 | | | 8 |
| 9 | | | | 1 | 8 | | 7 | |
| | | | 7 | | 5 | | 9 | 4 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 2 | 9 | 5 | 4 | 3 | 7 | 1 |
| 5 | 7 | 4 | 8 | 3 | 1 | 6 | 2 | 9 |
| 1 | 3 | 9 | 6 | 7 | 2 | 8 | 4 | 5 |
| 7 | 4 | 5 | 1 | 9 | 3 | 2 | 6 | 8 |
| 9 | 6 | 3 | 2 | 4 | 8 | 5 | 1 | 7 |
| 8 | 2 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 | 3 |
| 4 | 9 | 7 | 3 | 8 | 6 | 1 | 5 | 2 |
| 3 | 1 | 6 | 5 | 2 | 7 | 9 | 8 | 4 |
| 2 | 5 | 8 | 4 | 1 | 9 | 7 | 3 | 6 |

நேற்றைய விடை

## twitter

தோழன் சுஜா@FineSuja
பணக்காரர்களே
அனுபவிக்கின்றனர்
விலை உயர்ந்த நோய்களை..!!

சிலந்தி™@nandhu_twitts
சின்ன வயசில சரியா படிக்கலைனு கவலப்படாதிங்க..
உங்க குழந்தையோட வீட்டுப் பாடம் உங்கள திரும்பவும் படிக்க வைக்கும்..!

## மெஸ்ஸியும் ரொனால்டோவும் தங்கள் நாட்டுக்கு செல்லும் வழியில்...




## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமித மான வளர்ச்சி உண்டாகும். இலாபம் பன்மடங்கு உயரும்.

**இடபம்:** மனதில் சஞ்சலம் வந்து விலகும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணிகளை நிறைவேற்றுவது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** தவறைத் திருத்திக் கொள்ள முயல்வீர்கள். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும்.

**கடகம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் உண்டாகும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** சிலர் சுயநலத்துடன் உங்களை அணுகலாம். தொழில், வியாபாரத்தில் மித மான வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**கன்னி:** உங்கள் பேச்சில் வசீகரம் உண்டாகும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். ஆதாயம் உயரும். பெண்கள் தர்ம சிந்தனையுடன் செயல்படுவர்..

**துலாம்:** பேச்சு. செயலில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் குறைகளை உடனடியாக சரிசெய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** ஆன்மிக சிந்தனையுடன் செயல்படுவீர்கள். தொழில். வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்கும். வருமானம் உயரும். குடும்பத் தேவை குறைவின்றி நிறைவேறும். பணியாளர்கள் பதவி

**தனுசு:** சவால்களை ஏற்று தடைகளை தகர்த்தெறிய முயல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால்சாதனைபடைப்பீர்கள். வருமானம் பன்மடங்கு உயரும்.

**மகரம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

**கும்பம்:** மனதில் அதிருப்தி உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். பிறருக்காகப் பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**மீனம்:** புத்தி சாதுர்யத்தால் முயற்சியில் வெற்றி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். நண்பரிடம் கடனாக கொடுத்த பணம் கிடைக்கும்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை சித்திரபாட பகுதிநேர ஆசிரியர் இ.கஜேந்திரா அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் அல்லிமலர் இராசதுரை**

கடந்த 07.06.2018 அன்று காலமானார். அவர்களின் 31ஆம்நாள் நினைவு தினம் இன்று (07.07.2018) சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்நாளில் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிசங்கம்,
யா/மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 . 12 . 1946 | 07 . 06 . 2018 |

எமது பாடசாலை ஆசிரியர் இ.கஜேந்திரா அவர்களின் அன்புத் தாயார் **அமரர் இராசதுரை அல்லிமலர்** அவர்களின் 31ஆம் நாள் நினைவுதினத்தை நினைவுகூர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 08.06.2018 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் ஆனந்தராசா நற்குணராஜா**

மலர்வு
06. 09.1962

உதிர்வு
08.06.2018

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (06.07.2018) வெள்ளிக் கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (08.07.2018), ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நல்லூர் சட்டநாதர் கோயில் அருகிலுள்ள திவ்யஜீவனசங்க மண்டபத்தில் நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பவிளக்கு அணைந்த செய்திகேட்டு உடன் ஓடிவந்து துயரத்தில் பங்குகொண்டோருக்கும், தொலைபேசி வாயிலாகவும், ஊடகங்கள் வாயிலாக வும் ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும், துண்டுப்பிரசுரங்களை வெளி யிட்டவர்களிற்கும் மற்றும் எமது துன்பவேளையில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்

52, குமார வீதி, நல்லூர்.
077 930 9738, 021 222 7823

**குடும்பத்தினர்.**

# கட்டடப் பொருள்கள் விற்பனைக்கு

| | |
|---|---|
| அத்திபாரக் கல் 6"x9" 3 கியூப் | - 22,000/- |
| 20:5 சல்லி 3 கியூப் | - 32,000/- |
| ¾" சல்லி 3 கியூப் | - 33,000/- |
| 6" கொங்கிறீற் கற்கள் 1 | - 43/- (போக்குவரத்துக் கூலி அறவிடப்படும்) |

**077 635 9488**

(CS/180477)(11,17)

# மீண்டும் எமது மண்ணில் உதயமாகிறது

**(Govt Regd International, VE/IND/33&WI A 83347)**

வாணி சர்வதேச திருமணசேவை நிலையம் 47 வருடங்களுக்கு மேலாக சேவைபுரிந்து நாட்டின் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த அலுவலகம் மீண்டும் எமது நாட்டில் இன்னும் திருமணமாகாதவர்களுக்கு பதிவு (ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டவர்களுக்கு) கட்டணம் இலவசம். உள்நாடு, வெளிநாடு, அரச, தனியார் மணமக்கள் விவரங்கள் எம்மிடம் உண்டு. VIMB 077 522 1132, 077 310 7291, வாணி 077 285 4626 தலைமை அலுவலகம் வவுனியா, கிளை அலுவலகங்கள் வெள்ளவத்தை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில் இயங்கும். பி.ப. 5.00 மணிக்கு பின்னர் தொடர்புகொள்ளவும்.

(373/15/17)

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 06.07.2018 | 2325 | சிவப்பு |

இடம்

வெற்றி இலக்கங்கள்: 01 04 09 25

ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி: ரூ- 5,967,212/=

2018.07.08ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4624824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## கோடிபதி சனிதா

சீட்டிழுப்பு வாரம்: 311

வர்ணம்: செம்மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 2018.07.06

அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்

ரூ. 86,009,973/-

C 14 21 30 68

தொ.பே: 011 4062002 / 0114062052 Web: www.dlb.lk

1919 இற்கு அனுப்பவும்.

0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 303

வர்ணம் : செம்மஞ்சள்

சீட்டிழுப்பு திகதி: 2018.07.06

இன்றைய ஜக்பொட் பரிசு

ரூ. 80,367,535/-

வெற்றி இலக்கங்கள்

06 07 68 74 D

தொ.பே: 011 4062002 / 0114062062

1919 இற்கு அனுப்பவும்.

0114 824 824, 0112 333 778

# கண்ணீர் அஞ்சலி



**நாகலிங்கம் சிவபாதசுந்தரம்**

(ஓய்வு நிலை திட்டமிடல் பணிப்பாளர் - மாவட்ட செயலகம், முன்னாள் சமுர்த்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆதமா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**யாழ். மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கம்.**

# மரண அறிவித்தல்

**கலாபூஷணம், சங்கீதரத்தினம், கலைஞானகேசரி, ஞானஏந்தல்**

## திருமதி ஞானகுமாரி சிவனேசன்

**(இளைப்பாறிய சங்கீத ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம் கல்வி வலயம், முன்னாள் இசை ஆசிரியை - யாழ்.இந்து மகளிர் கல்லூரி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, யாழ்.பல்கலைக்கழக நுண்கலைக் கழக வருகைதரு இசை விரிவுரையாளர்)**



உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானகுமாரி சிவனேசன் நேற்று (06.07.2018) வெள்ளிக் கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் வைரமுத்து சிவனேசனின் (முன்னாள் பகுதித் தலைவர், யாழ்.மத்திய கல்லூரி) அன்பு மனைவியும், காலஞ்சென் றவர்களான தங்கராசா - ஞானாபரணம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சரஸ்வதி தம்பதி களின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி செல்வராஜா அவர்களின் அன்புச் சகோதரியும், மயூரனின் (பொறியி யலாளர்) அன்புத்தாயாரும், மேகதர்ஷினியின் அன்பு மாமியாரும், திரு. திருமதி சந்திரசேகரம் தம்பதிகளின் சம்பந்தியும், யோகானந்த ராஜாவின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.07.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு கொண்டு செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் , இசைக் கலைஞர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கமலை"
மானிப்பாய் வீதி, உடுவில்,
சுன்னாகம்.

(CS/18051) (11,17)

தகவல்:-
வை.சிவனேசன் (கணவர்)
மயூரன் (மகன்)
077 309 0580




# அறை வாடகைக்குண்டு

யாழ்.மருத்துவபீடத்திலிருந்து 300m தொலைவில் அறை வாடகைக்குண்டு. பேசித்தீர்மானிக்கப்படும்.
**மாணவிகளுக்கு மட்டும்.**

**077 852 0472** (CS/17881)(11,17)

# வேலையாள்கள் தேவை

முன்னணி தளபாட விற்பனை நிலையத்திற்கு முகாமையாளர், விற்பனையாளர், சாரதி, உதவியாளர் தேவை. **- 077 346 3332**

# விற்பனைக்கு

நல்லின சணன் 7 மாத வயதுடைய கடா மறிக்குட்டிகள் இரண்டும் ஒரு மாத வயதுடைய சணன் கடாக் குட்டிகள் இரண்டும் மற்றும் Dashound நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு.

**021 225 5059** (CS/18036)(11,17)

# வீட்டு வேலையாள் தேவை

யாழ். நகர பகுதியில் உள்ள சிறிய குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை.

**தொடர்பு - 076 120 2765**

# வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியில் உள்ள மாடி வீடு விற்பனைக்குண்டு.
(07 அறைகளுடன் பெரிய வீடு) நியாயமான விலை கேட்பவர்களுக்கு விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 187 7754**

# காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 076 964 6185**

# உதவியாளர் தேவை

. திருநெல்வேலி பகுதியிலுள்ள வைத்திய நிலையத்துக்கு பெண் உதவியாளர் தேவை.

**வேலை நேரம் -**
**3 pm - 8.pm**

**075 227 8733**

(CS/17997)(11,17)

# சிறுநீரகம் தேவை

34 வயதுடைய சிறுநீரக நோயாளி ஒருவருக்கு **O or A** குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

**077 562 1613, 076 304 7716**

# காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் அமைந்துள்ள விவசாய பண்ணைக்கு அருகில் நில.பர 5 குளி 00.05 விஸ்தீரணமுடைய காணி கட்டடத்துடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **076 702 3565**

குறிப்பு: திருமணமண்டபம் மற்றும் வைத்தியசாலைகளுக்கு உகந்த இடம்

# பூசகர் தேவை

**மகா கணபதி ஆலயம், எட்மண்டன், கனடா**

மேற்கண்ட ஆலய குருக்களுடன் சேர்ந்து பூசை செய்ய, ஸ்மார்த்த சம்பிரதாயத்தில் தகுதி பெற்றவரும், இலங்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைமுறையில் உள்ள காமிகம் மற்றும் காரண ஆகம முறையில் தேர்ச்சி பெற்ற ஒரு பூசகரின் சேவை தேவைப்படுகின்றது.

தகுதியுள்ளவர்கள் தங்களைப் பற்றிய விவரங்களுடன், அனுபவங்களையும் கொண்ட விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலம் albertamgsa@gmail.com இற்கு அல்லது தபால் மூலம் **MGSA, P.O.Box 62035, Yellowbird PO,Edmonton AB T6J 4VO. Canada** என்ற விலாசத்துக்கு **ஜுலை 31, 2018** இற்கு முன் கிடைக்கும்படி அனுப்புமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம். மேலதிக விவரங்களுக்கு மேற்குறிப்பிட்ட மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**Board of Trustees,**
Maha Ganapathy Society of Alberta,
Edmonton, Canada,
www.mahaganapathytemple.com


ES Printers
அனைத்து வகையான Printing வேலைகளையும் செய்து கொள்ள இன்றே நாடுங்கள்.
BORN TO LOVE HER
BORN TO LOVE HIM
FLORA MANGROVE
அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்
மக் பிரிண்ட் (MUG) 450/=
பனர் பிரிண்ட் (Banner), 35/=
அனைத்து அச்சக தேவைகளும்
பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்
சகல நிறுவன்ங்களுக்குமான பட்டியலேடு ( Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.
(10)
நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி. 021 222 7432
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கரடிப்போக்குச் சந்தி, ஏ - 9 வீதி, கிளிநொச்சி.
esprintersjaffna@gmail.com
www.esprinters.com
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472

ணை

# - களபூமி

# த முருகமூர்த்தி கோவில்

# ட சிறப்பிதழ் - 07.07.2018

## ள்ளோட்டம் முற்பகல் 10.30 மணி



நப்பணி சார்பில் ஆசிரியர்
ந.ச.சுகந்தன்

று சொல்லப்படும் இலங்கைத் தீவின் வடபால்
மிழும் இறைபக்தியும் தழைத்தோங்கி கொடை
ான்களும், வர்த்தகப் பெருமக்களும் வாழ்ந்து
க்கின்ற திசையில் வேண்டுவோர் வேண்டும்
யிலே கலியுக வரதனாம் வள்ளி தேவசேன
ிருந்து அடியார்களுக்கு அருள் பாலித்துக்
முருகப் பெருமானது வருடாந்த மகோற்சவ
யைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்து
வது நாள் பூங்காவன உற்சவத்துடன் இனிதே
யத்தில் கைலாச வாகன திருவிழா, மாம்பழத்
ய சப்பரம், தேர்த்திருவிழா, தீர்த்தோற்சவம்,
டபெறுவதுடன் திருமஞ்சம் இல்லாத குறை
சேர்ந்த இளம் சந்ததியினர்களின் மனதிலே
க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.
இத் திருப்பணியை அமைப்பதற்கான நிதியை
த்தினம் அவர்களுடன் கலந்துரையாடி அவர்
ர் ஐந்தாம் திருவிழா உபயகாரராகிய C.S.K.
ஒத்துழைப்பையும் நிதி உதவியையும்
ருப்பணியை செய்வதற்கு ஆலய அறங்காவலர்
ூரண சம்மதத்தை தெரிவித்தார். அதன்படி
ு ஆவணி மாதம் சி.நேசேந்திரம் அவர்களின்
பிரம்மஸ்ரீ நடராசா சிவபாலன் அவர்களுடன்
மேலும் இதற்கான நிதியை ஏனைய சுட்டியார்
யையும் பெற்றுக் கொண்டு அழகிய சிற்ப
அமைக்க எண்ணினோம்.
ஞ்சம் இல்லை என்ற குறை முருகன் அருளால்
ு கொண்ட இந்தத் திருமஞ்சத்தை சிறப்பாக
ராஜா சிவபாலன் அவர்களுக்கும், பெரும்
ச குடும்பத்தினருக்கும், C.S.K. சிவபாதசுந்தரம்
ான ஒத்துழைப்பு வழங்கிய திரு.நேசேந்திரம்
ப்பணியினை நிறைவு செய்ய பக்க பலமாகவும்
களான திரு.தினேஷ், திரு.ஹரி, திரு.ரூபன்
ற்குப் பூரணமான ஒத்துழைப்பை வழங்கிய
அவர்களுக்கும் அத்துடன் இத் திருப்பணியில்
னுடைய திருவருள் கிடைக்கப் பிரார்த்தனை
பள்ளிப் பருவத்தில் முருகப் பெருமானுக்கு
ப்பினை பெற்றதோடு மாத்திரமன்றி பெரும்
திருவருளால் தலைமையேற்று இத்திருப்பணி
மனம் பூரிப்படைவதுடன் "சிறுப்பிள்ளை
எனும் முதுமொழி பொய்ப்பித்துள்ளதோடு
பினைச் செய்வதற்கு எனக்குத் தகுதியில்லை.
னைவருக்கும் சகல செளபாக்கியங்கள் கிடை-
பது நிச்சயம் எனக் கூறி அமைகின்றேன்.

நிகழ்ச்சி காண்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. திக்குத்
ப்படுத்திய முருகன் நிறைந்த அழகுடையவர். அழகனைச்
ருகனை அமர்த்தி அழகு பார்ப்பது சிறப்பிற்குரியது. நமக்கு
பறம், கைலாசவாகனம் போன்ற ஊர்திகள் அமைத்து
வழிமுறையாகும். மாலைப் பொழுதிற்குரிய வாகனம்
இரவுப் பொழுதிற்கும் பின்பு கலைகளோடு இறைவனுக்கு
சிற்பக் கலைஞர்களுக்கும் மலராசிரியருக்கும் ஆலய
கள் கிடைப்பதாக.
ண்டும் இன்ப அன்பு".
ங்கர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.
இரண்டாவது குரு மகா சந்நிதானம்,

### ரிசனம் கோடி புண்ணியம்

து கவிலுடன் விளங்குவது காரைநகர் எனும் அருட்பெரும்
க் கொண்டு மாண்புடன் திகழும் இவ் ஊரில் முருகன்
கது திக்கரை முருகமூர்த்தி ஆலயம் எனும் இத் திருத்தலம்

பார்த்து மகிழ்வதும் கோடி புண்ணியம் என ஆகமம்
திக்கரை முருகமூர்த்தி கோயிலில் முருகப் பெருமானுக்கும்
பெற்றது மிகவும் பேறுடையது. அதை ஒட்டி திருமஞ்ச
க்குக் கிடைத்த திருவருட் கடாட்சமாகும். 07.07.2018 ஆகிய
நிறைவு கொள்வர். சைவ ஆலயங்களின் திருப்பணி
கூடிய அளவுக்கு திருமஞ்சமும் அதற்குரிய இருப்பிடமும்
ான அரும்பெரும் சைவப் பணியை மேற்கொண்ட இவ்
பாதசுந்தரம் அவர்களின் பூரண ஒத்துழைப்பும், திரு S.V.
தி உதவியுடனும் ஏனைய சுட்டியார் பரம்பரையைச் சேர்ந்த
லைகளை மிகத் திறம்பட செதுக்கிய ஆசாரி அவர்களையும்
பகுதி மக்கள் அனைவரும் தொடர்ந்து பாடுபட வேண்டும்
ருகப் பெருமானின் இருப்பிடமாகிய திருமஞ்சமே ஆலயத்
ளங்களுள் ஒன்றாகும். இந்நாளில் திருமஞ்சத்துடன் கம்பீர
க்கும் குமரக்கோட்டமாக களபூமி திக்கரை முருகமூர்த்தி
லியுக வரதனின் பாதார விந்தங்களையே பணிந்து

P.உமாசங்கர் - ஆலய அறங்காவலர்.

### வாழ்த்துரை

காரைநகர் களபூமி திக்கரை முருகப்பெருமான் கலியுகத்துக்கு கலியுகவரதனாக வள்ளிதேவசேனா சமேத சிவ சுப்பிரமணிய பெருமானாகத் திக்கரையம் பதியிலே கோயில் கொண்டு வீற்றிருந்து திருவருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார். வருடா வருடம் நடைபெறுகின்ற பிரம்மோற்சவ விஞ்ஞாபனத்தில் 5ஆம் திருவிழாவை காசி அம்பலம் எனது தந்தையார் C.S கனகரத்தினத்திடம் அறப்பணியை ஒப்படைத்தார். அவன் அருளினாலே அவன் தாள் வணங்கிஅவன் அருளினாலே இவ் அறப்பணியை செவ்வனே செயற்பட்டும் போற்றியும் குலதெய்வமாக வணங்கியும் வருகின்றேன். இறைவனை அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கின் மனிதர்களை பல்வேறு விதமான முயற்சிகளின் மூலமாக ஆட்படுத்துவதற்கு இறைவன் அனுதினமும் முயன்று கொண்டிருக்கின்றான். பரிபக்குவப்பட வேண்டும் இறைவனின் திருவடியைப் பற்ற வேண்டும் என நினைக்கின்ற மனிதர்களும் பல்வேறு விதமான முயற்சிகளின் மூலமாக முயன்று கொண்டிருக்கின்றார்கள். குரு இல்லாத வித்தை பாழ். குரு இருந்தால்தான் திருவருளைப் பெறமுடியும். குருவாய் அருள்வாய் குகனே முருகப் பெருமான் அருள் பேரருளாகி தனக்கென அழகிய திருமஞ்சத்தை அமைப்பதற்கு ஆயகலைகள் அறுபத்து நான்கும் அதில் 13ஆவது சிற்பசாஸ்திரம் (சிற்பக்கலை நூல்) விஸ்வப்பிரம்மஸ்ரீ நடராசா சிவபாலன் மூலம் குருவாக வந்து அவரது கைவண்ணத்தில் திருமஞ்சத்தை அமைத்தார் என்றால் மிகையாகாது. அழகிய திருமஞ்சத்தில் பிள்ளையார் வள்ளிதேவசேனா சமேத சிவசுப்பிரமணிய பெருமான் தண்டாயுதபாணியாக அடியவர்களுக்கு அருட்காட்சியளித்தும் வீதியுலா வந்தும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்படுத்தி மழைமாரி பொழிந்து ஒவ்வொருவரின் வாழ்விலும் படர்கின்ற நல்வினை தீவினை பாவங்களை களைத்து உய்வார்கள். உய்யும் வகையெல்லாம் உய்தொளிந்தோம் எய்யாமல் எம்மைக் காத்து திருவருள் புரியுமாறு எல்லாம் வல்ல திக்கரை முருகமூர்த்தி பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றேன்.

**க.சிவபாதசுந்தரம், 5 ஆம் திருவிழா உபயகாரர்.**

### ஆசியுரை

காரைநகர் களபூமி திக்கரை என்னும் குறிச்சியில் கருணை அருள்மிகு கந்தசுவாமிக்கு ஓர் திருமஞ்சம் அமைக்கப் பெற்றதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம். கலை உள்ளமும் கருணை உள்ளமும் கொண்டவருமான திருவாளர் C.S.K. சிவபாதசுந்தரமும், திருவாளர் S.V. முருகேசு அவர்களினதும் முருகன் அடியார்களின் பங்களிப்பாலும் இத்திருமஞ்சமானது 07.07.2018 வெள்ளோட்ட நாளிதழாக வரும் இக்கைங்கரியம் மிகவும் சிறப்பானதாகும். அத்துடன் நாம் அறியத் தக்கதாக காரைநகரில் எந்த ஒரு ஆலயத்திலும் மஞ்சம் என்பது இல்லை. ஆதலால் இவ் ஆலயத்தில் மஞ்சம் என்பது அமையப்பெற்றது பெரும் சிறப்பானதாகும். அத்துடன் இவ் ஆலயத்தில் இத் திருமஞ்சத்தை காரைநகரைச் சேர்ந்த ஆசாரியார் விஸ்வப் பிரம்மஸ்ரீ நடராஜா சிவபாலன் அவர் கைவண்ணத்தில் உருவானது மேன்மேலும் எமது ஊருக்கு கலை கலாசாரத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் அந்த முருகனுக்கும் எமக்கும் ஏதோ ஒருவகையில் தொடர்பு உண்டு என்பதனை நாமும் உங்களுடன் ஒருவராக மகிழ்ச்சியடைவதுடன் இத்திருமஞ்ச பவனி மூலம் எல்லோரும் எல்லாமும் பெற்று திக்கரை முருகப் பெருமானின் ஆசியுடன் எமது ஆசியையும் வழங்குகின்றேன். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**சிவப்பிரம்மஸ்ரீ சிவஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள்**
**பிரதமகுரு, திண்ணபுரம் ஈழத்து சிதம்பரம்**

### வாழ்த்துச்செய்தி

ஆதியில் வேல்வடிவங்கொண்டு எழுந்தருளி, இன்று மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புப் பெற்றுத் திருச்செந்தூர் முருகன் திருமேனிபோலிங்கு ஆறுமுகசுவாமியாய் எழுந்தருளி, கார்த்திகேயப் புலவருக்குக் கண்பார்வை கொடுத்துத் திக்கரை அந்தாதி பாடப்பெற்ற காரைநகர், களபூமி, திக்கரை முருகமூர்த்தி கோயிலில் எழுந்தருளி அருள்பாலிக்கும் முருகப்பெருமான் திருவீதியுலாவர C.S.K. சிவபாதசுந்தரம், S.V. முருகேசு போன்ற எம்பெருமான் மீளா அடியவர்களின் கைங்கரியத்தில் விஸ்வப்பிரம்மஸ்ரீ நடராசா சிவபாலன் அவர்கள் கைவண்ணத்தில் உருவான திருமஞ்சம் 07.07.2018 அன்று வெள்ளோட்டம் காணவிருப்பதும், முருகப்பெருமான் வள்ளி, தெய்வானையோடும் விநாயகப் பெருமான், தண்டாயுதபாணியோடுந் திருவீதியுலா வரவிருப்பதையும் நாம் காணவிருப்பது எம் பிறவிப் பயனே! வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அள்ளி வழங்கும் வள்ளிமணாளன் திக்கரை வேலவன் திருமஞ்ச வெள்ளோட்டச் சிறப்பு நாளிதழுக்கு வாழ்த்துரை வழங்கும் பேறு அவன் பெருங்கருணையே என எண்ணி வாழ்த்தி அமைகிறேன்.

**அ.உமாமகேஸ்வரன்**
**பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.**

### வாழ்த்துரை

வரலாற்றுச் சிறப்பு மிக்க காரைநகர்ப் பதியில் அமைந்துள்ள காரைநகர் திக்கரை முருகன் ஆலயமானது மிக நீண்ட காலமாக காரைநகர் மண்ணில் அருள்பரப்பி வருகின்றது. புகழ் மிக்க இவ்வாலயத்தின் உற்சவகாலத்தில் புதிதாக மஞ்சம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்படுகிறது என்கின்ற செய்தி மகிழ்ச்சிகரமானதாகும். மகத்தான இந்நிகழ்வை நடத்தும் இவ்வாலய பரிபாலன சபையினருக்கும் திருவிழா உபயகாரர்களுக்கும், புதிய மஞ்சத்தைப் படைத்த சிற்பிகளுக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, முருகப்பெருமானின் திருவருட்பொலிவு திக்கெட்டும் பரவ திக்கரை முருகப் பெருமானின் பாதம் பணிந்து நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.த.ஜெயசீலன் - மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.**

### நிமிர்வுடனே மஞ்சமதும் அசைந்ததம்மா!

உலகமெலாம் உயர்ந்திடவே மஞ்சம் ஏறி
ஓங்கு புகழ் முருகனுமே உலவ வந்தான்
நலங்களெலாம் நாம் அடையக் கைவேல் ஏந்தி
நானிலமும் அறுமுகத்தால் பார்த்து வந்தான்
வளங்கள் மிகு காரைநகர் சிறந்து ஓங்க
வற்றாத திக்கரையின் கோயில் மேவி
நிலங்களெலாம் தலை நிரப்பி பக்தர் நின்றார்
நிமிர்வுடனே மஞ்சமதும் அசைந்ததம்மா!

வடபுலத்தின் பேரொளியாய்த் திகழும் நல்ல
வற்றாத பெருமைமிகு காரை மண்ணில்
திடமுடனே திக்கரையின் மக்களெல்லாம்
தேர்ந்தேதான் மஞ்சமதில் முருகன் ஏற
சடசடெனத் திருப்பணிகள் செய்து கூட்டி
சட்டென்று மஞ்சமதை செய்து நின்றார்
அட இவரின் ஆற்றலதை என்ன சொல்வேன்?
அற்புதமாம் அறப்பணியை வாழ்த்தி நின்றேன்.

**-கம்பவாரிதி இ.ஜெயராஜ் -**

### மயிலேறும் முருகன் மஞ்சம் ஏறி வருகின்றான்

உலகம் முழுதாலும் எங்கள் குலதெய்வம் திக்கரை முருகன் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட திருமஞ்சப் பணி நிறைவடைவதை அறிந்து எல்லையற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன். எமது காரைநகர் மண் வடபுலத்தின் கலை, கலாசாரம், பக்தி ஆகியவற்றின் இருப்பிடமாய்த் திகழ்வது செந்தமிழ்த்தெய்வமான நம் திக்கரை முருகன். இம்மண்ணில் வாழ்ந்த பலரையும் நல்லபடி வாழவைத்து அருள் செய்தான். எங்கள் தந்தையார் காலம்தொட்டு முருகனின் திருப்பணிகளில் ஈடுபடும் பேறு எங்கள் குடும்பத்தார்க்குக் கிட்டியது. அது எம் குலம் செய்த தவம். இப்போது திருமஞ்சம் ஏற்றி நம் திருமுருகனைக் காணும் பணியில் எம் குடும்பத்துக்கும் வாய்ப்புக் கிடைத்தது பற்றி எல்லையற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன். முருகனின் ஆலயத் திருப்பணிகள் மேலும் சிறக்கவும் முருகன் அருளால் நம் மண்ணும் மக்களும் மென்மேலும் உயர்வடையவும் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன். வேலுண்டு வினைதீர்க்க மயிலுண்டு எமைக்காக்க

**எஸ்.வீ.எம்.துரைத்தினம்**
**(அதிபர் எஸ்.வி.எம்.நிறுவனம்)**

### ஆறினில் உதித்த திருமஞ்சம்

காரைநகர் திக்கரையில் வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமானுக்கு சிட்டியர் பரம்பரையில் ஆறாவது இளம் சந்ததியில் உதித்ததுதான் ஆறுமுகனுக்கு ஒரு திருமஞ்சம். நினைக்கவே உடம்பு புல்லரிக்கின்றது. இப்படி ஓர் எண்ணம் இளம்சிறார்கள் மத்தியில் தோன்றியது என்னவோ முருகப்பெருமான் மேல் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை என்றே எனக்குத் தோன்றுகின்றது.

"சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது" என்பார்கள். அதை பொய்ப்பிக்கும் வகையில் தங்களுக்கு பக்கபலமாக இருக்குமாறு தான் எங்களைக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கேற்ப அவர்களைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தினோம். இன்று இந்த கைங்கரியம் நிறைவு பெற்று திருமஞ்சத் திருவிழா நடைபெறக் கைகூடியுள்ளது. திக்கரை முருகனின் அருளை விட வேறு ஒன்றுமேயில்லை. முருகனின் திருப்பணிகள் இன்னும் பல உண்டு. இளம் சந்ததியினர் இன்னும் பல திருப்பணிகளை நிறைவேற்ற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

"ஆண்டவன் பணத்தைத் தருவது தர்மத்தைச் செய்வதற்கே"

**சி.நேசேந்திரம்**

### வாழ்த்துச் செய்தி

இயலிசை வாருதி பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் அவர்கள் இயற்றிய திக்கரை முருகன் திருத்தலப் பாமாலையினைப் பலதரம் படித்துள்ளேன். அதில்வரும்

"திக்கரை முருகனின் திருவடி போற்று
அக்குருபரன் அருள் அள்ளியே தருவான்"

எனும் இரு வரிகளை மீண்டும் மீண்டும் உச்சரிக்கும் பொழுது என்னுள்ளம் உருகுவதை உணர்கின்றேன். திருப்பாற்கடலில் பள்ளியெழுந்தருளும் மாலின் மருகனாகிய முருகன் இன்று மஞ்சத் தேரினில் பவனி வந்து அருள் புரியவுள்ளான் என்பதை எண்ணி அவனடியார்கள் அனைவரும் உள்ளம் பூரிப்பார்கள் என்பது நிச்சயம். மஞ்சம் என்றால் பொதுவாகப் படுக்கை என்ற கருத்து உண்டு. இருந்தும் மாமனாகிய மாயவனைப் போலன்றி மருகனாகிய முருகன் மஞ்சத் தேரினிலே பள்ளிகொள்ளாமல் இருக்கையிலமர்ந்து பவனி வந்து அருள்புரியத் தொடங்குகின்றான். அவனருளாலே அவன்தாள் வணங்கி அடியார்கள் பேரின்பம் அடைய வாழ்த்தி வணங்குகின்றேன். மஞ்சத் தேர் திக்கரை முருகனைக் குலதெய்வமாகக் கொண்டு வாழ்ந்த அமரர் திரு.S.V. முருகேசு அவர்களினதும் மைந்தன் திரு. குணரத்தினம் அவர்களும், அமரர் திரு C.S கனகசரத்தினம் அவர்களினதும் மைந்தன் திரு சிவபாதம் அவர் களும் முன்னின்று பெருநிதி வழங்கியதோடல்லாமல் தமது உறவினர்களையும் சந்ததியினர்களையும் இணைத்து தாம் பெறவுள்ள பேரின்பம் அவர்களும் அடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் இத்திருப்பணியினை நிறைவேற்றியதையிட்டு பூரிப்படைகின்றேன். அவர்கள் திருப்பணி முயற்சிகள் தொடர்ந்து நடைபெற " அரக்கர் அகந்தையன்று தொலைத்த நல்ஞானவேல் புரக்கும் திக்கரை வாழும் புண்ணிய மூர்த்தியாம்" முருகன் அருள் புரிய அவனது பாதாரவிந்தங்களை வேண்டி வணங்குகின்றேன்.

**சிவா.தி.மகேசன்**

### வாழ்த்துரை

காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோயில் திருமஞ்ச வெள்ளோட்டத் திருநாளில் வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். சைவமும் தமிழும் தழைத்தோங்கிய காரைநகரில் திக்கரை என்னும் பதியில் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப்பெருமானுக்கு திரு S.V. முருகேசு மற்றும் திரு. C.S.K. சிவபாதசுந்தரம் ஆகியோரின் பெரும் நிதி உதவியுடனும் ஏனைய சுட்டியர் பரம்பரையைச் சேர்ந்த அடியவர்களின் நிதிப் பங்களிப்புடன் அழகிய சிற்ப வேலைப்பாடு கொண்ட திருமஞ்சத்தை அமைத்துள்ளனர். அவ்வகையில் திருமஞ்சத்தை அழகுற நிர்மாணித்த சிற்பக்கலைஞர் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ நா.சிவபாலன் அவர்களையும் வாழ்த்துவதோடு நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைபெற கலியுகவரதனாகிய கந்தனின் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து எனது வாழ்த்தினையும் கூறி அமைகின்றேன்.

**திரு.ச.பாலச்சந்திரன் - அறங்காவலர்,**
**பாலாவோடை, ஸ்ரீகுறிஞ்சாக்குளி முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.**

### திக்கரை முருகனுக்கு திருமஞ்சம்

கார்வழங்க நெல் விளையும் களபூமியில் பார் விளங்க வீற்றிருக்கும் பார்வதியின் பாலகனின் ஊர் சேர்ந்து வடம் பிடித்து இழுக்கின்ற திருமஞ்ச வெள்ளோட்டம் காணும் திருநாள் இன்றாகும். சுமார் 250 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட திக்கரை முருகன் திருத்தலம் மிகுந்த பாரம்பரிய பண்பாடு மிக்க மக்களாலும் தொண்டர்களினாலும் வணங்கி வழிபடும் தலமாகும்.

மஞ்சம் என்பதன் நேரடிப்பொருள் படுக்கை என்பதாகும். இறைவன் அமைதியாக அமர்ந்து அருள்பாலிக்க உதவும் ஒரு ஊடகமாக இம் மஞ்சத்தை நம்மவர்கள் கொள்வர். தேர் போன்ற வடிவத்தில் அமைந்து கவின் கலை வடிவங்களையும் வாழ்வியல் தத்துவங்களையும் எடுத்தியம்புகின்ற கலை அம்சத்துடன் எம் யாழ்ப்பாணத்தவர்களால் தமிழ்க்கடவுளாம் முருகனுக்கு உருவகித்த ஒரு வடிவமே திருமஞ்சமாகும்.

ஐந்தாம் திருவிழா உபயகாரர்களினால் திக்கரை முருகனுக்குத் திருமஞ்சம் கோடி ரூபா பெறுமதியில் அமைக்கப்பெற்று இன்று அதற்கான வெள்ளோட்டமும் நடைபெற திக்கரை முருகன் நல்லருள் புரிந்துள்ளான். அவனருளாலே அவன்தாள் வணங்கி சிந்தை மகிழும் இக்காட்சிதனைக் காணும் பாக்கியம் எமக்குக் கிட்டியுள்ளது.

**கு.சிவஞானசுந்தரம், இலங்கை வங்கி, வவுனியா.**

### சரவணத்து தாமரையில் தமிழாய் பூத்தவன் திக்கரையில் திருமஞ்சமேறுகின்றான்

தமிழ் வடிவாய் வந்த திக்கரை முருகன் போற்றி
தமிழ் குடியைக் காக்கின்ற இறைவா போற்றி
உமையென்றும் உளம் மறவா உயிரே போற்றி
ஓம் என்ற மந்திரத்தின் உணர்வே போற்றி
இமைத்திடும் முன் எம் கவலை தீர்ப்பாய் போற்றி
எழில் மஞ்சத்தில் இவர்ந்து வரும் தலைவா போற்றி
தமிழ்க்கவிதை தனிற் பிறந்த இறைவா போற்றி
தனை வணங்கும் யாவர்க்கும் அருள்வாய் போற்றி

தமிழுக்கோர் தெய்வமென முருகா வந்தாய்
தரணிக்கோர் இறையாக கந்தா நின்றாய்
உமையவளின் திருமகனாய் உலகம் கண்டாய்
ஓங்காரப் பொருள் அனைத்தும் உளத்தில் கொண்டாய்
அமிழ்தமெனும் தமிழுக்கோர் அழகைச் சேர்த்தாய்
அழகுக்கு அழகாக திக்கரையில் எழுந்தாய்
தமை நம்பும் எளியவர்க்குத் தாயாய் வந்தாய்
சரவணத்து தாமரையில் தமிழாய் பூத்தாய்.

**வர்ணனைக் கலாநிதி**
**மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன் M.A (சைவசித்தாந்தம்)**
**பணிப்பாளர் சைவத்தமிழ் பண்பாட்டு பேரவை, DAN T.V, ஓம் T.V பிரதம வர்ணனையாளர்.**

### மஞ்சத்தில் அருள் செய்ய வருகிறான் திக்கரையான்

திக்கரை முருகனுக்கு - இன்று தங்க மஞ்சத் திருவிழா
திக்கெட்டும் அடியவர்கள் பல் குறைகள் போக்க
எம் திக்கரையான் அருள்பொழிந்து அடியார் குறைதீர்க்கும்
எம் திக்கரை முருகன் பாதம் தொழுவோம்
முருகா சரணம்! திக்கரையான் சரணம்!

**சிவஞானம் கபிலன், சமுர்த்தி அலுவலர்.**


## சுட்டியர் பரம்பரை - திருமஞ்சத் திருப்பணிக் குழுவினர்

ஞானம்
திரட்டு நிலையம்
வத்தை, அனுராதபுரம்

Be Es En Traders
EG1 Central Road, Colombo-12
T.P: 0094-11-2730397, 0094-11-2717316

K.S.M Communication
146, Modern Market, Jaffna.
T.P: 021 222 3079, Fax:021 222 2508

# மரத்துக் கனி கரத்துக் கனியானது



துரியோதனனுக்கு இயல்பாகவே அருச்சுனன் மீதும் அவனது சகோதரர்கள் பாண்டவர்கள் மீதும் பொறாமைக்குணம் இருந்தது. பாண்டவர்களுக்கும் துரியோதனனாதியோர்களுக்கும் துரோணர் வில்வித்தை கற்பிக்கும் ஆசிரியர். ஒரு நாள் துரியோதனன் அவரிடம் "குருவே நீங்கள் பாரபட்சம் காட்டி எங்களுக்கும் பாண்டவர்களுக்கும் கல்வி கற்பிக்கிறீர்கள். இது நியாயமா?"என்று கேட்டான். இதனைக் கேட்ட துரோணர் மனம் வருந்தினார். "ஒருவன் தனக்குக் கல்வி செய்வனே அமையாமைக்கான காரணத்தையும், குறைபாடுகளையும், தானே களைந்து கொள்ள வேண்டும். பொதுவாகக் கல்வியில் முழுமனதும் வைக்க வேண்டும். கூர்ந்து கவனிக்கும் திறன் வேண்டும். கற்ற கல்வியைத் தக்க சமயத்தில் பயன்படுத்த வேண்டும். இவ்வாறெல்லாம் செய்தாலே கல்வியில் முழுத் தேர்ச்சி பெற முடியும். வீணே பிறர் மீது பொறாமைப்படுவது தீமை பயக்கும். அருச்சுனனின் வில் திறமை அவன் கூர்மதியின் திறனேயன்றி வேறில்லை. நான் எல்லோருக்கும் ஒரு மனதாவே கல்வி கற்பிக்கிறேன். இதை மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் உனக்கு விளங்க வைக்கிறேன்" என்று கூறிச் சென்றார்.

ஒரு நாள் துரோணருடன் மாணவர்கள் காட்டு வழி சென்று கொண்டிருந்தார்கள். சிறிது தூரம் சென்றதும் ஒரு உயர்ந்து பரந்து வளர்ந்த ஒரு மாமரத்தின் நிழலில் இளைப்பாறினர். அப்போது அந்த மரத்தின் உச்சிக் கிளையொன்றில் மிகப்பெரிய பழம் ஒன்று கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. அதைக் கண்ட ஆசிரியர் துரோணர், துரியோதனனை அழைத்து பழத்தைச் சுட்டிக்காட்டி அதனைப் பறித்துத் தருமாறு அவனைப் பணித்தார்.

துரியோதனன் விறு விறு என் மரத்தில் கனி பறிப்பதற்காக ஏறினான். ஆனால் துரோணர் தடுத்து "கையில் அம்பும் வில்லும் படைத்த அரச குமாரன் நீ, மரத்தில் ஏறிப் பறித்தலாகாது. உன் அம்பால் அடித்து அதனை வீழ்த்து"என்றார். இதனைக் கேட்ட துரியோதனன், தாமதியாது வில்லில் அம்பைப் பூட்டி மாங்கனிக்கு குறி வைத்தான். அப்போது துரோணர் அவனைக் கையமர்த்தி "பழம் கண்ணுக்குத் தெரிகிறதா?"என்றார். துரியோதனன் "நன்றாகத் தெரிகிறது?என்றான். ஆசிரியர் "இன்னும் என்னென்ன தெரிகிறது"என்றார். துரியோதனன் எல்லாமே தெரிகிறது. பழத்தைத் தாங்கி நிற்கும் மரம், பரந்து விரித்தவானம், தூரத்தில் உள்ள மேகங்கள், கனியைச் சுற்றி கலகல கிளைகள் இப்படி பல தெரிகின்றன"என்றான். சரியானால் அம்பைச் செலுத்து" என்றார். விண் என்ற ஒலியோடு அம்பு சீறிப் பாயந்தது. ஆனால் அது பழம் இருக்கும் இடத்தை நாடாமல் அப்பால் திசை திரும்பிப் பாய்ந்தது. பழத்தை அடித்து வீழ்த்த முடியாத துரியோதனன் வெட்கப்பட்டான்.

துரோணர் பின்னர் அருச்சுனனிடம் பழத்தைப் பறித்துத் தரும்படி கூறினார். அவனும் தன் வில்லில் அம்பைப் பூட்டி தயாரானான். அப்போது ஆசிரியர் " பழம் கண்ணுக்குத் தெரிகிறதா"என்றார். 'இல்லை' என்றான். பழம் இருக்கும் கிளை தெரிகிறதா?" என்றார். 'இல்லை' என்றான் அவன் வானம் தெரிகிறதா? 'இல்லை' என்றான். அருச்சுனானது விடை யாவரையும் அவன் திறமையில் ஐயப்படச் செய்தது. பழத்தையே காண முடியாதவன் எப்படி பழத்தை வீழ்த்த முடியுமென துரியோதனன் உட்பட எல்லோரும் நினைத்தனர். "எல்லாம் சரியாயின் அம்பை விடு என்றார். துரோணர் அம்பு விடுபட்டது. பழம் நிலம்நோக்கி விழ அதை நிலத்தில் விழவிடாது அருச்சுனன் ஏந்திக் கொண்டான். மரத்துக்கனி ஆசிரியரின் கரத்துக்கனியானது. எல்லோரும் வியப்பில் ஆழ்ந்தனர். துரியோதன் குழப்பத்துடன் ஆசிரியரைப் பார்க்க "இது எப்படி உன்னால் ஆனது என்று எல்லோருக்கும்கூறு என்றார் ஆசிரியர். உடனே அருச்சுனன் பணிந்து குருவே! தங்களுக்குத் தெரியாததையா நான் சொல்லப் போகிறேன். நான் மரத்தையோ வானத்தையோ கிளையையோ நோக்கவில்லை. அவற்றை நோக்கினால் என் குறி ஒன்றின் மீது பதியாது. பழத்தை நோக்கியிருப்பேனாகில் அம்பு, பழத்தை அடித்து சிதைத்திருக்கும். ஆதலால் நான் பழத்தையும்பார்க்கவில்லை. பழம் கீழே விழுமாறு அதன் காம்பைக் குறி வைத்து அடித்தேன். கீழே பழம் விருந்தால் சிதைந்து விடும் என்பதால் மேல் ஆடையில் அதனைத் தாங்கினேன் என்றான். அனைவரும் அருச்சுனன் பதில் கேட்டு வியந்து நின்றனர்.

அருச்சுனன் தான் கற்ற வில்வித்தையை தக்கபடி பயன்படுத்தி தன் நுண் உணர்வால் கனியைப் பறித்தான் என்பதை துரியோதனன் உணர்ந்து கொண்டான்.

## கண்டு பிடிப்பாளர்கள் யார்?

1. ஆகாய விமானம்



1. ஜே.சி.பேரியர்
2. சி.மார்க்கோணி
3. றைற் சகோதரர்
4. கார்ல் பென்ஸ்

2. தொலைநோக்கி



1. ஏ.எஸ் பிறிகேற்
2. ஹான்ஸ் விப்பேர்ஸி
3. எம். ஜக் கோபி
4. ஜே பேர்கின்ஸ்

3. நீராவிக்கப்பல்



1. ஜே.சி பேரியர்
2. டி.புஸ்றெல்
3. ஏ.எல் பிறிகேற்
4. ஏம் ஜக் கோபி.

4. ராடர்



1. எல்.சி.யங்
2. ஜே.ஏ.பிளேமிங்
3. கார்ல் பென்ஸ்
4. ஏ.எச் ரெயிலர்.

5. சைக்கிள்



1. கே.மக் மில்லன்
2. வில்லியம் கூஸ்ற்
3. ஈ.ஜி ஒற்றிஸ்
4. போர்ட்

6.மோட்டார் கார்



1. ஜோன் காபட்
2. றூடோல்ப் டீஸல்
3. சி.மார்க்கோனி
4. கார்ல் பென்ஸ்

7. தட்டச்சு இயந்திரம்



1. டேவிட் கக்கஸ்
2. ஜே.புறோவிச்
3. மிற்ற கோபர்
4. மக்மில்லன்

## வீழ்ந்தாலும் விதையாய் முளைப்போம்

எமது வாழ்வில் பல சம்பவங்கள் நடந்திருக்கும். எம்மைத் தருணம் பார்த்து வீழ்த்தி விடுவதிலும், தூற்றுவதிலும், தோற்கடிப்பதிலும் பலர் திட்டமிட்டுச் செயற்படுவர். அதற்குக் காரணம்எங்கள் மீது மற்றவர்களுக்கு உள்ள பயம். அந்தப் பயத்தையே எங்களது பலமாக நாம் நினைத்துக்கொள்ள வேண்டும். மனிதர்கள் பல இடங்களில் வீழ்ச்சிகளையோ, தோல்விகளையோ கண்டு தமது வாழ்வு முடிந்துவிட்டதென்று எண்ணி விடுகின்றனர். இன்னும் சிலர், தான் நம்பிக்கையோடு பழகியவர்கள். துரோகத் தனமாக தன்னை அழிக்கவோ வீழ்த்தவோ நினைத்தால் மனமுடைந்து எல்லா நம்பிக்கைகளையும் இழந்தவர்கள் ஆகின்றனர். "விழாமலே வாழ்ந்தோம் என்பதல்ல பெருமை. விழும் ஒவ்வொரு முறையும் மீண்டும் எழுந்தோம் என்பதே வாழ்வின் பெருமை" என்றார் நெல்சன் மண்டேலா. விழுகின்ற போதெல்லாம் நாம் உரம் கொண்டு எழுவோம் என்ற நம்பிக்கை கொள்ள வேண்டும். எம்மீது வீசப்படும் கற்களைக் கொண்டு படிக்கட்டுகளை அமைக்க வேண்டும். எம்மீது கொட்டப்படும் குப்பைகளை எம் காலடியில் போட்டு அவற்றை உரமாக்கி மகிழ வேண்டும். வாழ்க்கை எம்மை எந்தக் குழியில் வீழ்த்தினாலும் எம்மீது எந்த நாற்றங்களைப் பாய்ச்சியடித்தாலும் நாம் நம்பிக்கையையும் விடா முயற்சியையும் கைவிடாதவரை நாம் மூழ்கப் போவதில்லை. நாமோ அவர்களின் இந்தச் செயலின் நிமித்தம் மேலுயர்த்தப்பட்டிருப்போம். வீழ்ந்த இடத்தில் முளைக்கும் விதைகள் போல் மேலோங்கி எழுவோம்.



## இலங்கையின் கைத்தொழில் நிலையங்கள்

1) பிரிமா ஆலை- திருகோணமலை
2) சோயா ஆராய்ச்சி நிலையம்- பல்லேகல
3) இரும்புருக்குத் தொழிற்சாலை- ஒறுவெல
4) டயர் ரியூப்- களனி
5) சீமெந்து- காங்கேசன்துறை
6) காகிதம்- வாழைச் சேனை, எம்பிலிப்பிட்டி ராஜாங்கன
7) மட்பாண்டம் - பிலியந்தன
8) உலோகம் - யக்கல
9) கட்டிப்பால் தொழிற்சாலை- பொலற்றுவ
10) பால் பதனிடல் - அம்பேல்ல
11) கனிப்பொருள் சுத்திகரிப்பு- புல்மோட்டை
12) இரசாயனம் - பரந்தன்
13) விவசாய கால்நடை ஆராய்ச்சி நிலையம்- மகா இலுப்பல்லம
14) விவசாய நெல் ஆலை- மாகா இலுப்பைக் குளம்
15) தேயிலை ஆராய்ச்சி- தலவாக்கல
16) தெங்கு- நுணவில
17) இறப்பர்- அகலவத்தை
18) வைத்திய ஆராய்ச்சி- கொழும்பு
19) ஆயுள்வேத வைத்திய ஆராய்ச்சி- நாவின்ன
20) பெற்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு- சபுஸ்கந்த
21) ஒட்டுப் பலகைத் தொழில்சாலை- ஜின்தோட்ட

## அமைதி வலயம்

பூமியின் மத்திய கோட்டுப் பகுதியில் வடகீழ் பருவக் காற்றும் தென்கீழ்ப் பருவக்காற்றும் ஒதுங்கும் பகுதியில் 'அமைதி வலயம்' என்றொரு தாழமுக்க வலயமுள்ளது. இந்த அமைதி வலயத்தில் வியாபாரக் காற்றுக்கள் வீசுவதில்லை. மென் வளியே வீசும். அதனால் இந்தப் பகுதி அமைதிவலயம் எனப்படுகிறது. கிடையாக காற்று வீசுவதும், மேற்காவுகையாக மேலேழுவதும் இந்த வலயத்தில் நிகழும். இருந்தாற்போல இந்த வலயத்தில் நீண்ட அமைதி நிலவும். அந்த அமைதி பலநாள்கள் வரை நீடிக்கும் பண்டைய வர்த்தகர்களின் பாய்க் கப்பல்கள் இந்த அமைதி வலயத்தினுள் பிரவேசித்து நகர முடியாது. தத்தளிப்புக்குள்ளாகியுள்ளன. கப்பற்பாய்கள் சோர்ந்து கப்பல் உந்தப்படாது தரித்து நிற்க நேரிடும். நீண்ட அமைதியின் பின் இந்தப் பிரதேசத்தில் கடுஞ் சுழிக்காற்று வீசும். எனவேதான் பண்டைய பாய்க் கப்பல்கள் அமைதி வலயத்தைக் கூடியவரை தவிர்த்துத் தத்தமது பயணத்தை மேற்கொண்டுள்ளன. அமைதி வலயம் மத்திய கோட்டின் இருமருங்கும் மேற்குக் கிழக்காகப் பரவியுள்ளது. சூரியனின் கடகக் கோட்டு உச்சம் மகரக் கோட்டு உச்சம், என்பனவற்றுக்கு இணங்க அமைதி வலயமும் $5^{\circ}$ வடக்காயும் தெற்காயும் நகரும் அமைதி வலயம் நிலவும் கடற்கரையோரங்களில் தெற்காகவும் நகரும். அமைதி வலயம் நிலவும் கடற்கரையோரங்களில் நிலக்காற்றும் கடற்காற்றும் முக்கியம்பெறுகின்றன.



## விஜயகலாவின்...

ளர் மாகல்கந்தே சுதத்த தேரர், சிங்ஹல தேசிய செயலணியின் லியனகே அபேரத்ன, டான் பிரியசாத் என்று அறியப்படும் சுரேஸ் பிரியசாத் ஆகியோர் பொலிஸ் தலைமையகத்தில் மேற்கொண்ட முறைப்பாடுகள், பொலிஸ் மா அதிபரால் குற்றவியல் சட்டத்தின் 125ஆவது அத்தியாயத்துக்கு அமைய விசாரணை செய்யும் பொறுப்பு திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவுக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு தலைமை நீதிவானுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள சிறப்பு அறிக்கையில், குற்றம் சாட்டப்பட்டவராக விஜயகலா மகேஸ்வரன் பெயரிடப்பட்டுள்ளார். அந்த அறிக்கையின்படி, கடந்த 2ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற அரச நிகழ்வொன்றில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார முன்னாள் இரஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், இனங்களுக்கு இடையில் சமாதானத்தை சீர்குலைக்கும் வகையிலான உரையினை நிகழ்த்தியுள்ளார் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மறுநாள் பொலிஸ் தலைமையகத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்ததாகவும் அதன்படியே விசாரணைகள் தம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் திட்டமிட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சர் பிரியந்த லியனகே அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

விஜயகலா மகேஸ்வரன் உரையாற்றியமை தொடர்பில் செய்தி சேகரிப்பு செய்த, 11 இலத்திரனியல் ஊடகங்களிடம் உள்ள சீர் செய்யப்படாத, சீர் செய்யப்பட்ட அவரின் உரை தொடர்பிலான காணொலிகளை விசாரணையாளர்களுக்கு கையளிக்க நீதிமன்றிடம் அனுமதி கோரப்பட்ட நிலையில் அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 11 இலத்திரனியல் ஊடகங்களினதும் செய்திப் பணிப்பாளர்களுக்கு அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அத்துடன் 4 தமிழ் பத்திரிகைகள் உள்பட 13 பத்திரிகைகளில் வெளியான உரை மற்றும் அந்த நிகழ்வு சார்ந்த வெளியீடுகளைப் பாதுகாப்பாக வைக்கவும் விசாரணையாளர்களுக்கு வழங்கவும் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கும் கொழும்பு தலைமை நீதிவான் அனுமதி வழங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றம் யாழ்ப்பாண நீதிமன்ற அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளதால், விசாரணை செய்து அது தொடர்பில் யாழ்ப்பாண நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவும் இதன்போது கொழும்பு தலைமை நீதிவான் ரங்க திசாநாயக்க உத்தரவிட்டார்.

(உ-5,71)

## பூம்புகாரில்...

களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு வாள்வெட்டில் முடிந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். முரண்பாடு முற்றிய நிலையில் வாள்களால் வெட்டுப்பட்டுக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(உ-8)

## சீனா...

தாக 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான கட்டுரை தொடர்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்க வேண்டும், என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் தினேஸ் குணவர்தனவால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடக சுதந்திரத்தையே நாம் விரும்புகின்றோம். ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவது கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும். இலங்கையில் மட்டுமல்ல, 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியருக்கும், ஊடகவியலாளர்களுக்கும் கூட அண்மையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகைக்கு நாம் தகவல் வழங்கவில்லை. அது பற்றி எமக்கு எதுவும் தெரியாது. மகிந்த பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதால், நாடாளுமன்றத்துக்கு வந்து அவர் அறிவிப்பொன்றை விடுத்தால் பிரச்சினை தீர்ந்துவிடும்- என்றார்.

(5)

## எரிபொருள்...

பட்டது. எனினும் கூட்டுத்தாபன அறிவித்தலை ஏற்று பல விநியோக நிலையங்கள் காலையில் ஏற்றிய விலையை உடனடியாகவே பழைய விலைக்கு மாற்றிக்கொண்டன. ஒரு சில நிலையங்கள் மட்டும் அவ்வாறு செய்யவில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிக்கப்படுவதாக அரசு அறிவித்தது. எரிபொருள் விலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய விலை சூத்திரத்திற்கமையவே விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக அரசு அறிவித்திருந்தது.

ஒக்டென் 92 வகை பெற்றோல் ஒரு லீற்றர் எட்டு ரூபாவாலும், ஒக்டென் 95 வகை பெற்றோல் ஒரு லீற்றர் ஏழு ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டன. டீசல் ஒரு லீற்றர் ஒன்பது ரூபா ரூபாவாலும், சுப்பர் டீசல் ஒரு லீற்றர் பத்து ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டன.

ஆனால் பழைய விலைக்கே எரிபொருளை விற்பனை செய்யுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு நேற்று அறிவித்தது.

இது தொடர்பாக கூட்டுத்தாப னத்தின் பதில் விநியோக முகாமையாளர் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


நீங்கள் எமது கூட்டுத்தாபனத்துடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள விநியோக உரிமைக்கான ஒப்பந்தத்துக்கேற்ப, கூட்டுத்தாபனத்தின் எழுத்துமூலமான அறிவித்தல் இல்லாமல் உங்கள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள்களின் விலையில் திருத்தங்களை மேற்கொள்ள முடியாது. ஊடக நிறுவனங்களினால் தெரிவிக்கப்படும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, உங்கள் விநியோக நிலையங்களில் எரிபொருள்களின் விலையில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடாது.

அவ்வாறு செய்வது விநியோகிக்கும் ஒப்பந்தத்தை மீறும் செயலாகும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலே சிபெட்கோ நிறுவனங்கள் பழைய விலைக்கே எரிபொருளை விநியோகிப்பதாக அறிவித்துள்ளன.

(உ-5,17,61)

## கண்ணீர் அஞ்சலி

2018.06.05 இறைவனடி சேர்ந்த
யாழ். மாவட்ட முன்னாள் சமுர்த்தி உதவி
ஆணையாளர்



### நாகலிங்கம் சிவபாதசுந்தரம்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மாவட்டப்பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள்.**
**மாவட்ட சமுர்த்தி அலுவலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## நீங்காத நினைவுகளுடன்
## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 27 . 09 . 1937



ஆண்டவன் அடியில் 07 . 06 . 2018

### அமரர் நீற்றா பாங்கிராஸ்

**(07.07.2018)**

புன்னகையும் தண்ணளியும் பூத்திருந்த பொன்மலரே
நன்னலங்கள் நிறைந்த நாண்மலரே!
அன்புருவே ஆரமுதே இன்னருள் பொழியும்
பொறை நிலமே ஆண்டவரில் அமைதி பெற
வேண்டுகின்றோம் என்றும்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக ஜெயந்திநகர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 07.07.2018 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதுடன் தொடர்ந்து அவரின் நினைவாக எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளவும். இவரது ஆன்மா இறைவனடியில் இன்புற்றிருக்க தொடர்ந்து செபிக்கவும் அன்புடன் கேட்டு நிற்கின்றோம்.

**இல.17, ஜெயந்திநகர், கிளிநொச்சி**
**077 4414 374,**
**077 186 7201**

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா பொன்னுத்துரை



பண்டத்தரிப்பைச் சேர்ந்த சுப்பையா பொன்னுத்துரை கடந்த (04.07.2018) புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சிவக்கொழுந்து - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் மனோகரன், யோகேஸ்வரன், லோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2018) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இந்து விளாவெளி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முள்ளியடி வீதி, பண்டத்தரிப்பு**

**தகவல்: குடும்பத்தினர்.**

---

பிறப்பு 19 . 12 . 1939



இறப்பு 06 . 07 . 2018

### திருமதி தவமணி இரத்தினலிங்கம்

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி இரத்தினலிங்கம் நேற்று (06.07.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை நாகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி சரஸ்வதி தம்பதியரின் அன்புமருமகளும் இரத்தினலிங்கத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற விநாய மூர்த்தி மற்றும் வைத்தியநாதன், திருநாவுக்கரசு, சண்முகராசா ஆகியோரின் அன்புச்சகோதரியும் தவரஜனி, தவஜெனனி, ஆகியோரின் அன்புத்தாயும் ரூபன், பாஸ்கரன் ஆகியோரின் அன்புமாமியும் அனிஸ், ஆரோன், அனுஷ்கா, அபிஷ்கா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.07.2018) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று க்கொள்ளவும்.

**077 412 9501**

**தகவல்: குடும்பத்தினர்.**

# “நிசான் யு.ஆர்.வி.ஏ.என் என்.வி 350” வாகனங்கள் சந்தைக்கு அறிமுகம்

## வரையறுக்கப்பட்ட அசோசியேட்ஸ் தனியார் நிறுவனம் நடவடிக்கை

ஜப்பானில் உற்பத்தி செய்யப்பட்ட 'நிசான் யு.ஆர்.வி.ஏ.என் என்.வி 350' வாகனங்கள் இலங்கை சந்தைக்கு அறிமுகம் பெற்றுள்ளன.
வரையறுக்கப்பட்ட அசோசியேட்ஸ் தனியார் நிறுவனம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
இந்த புதிய அறிமுகம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள வரையறுக்கப்பட்ட அசோசியேட்ஸ் தனியார் நிறுவனம்,
“ஜப்பான் தொழில்நுட்பத்தினால் ஆன மனங்கவர் தோற்றத்தை கொண்டுள்ள இந்த வாகனமானது பயணிகள் மற்றும் பொருள்களை ஏற்றிச் செல்வதில் தனிச்சிறப்புடையதாகவும் பிரபல்யம் வாய்ந்ததாகவும் விளங்குகிறது. எமது நாட்டில் அம்புலன்ஸ் சேவைக்கு பயன்படுத்தக் கூடிய அளவுக்கு சொகுசானதும், இட வசதி மிக்கதும்,பாதுகாப்பானதுமான வாகனமாக திகழ்கிறது.
இவை 'ஸ்டான்டர்ட் ரூப்', 'ஹய் ரூப்' மற்றும் 'அதிக அகலத்தை கொண்ட 16 ஆசன ஹய் ரூப்' ஆகிய மூன்று வடிவ அமைப்புகளை கொண்டுள்ளன. இவற்றை 06 ஆசனங்கள், 15 ஆசனங்கள் கொண்ட வடிவங்களிலும் கொள்வனவு செய்யலாம். பொதுவாக இவ்வாறான வாகனங்களின் சேவை நடவடிக்கைகள் 5 ஆயிரம் கிலோ மீற்றர்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும் இவ்வகை வாகனத்தை பொறுத்த வரையில் 7 ஆயிரத்து 500 கிலோ மீற்றர்களுக்கு ஒரு முறை அதனை மேற்கொண்டாலே போதுமானது. 'நிசான் யு.ஆர்.வி.ஏ.என் என்.வி 350' வாகனங்கள் கொண்டுள்ள சிறப்பம்சமாக இது குறிப்பிடப்படுகிறது.



ஆகவே, சகல 15 ஆயிரம் கிலோ மீற்றர்கள் வரைக்கும் ஒரு சேவை நடவடிக்கைக்கு செலவாகின்ற 30 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் ரூபா வரையான தொகை மதிப்பீட்டை சேமிக்க முடியும். இவை வலுவான 129 குதிரை வலு வினைத்திறன் கொண்ட 'நிசான் வை.டி 25' ரக இயந்திரத்தை கொண்டுள்ளன.
'நிசான் யு.ஆர்.வி.ஏ.என் என்.வி 350' வாகனங்களுடைய கொள்வனவுப் பெறுமதி 86 இலட்சம் தொடக்கம் 91 இலட்சத்து ஐம்பதாயிரம் வரை காணப்படுகிறது. இலகு தவணைத் திட்டங்கள் மற்றும் நிதி வசதிகளை வரையறுக்கப்பட்ட 'ஏ.எம்.டபிள்யு' கெப்பிட்டல் லீசிங் நிறுவனத்தின் மூலமாகவோ அல்லது இதர நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் மூலமாக வழங்குவதற்கு 'ஏ.எம்.டபிள்யு' நிறுவனம் தயாராக உள்ளது.
இவ் வகை வாகனங்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் 'நிசான்' நிறுவனத்திடமிருந்து 10 ஆயிரம் கிலோ மீற்றர்கள் அல்லது 03 ஆண்டு கால பூரண உத்தரவாதச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியும். நாடு முழுமையுமாகவுள்ள 'ஏ.எம். டபிள்யு' முகவர்களை தொடர்பு கொண்டு 24 மணித்தியாலங்களாக இயங்கும் இடர்முகாமைத்துவ சேவையை 15 முதல் 30 நிமிடங்களில் பெற்றுக்கொள்ள முடியும். அசல் 'நிசான்' உதிரிப் பாகங்கள் முகவர்களிடமிருந்து எந்தவொரு உதிரிப் பாகங்களையும் சலுகை விலையில் கொள்வனவு செய்ய முடியும்.
'ஏ.எம்.டபிள்யு' சேவைகள் வலையமைப்பின் சேவை நடவடிக்கைகளை பெற்றுக் கொள்ள முடியும்.
'ஏ.எம்.டபிள்யு' குருணாகல் விற்பனை முகவரான ஜயசேக்கர மோட்டர்ஸ் காட்சியறையிலும், 'இல 185, யூனியன் பிளேஸ், கொழும்பு 02' என்ற முகவரியில் அமைந்துள்ள 'நிசான்' காட்சியறையிலும் இவ் வகை வாகனங்களைப் .பார்வையிட முடியும். - என்றுள்ளது. (ஓ)

# ‘கொழும்பு சிற்றி சென்ரர்’ கூட்டுத் திட்டம் நடைமுறைக்கு

## அபான்ஸ் மற்றும் சில்வர் நீடில் கொஸ்பிட்டாலிட்டி நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் உருவாக்கம்




அபான்ஸ் வியாபாரக் குழுமம் மற்றும் சில்வர் நீடிள் கொஸ்பிட்டாலிட்டி நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் 'கொழும்பு சிற்றி சென்ரர்' கூட்டுத் திட்டம் உருவாகிவருகிறது.
இந்தத் திட்டம் கொழும்பு நகரத்துக்கு அழகை சேர்ப்பதோடு, அழகிய பேய்ரே ஏரிக்கு அருகே, வணிகரீதியில் முக்கியமானதொரு இடத்தில் துரித கதியில் மிகப் பெரியளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இலங்கையின் முதலாவது பன்னாட்டு கூட்டுத் திட்டமாக 185 மீற்றர் உயரத்தைக் கொண்டுள்ளது. இந்தக் கூட்டுத்திட்டத்தின் கட்டட கட்டமைப்பு கட்டுமானப் பணிகள் அண்மையில் முழுமையாக நிறைவுசெய்யப்பட்டுள்ளன.
இதிலுள்ள 192 அதிசொகுசு வீடுகள் பன்னாட்டு தரங்களுக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ளன. பன்னாட்டு தரத்திலான விற்பனை நாமங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்யக்கூடிய கடைத்தொகுதிகள் மற்றும் வியாபாரிகளின் துறைசார் சந்திப்புக்கள், ஒன்று கூடல்கள் உள்ளிட்ட தொழில்சார் நிகழ்வுகளுக்கு சகல சலுகைகளையும் வழங்கிவரும் 'நெக்ஸ்ற்' ஹொட்டல் உள்ளிட்ட நவீன வாழ்க்கைக்கு தேவையான அனைத்து அம்சங்களையும் இது உள்ளடக்கியுள்ளது.
புது வருட காலத்தில் 'கொழும்பு சிற்றி சென்ரர்' கடைத்தொகுதிகள் மற்றும் 6 திரைகளைக் கொண்ட திரையரங்கம், 720 இருக்கைகளைக் கொண்ட உணவகம் மற்றும் 70 விற்பனை நாமங்களைக் கொண்ட கடைத்தொகுதிகள் இங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இங்கு 'அபான்ஸ் ஆர்மெயின் எக்சேஞ்', 'அப்பிள்', 'மாங்கோ' மற்றும் 'ஓடிள்' உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் பன்னாட்டளவிலான விற்பனை நாமங்களைக்கொண்ட கடைத்தொகுதிகளும் அமையவுள்ளன.
இந்தத் திட்டம் குறித்து கருத்துரைத்துள்ள கொழும்பு சிற்றி சென்ரர் கூட்டுத் திட்டத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரி ஆனந்த் சுந்தரம்,
“எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கொழும்பு சிற்றி சென்ரர் கூட்டுத் திட்டத்தில் அமைந்துள்ள இலங்கையின் முதலாவது பன்னாட்டு கடைத்தொகுதிகள் திறந்துவைக்கப்படவுள்ளன. கொழும்பு சிற்றி சென்ரர் கூட்டுத் திட்டத்தில் உருவாகிவருகின்ற பன்னாட்டு தரத்துக்கமைவான கடைத்தொகுதிகள் அனைத்தும் நீண்ட நாள்களாக கொழும்பு நகரத்தின் தேவையாகவே இருந்து வந்துள்ளது.ஆனால் இப்போது அனைவரின் கனவும் நனவாகும் தருணம் உதயமாகியுள்ளது.” - என்றார்.
மேலும் இந்தத்திட்டமானது இலங்கையின் வணிகக் கேந்திர நிலையமாக போற்றப்படும் கொழும்பு நகரின் இதயப் பகுதியில் அமையப் பெற்றுள்ளது. இங்கு முதன்மை பாடசாலைகள், மருத்துவமனைகள், கடைத்தொகுதிகள், வரலாற்றுப் பெருமைமிக்க ஸ்தலங்கள் அமைந்துள்ளன.
இதிலுள்ள வீடுகளின் விலை நிர்ணயம் கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் 40 வீதத்தால் அதிகரித்துள்ளது. நீண்ட கால மற்றும் குறுகிய கால முதலீட்டாளர்களை அதிகம் கவர்ந்துள்ளது.
இந்தத் திட்டத்தில் உள்ள சிறப்புத் தன்மையின் காரணமாக சிங்கப்பூர் 'சி.எம்.ஓ ஏசியா' மூலம் 2017 ஆம் ஆண்டுக்கான 'வளர்ச்சியடைந்து வரும் கூட்டுத் திட்டம்' என்ற பன்னாட்டு விருது கிடைக்கப்பெற்றுள்ளது. (ஓ)

CSE COLOMBO STOCK EXCHANGE


கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

பங்குச்சந்தைத் தகவல்கள்

6/7/2018 — www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | ↓ -9.15 | 6,108.71 | 6,117.86 |
| S&P SL20 | ↑ 27.83 | 3,323.52 | 3,295.69 |
| வியாபாரப்புரள்வு | | 753,543,490 | 512,227,456 |
| உள்நாடு:- கொள்வனவு | | 350,318,336 | 447,121,824 |
| விற்பனை | | 189,308,464 | 283,805,536 |
| வெளிநாடு:-கொள்வனவு | | 403,225,152 | 66,106,616 |
| விற்பனை | | 564,235,010 | 228,421,904 |

| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 142 | 1,851,017 | 265,680,425 |
| மெல்ஸ்ரா க்ரோப் | MELS.N | 50.5 | 4,001,114 | 202,059,723 |
| லங்கா ஐ.ஓ.சி. | LIOC.N | 31.60 | 1,886,915 | 60,844,381 |
| நேஷனல் டெவலப்மென்ட் வங்கி | NDB.N | 110.60 | 290,595 | 31,955,170 |
| சம்பத் வங்கி | SAMP.N | 295.00 | 95,957 | 28,297,705 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.X | 30.70 | 857,765 | 26,600,957 |
| டி எப் சி சி வங்கி | DFCC.N | 101.80 | 241,802 | 24,187,404 |
| ஐட்கென் ஸ்பென்ஸ் | AHUN.N | 28 | 461,722 | 12,928,216 |
| அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N | 16 | 550,763 | 8,814,853 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 220 | 32,833 | 7,223,980 |




பங்குலாம் அறிவித்தல்
லங்கா மில்க்பூட்ஸ் ரூபா 2.50
ஏசில் கேபில் ரூபா 1.50
சென்ரல் இன்டஸ்ரீஸ் ரூபா 2.00
Call 0777 822 014 / 0777 105 205


| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 298 |
| பரிமாற்றத்தில் | ↑ | 245 |
| விலை உழைப்பு | ↓ | 10.3 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.2 |
| பங்குலாப விளைவு | ↓ | 3.2 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 140 | 80 | 80 | 140 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 220 | 120 | 140 | 200 |
| பாகல் | 280 | 260 | 280 | 240 |
| க.கிழங்கு | 100 | 120 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 120 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 140 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 |
| தக்காளி | 280 | 260 | 260 | 260 |
| வாழைக்காய் | 40 | 80 | 80 | 50 |
| கீரை | 40 | 15 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| ப.மிளகாய் | 200 | 300 | 450 | 300 |
| புடோல் | 120 | 80 | 120 | 120 |
| கோவா | 120 | 200 | 180 | 160 |
| வெண்டி | 100 | 90 | 120 | 100 |
| போஞ்சி | 320 | 250 | 280 | 260 |
| லீக்ஸ் | 240 | 260 | 280 | 360 |
| தேங்காய் | 70 | 70 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 120 | 130 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 150 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| கறிமிளகாய் | 280 | 320 | 280 | 240 |
| கரட் | 280 | 300 | 280 | 360 |
| முருங்கைக்காய் | 300 | 700 | 500 | 300 |

## வெண்டிக்காய் பொரியல்

**தேவையான பொருள்கள்**
வெண்டிக்காய் - 1/4 கிலோ
வெங்காயம் - 1
பச்சை மிளகாய் - 2
மிளகாய் தூள்- 1/4 தேக்கரண்டி
கடுகு - 1/4 தேக்கரண்டி
உளுந்தம் பருப்பு - 1/2 தேக்கரண்டி
செந்தல் மிளகாய் - 1,
பூண்டு -2 பல்,
தேங்காய் துருவியது - 3 தேக்கரண்டி
கறிவேப்பிலை- சிறிது,
உப்பு - தேவையான அளவு,
எண்ணெய் - தேவையான அளவு



**செய்முறை**
முதலில் வெண்டிக்காயை நன்கு கழுவி, அதனை ஒரு துணி யால் துடைத்து விட்டு, சிறிய துண்டுக ளாக நறுக்கிக் கொள்ள வேண்டும்.
ஒரு சட்டியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, உளுந்தம் பருப்பு, வரமிளகாய், கறி வேப்பிலை மற்றும் பூண்டு போட்டுத் தாளிக்க வேண்டும்.
பின்பு அதில் மிளகாய் மற்றும் நறுக்கிய வெங்காயம் சேர்த்து நன்கு வதக்க வேண்டும்.
வெங்காயம் பொன்னிறமானதும், அதில் நறுக்கிய வெண் டிக்காய் போட்டு கிளறி, வெண்டிக்காய் வேகும் வரை அடுப்பில் வைத்துக் கிளற வேண்டும்.
வெண்டிக்காய் வெந்ததும், அதில் மிளகாய் தூள் மற்றும் உப்பு சேர்த்து, பச்சை வாசனை போகும் வரை வதக்க வேண்டும். இறுதியில் அத்துடன் துருவி வைத்துள்ள தேங்காய் போட்டு கிளறி இறக்கி விட வேண்டும்.

## கர்ப்ப காலத்தில் ஏற்படும் அஜீரணம் மற்றும் நெஞ்சு எரிச்சல்


கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான பிரச் சினைகளை கர்ப்பிணிகள் எதிர்கொள்வார்கள். அப்படிப் பிரச் சினைகள் வரும்போது அவற்றுக்கான காரணங்களையும், தீர்வு களையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.
கர்ப்பத்தின் 16ஆவது வாரத்திலிருந்து கருப்பையின் அளவு அதிக ரிப்பதால் வயிற்றின் சுற்றளவும் அதிகரிக்க ஆரம்பிக்கும். கருப்பை பெரிதாவதன் விளைவாக வயிற்றை அழுத்தும். அதனால் இரைப் பையிலுள்ள அமிலம், தொண்டைக்குழாயை நோக்கி வெளியே தள்ளப்படுவதால் அஜீரணம், நெஞ்சு கரிப்பது போன்ற உணர்வு கள் தோன்றும். அதற்காக இந்த அறிகுறிகள் எப்போதும் சாதார ணமானவைதான் என்று அலட்சியமாக இல்லாமல், மஞ்சள் காமாலைக்கான அறிகுறியா என்பதையும் பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும்.
இயல்பாக விரும்பி சாப்பிடக்கூடிய உணவு கூட கர்ப்பக் காலத்தில் அஜீரணத்தை உண்டாக் கும். பிரச்சினைக்குக் கார ணமான உணவுகளைத் தவிர்த்து விடுவதே இதற் கான முதல் தீர்வு. அப்ப டித் தவிர்த்துவிட்டு எடுத் துக்கொள்கிற மற்ற உண வுகளில் சரிவிகித ஊட்டச் சத்துகள் உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஒரே யடியாகச் சாப்பிடாமல் கொஞ்சம் கொஞ்சமாகப் பலமுறை சாப்பிடுவதும், நிமிர்ந்து உட் கார்ந்து சாப்பிடுவதும் வயிற்றிலுள்ள அழுத்தத்தை அகற்றுகிறது.



கர்ப்பிணிகளில் பெரும்பாலானவர்கள் நெஞ்செரிச்சல் பிரச்சினையால் பாதிக்கப்படுகிறார்கள். இரைப்பைக்கும், உணவுக் குழாய்க்கும் இடையிலுள்ள வால்வில் அளவுக்கதிகமாக ஏற்படும் தளர்வினால் மார்பில் கடுமையான வலியும், எரிச்சலும் ஏற்படக் கூடும். இந்த நிலையில் இரைப்பையிலுள்ள அமிலம், உணவுக் குழாய்க்கு வரும்.
கர்ப்பத்தில் வளரும் குழந்தை இரைப்பையை முன்னோக்கித் தள் ளுவது ஒரு காரணம். அடுத்து புரோஜெஸ்ட்ரான் ஹார்மோன் ஏற்படுத்தும் மாற்றம் இன்னொரு காரணம். அதிகமாக சாப்பிடுவது அல்லது மல்லாந்த நிலையிலேயே படுத்திருப்பதும்கூட நெஞ்செ ரிச்சலை ஏற்படுத்தும். ஒரேயடியாக சாப்பிடாமல் குறைந்த இடை வெளிகளில் சிறுகச் சிறுக சாப்பிடுவது பிரச்சினை வராமல் தவிர்க் கும்.
சில பெண்களுக்கு இரவில் பாதி தூக்கத்தில் நெஞ்செரிச்சல் ஏற்பட்டு தூக்கம் கெட்டுப் போகும். கர்ப்பத்துக்கு முன் நெஞ்செரிச்சலுக்குப் பயன்படுத்திய மாத்திரைகளைத் தவிர்த்துவிட வேண்டும். சாப் பிட்ட பிறகு கால்களை நீட்டிப் படுப்பதையும், உடனே குனிந்து உட்காருவதையும் தவிர்க்க வேண்டும். வசதியாக நிமிர்ந்த நிலை யில் உட்கார்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் சாப்பிட்ட உணவு சிறுகுடலுக்குள் நேர்த்தியாகச் செல்லும். தலைப்பகுதி உயரமான படுக்கையில் படுத்தால் உறக்கம் நன்றாக வரும். பால் குடிப்பதும் இதம் தரும்.

## பப்பாசி இலையின் நன்மைகள்

அன்றாடம் நாம் சாப்பிடும் பழங்களில் இருக்கும் மருத்துவ நன்மைகளை விட அதன் இலை, பூ, பட்டை, வேர் இது போன்ற ஏனைய பாகங்களிலும் அத்தகைய மருத்துவக் குணங்கள் அதிக மாக நிறைந்துள்ளன.
அந்த வகையில், பப்பாளி இலை முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்த இலையில் ஃபைட்டோ நியூண்ட்ரியண்டுகள், என்சைம் போன்ற நிறமிகளும், கல்சியம், பொட்டாசியம், சோடியம், மெக்னீசியம் மற்றும் இரும்பு போன்ற கனிமச் சத்துக்களும் அதிகமாக உள்ளன.
எனவே பப்பாளி இலையில் ஜூஸ் செய்துக் குடித்து வந்தால், ஏராளமான நன்மைகளை நாம் பெறலாம். எமது உடம்பில் ஓடும் குருதியில், குருதித் தட்டுகள் குறைந்தால், அது பல்வேறு நோய் களை ஏற்படுத்தும். இதனால் பப்பாளி இலை ஜூஸ் குடித்து வந் தால், குருதிச் செல்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யலாம்.
பப்பாளி இலையின் சாறு எமது உடம்பில் உள்ள கல்லீரலின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, மஞ்சள் காமாலை, கல்லீரல் புற்று நோய் போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கிறது.



எமது உடம்பில் உள்ள வைரஸ்கள் மற்றும் பக்டீரி யாக்களிடம் எதிர்த்து போராடி, மலேரியா, டெங்குக் காய்ச்சல், புற்றுநோய் போன்ற ஆபத் தான நோய்களிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கிறது.
அன்றாடம் நாம் பப்பாளி இலைச் சாற்றினைக் குடித்து வந்தால், அது எமது உடம்பின் நோயெதிர்ப்பு திறனை அதிகரிக்கச் செய்து; உடல் சோர்வு போன்ற பிரச்சினைகளைத் தடுக்கிறது.
வயிற்றில் ஏற்படும் செரிமான பிரச்சினை, ஒவ்வாமை, அலர்ஜி போன்ற சருமப் பிரச்சினை, ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சி, நீரிழிவு மற்றும் பக்கவாதம் போன்ற பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாகவும் உள்ளது.



## இது புதுசு

பெண்களுக்கான மணிக்கூட்டு வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 600 | 500 |
| கணவாய் | 800 | 800 | 1000 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | 1100 |
| சுறா | 600 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 600 | 400 |
| விளை | 600 | 500 | 600 | 800 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 200 | 300 | 200 |
| நகரை | 250 | 250 | 400 | 250 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 200 | 300 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | – |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 300 |
| வாளை | 150 | 300 | 500 | 200 |

# சென். அன்ரனிஸுக்கு தட்டெறிதலில் தங்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 7
வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய வடமாகாப் பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலில் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜே.சுகன்யா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற 16 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலில் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜே.சுகன்யா 22.23 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும், முல்லைத்தீவு விநாயகர்புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.தர்சிகா 21.19 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எம்.அகல்விழி 20.97 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23,422)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

**வசந்தசிறி வி.க. தாச்சித் தொடர்**

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கண்ணகி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்தை விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தென்றல் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது.


**துடுப்பாட்டத் தொடர்**

இலங்கை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலன துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று இன்று சனிக்கிழமை சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## நீளம் பாய்தல் போட்டி

# விபுலானந்தாவுக்கு கிடைத்தது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 20 வயது ஆண்களுக்கான நீளம் பாய்தலில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். றுசாந்தன் தங்கப்பதக்கம் வென்றார்.



யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் வவுனியா விபுலானந்தாக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். றுசாந்தன் 6.8 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், வர்ண விருதையும் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்து வப்படுத்தி பங்குபற்றிய எஸ். எனோக்ராஜ் 6.75 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியைப் பிரதிநிதித்து வப்படுத்திப் பங்குபற்றிய எம்.குயசாந்தன் 6.54 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)

# விளையாட்டுக்கள் என்பவை இரண்டாவது தெரிவு இல்லை

## அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7
விளையாட்டுக்கள் என்பவை இரண்டாவது தெரிவுகள் இல்லை என்று தெரிவித்தார் வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் சர்வேஸ்வரன்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கி ல் ஆரம்பித்துள்ள வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,
"மாணவர்கள் மத்தியில் விளையாட்டுக்களை இரண்டாம்தர விடயமாக யாரும் பார்க்கக்கூடாது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் இந்த விடயத்தில் கரிசனையுடன் செயற்படவேண்டும். மாணவர்களுக்கு கல்வி எந்தளவுக்கு முக்கியமோ அந்தளவுக்கு விளையாட்டுக்களும் முக்கியம். ஒவ்வொரு மாணவனுக்கும் ஏதாவது ஒரு விளையாட்டில் ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்களை வழிப்படுத்த வேண்டும்.
எமது மாகாணத்தில் மாகாண, தேசிய மட்டங்களிலும் பன்னாட்டு மட்டத்திலும் சாதனை படைத்த மாணவர்களின் குடும்ப நிலைகளை எடுத்துப்பார்ப்போமானால் அவர்கள் அனைவரும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். ஆகவே அவர்கள் ஒரு கட்டத்தில் தங்களுடைய விளையாட்டுத்துறையை விட்டு வேறு துறைகளில் நாட்டம் காட்டுகின்றனர். இனி வரும் காலங்களில் அவ்வாறான நிலை இருக்கக்கூடாது. விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து தங்களை வளர்த்துக்கொண்டு நாட்டுக்கும், எமது மாகாணத்திற்கும் எமது மக்களுக்கும் பெருமை சேர்க்க வேண்டும். விளையாட்டுப் போட்டிகளில் தேசிய, பன்னாட்டுச் சாதனையாளர்களின் எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நாங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். படிப்படியாக அதனைச் செய்வோம். அந்த வகையிலே விளையாட்டுக்களில் ஈடுபடக்கூடிய மாணவர்களோ மாணவிகளோ மனவுறுதியோடும் எதிர்காலம் பற்றிய தன்னம்பிக்கையுடனும் விளையாட்டுத்துறையில் தங்களுடைய சாதனைகளை நிலை நாட்ட வேண்டும்" என்று குறிப்பிட்டார். (ம-23)

# திருத்தி வாசிக்கவும்

உதயன் பத்திரிகையில் கடந்த புதன்கிழமை வெளியான 'கார்மேல் போய்ஸ்' அணி இறுதியில் என்கிற செய்தியில் ஆட்டம் நடைபெற்ற மைதானம் 'கலைவாணி விளையாட்டுக் கழக மைதானம்' என்று பதப்பாகியுள்ளது. அதை 'இணுவில் கலையொளி மைதானம்' என்று திருத்தி வாசிக்கவும். (ம)

# சைக்கிளோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
காரைநகர் அபிவிருத்திச் சபையும், சுவிஸ் காரை அபிவிருத்திச்சபையும் இணைந்து நடத்தும் பேராசிரியர் கென்.னடி விஜயரத்தினம் ஞாபகார்த்த சைக்கிளோட்டப் போட்டி காரைநகரில் இன்று சனிக்கிழமை இடம்பெற உள்ளது.
கென்னடி விஜயரத்தினத்தின் ஆறாம் மாத நினைவேந்தலை முன்னிட்டு நடத்தப்படும் இந்தப் போட்டிகள் காரைநகர் முத்துமாரிஅம்மன் ஆலய முன்றலில் இன்று காலை 6 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமாக இந்தப் போட்டிகள் இடம்பெற உள்ளன. (ம-250)

# ஹாட்லி மாணவனுக்கு குண்டெறிதலில் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்தும் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டு எறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் ஆரம்பமாகின. நேற்று நடைபெற்ற 16 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டு போடுதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்து வம் செய்த எஸ். மிதுன்ராஜ் 14.68 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பிரதி நிதித்துவம் செய்த ரி. சந்தோஸ் 11.91 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளி பதக்கத்தையும் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர். டினுசன் 11.30 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23,422)



# எம்.எஸ்.டி

## கீப்பர் முதல் மேய்ப்பர் வரை







பிரகாஸ்

ஆடுகளத்தில் டோனியை ஆக்ரோசமாகப் பார்க்க முடியாது. எந்த இக்கட்டான நிலையிலும் அவ்வளவு அழகாகப் புன்னகைப்பார். இந்தப் புன்னகைதான் நாள்கள் உருண்டோட அவருக்குக் 'கப்டன் கூல்' என்ற சாதனைப்பெயர் வரக் காரணமானது. கோடிக் கணக்கான ரசிகர்களை அவரின் பின்னால் கட்டிப்போட்டது. என் இளமைப் பருவம் வறுமையால் நிறைந்தது. அதனால் எனக்கு உணவு கிடைக்க அல்லது எனது அம்மா உணவு தயாரிக்க அதிக நேரம் எடுத்துக் கொள்ளும். அப்படியாக வந்தது தான் இந்தப் பொறுமை" என்று தனது 'கூல்' பற்றித் தானே பல முறை தெரிவித்துள்ளார். அந்த ஜாம்பவானின் பிறந்த தினம் இன்று. கொண்டாடலாம்வாருங்கள்.

### பிறப்பும் ஏழ்மையும்

இந்தியாவில் உள்ள ராஞ்சி என்கிற மாநிலத்தின் ஜார்கன்ட் என்ற 'வரட்சிப்' பகுதியில் 1981ஆம் ஆண்டு இதே நாளில் டோனி அவதரித்தார். கள்ளிச் செடிகள் கதைசொல்லும் ஜார்கன்ட் பஞ்சத்தால் அவ்வப்போது பாதிக்கப்படும் ஒரு மாநிலம். பன்னாட்டு கிரிக்கெட் ஆட்டங்களை நடத்தக்கூடியவாறான எந்தவொரு மைதானத்தையும் கொண்டிராத மாநிலம். இந்த மாநிலத்தில் பிறந்த டோனி மலைகளில் ஏறுவதையும் இறங்குவதையுமே தனது உடற்பயிற்சியாகக் கொண்டார். "எனது மலைகளே எனது உடற்பயிற்சிக் கூடங்கள். அவைதான் இந்த வயதிலும் நான் உடற்தகுதியுடன் இருக்கக் காரணம்" என்று பலமுறை சொல்லிக் கொள்வார் அவர். ஏற்கக்கூடிய கருத்துத் தானே. மலையேற்றம் செய்வோருக்குத் தெரியும் அதற்கு மன உறுதியும், உடல் வலிமையும் எவ்வளவு வேண்டும் என்று.

### அறிமுகமும் விசித்திரமும்

என்னில் மட்டுல்ல ஏகப்பட்ட கிரிக்கெட் ரசிகர்களில் உள்ள ஒரு குணம், தமக்கு பிடித்தமான வீரர் ஆட்டமிழந்து விட்டால் தொலைக் காட்சிப் பெட்டிக்கு விடைகொடுத்து விடுவது. அவ்வாறான ஒரு பழக்கம் இந்திய அணியின் ரசிகர்களிடமும் இருந்தது. அது சச்சினால் வந்தது. சச்சின் களத்தில் நின்றால் இந்தியா வெல்லும், சச்சின் ஆட்டமிழந்தால் இந்தியாவும் 'அவுட்'. 2000 - 2007ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிகளில் இந்திய ரசிகர்களின் மனங்களில் இது எழுதப்படாத விதியாக இருந்தது. அந்த எண்ணவோட்டத்தை, கருத்துருவாக்கத்தை மாற்றிய பெருமை டோனியையே சாரும். இத்தனைக்கும் டோனி ஒரு ஜாம்பவானாக கிரிக்கெட்டில் அறிமுகமாக வில்லை. அவரது அறிமுகமே அவரைப்போன்று விசித்திரமானது. 2004ஆம் ஆண்டு டிசெம்பரில் இந்தியா பங்களாதேஷை எதிர்த்து விளையாடிய தொடரில் டோனி அறிமுகமானார். ஒருநாள் ஆட்டங்களில் டெஸ்ட் ஆட்டங்களுக்குரிய கால் கவசத்தை அணிந்தபடி, 'அனுமன் கதாயுதத்தை ஏந்திச் செல்வது போன்று' துடுப்பு மட்டையை தோழில் சுந்தவாறு நீண்ட சடைமுடியுடன் வந்த அந்த உருவம்தான் இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலம் என்றும் இந்திய அணியையே மாற்றியமைக்கப்போகும் சக்தி என்றும் அப்போது எவரும் நினைத்திருக்கவில்லை. சுமார் ஒரு வருடத்தின் பின்னர் அதாவது 2005ஆம் ஆண்டு டிசெம்பர் இரண்டாம் நாளில் இருந்து டெஸ்ட் அரங்கின் பக்கமாக தனது தாக்கத்தை செலுத்த ஆரம்பித்தது டோனி புயல்.



### தலைவனான கதை

2007ஆம் ஆண்டு இந்திய அணி உலகக்கிண்ணத் தொடரில் முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்டது. இதையடுத்து புதியதொருதலைமை இந்தியாவுக்குத் தேவை என்கிற நிலை. கங்குலி என்கிற மகத்தான ஜாம்பவானின் நெறிப்படுத்தலின் கீழ் இந்திய அணியின் சகல அதிகாரமும் டோனியிடம்வழங்கப்பட்டது. இந்திய அணியின் தலைவராக டோனி!!!. 2007ஆம் ஆண்டு நடைபெற்ற ரி20 உலகக்கிண்ணம் டோனியின் தலைமையின் கீழ் இந்தியா எதிர்கொண்ட முதலாவது மிகப்பெரிய தொடர். அதே ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா சுருண்டு மடிந்ததால் ரி20 உலகக்கிண்ணத் தொடரில் இந்தியாவின் மீது மிகப் பெரிய எதிர்பார்ப்பு நிலவியது. 'இளம் கன்று பயமறியாது' என்கிற பழமொழிக்கான அர்த்தம் உணராதவர்கள் இந்த உலகக்கிண்ணத் தொடரின் காணொலிகளை மீண்டும் பார்த்தால் தெட்டத் தெளிவாக உணர்ந்துகொள்ளலாம். ஆனால் அந்த உலகக்கிண்ணத் தொடரில், டோனி என்கிற இளங்கன்று தொட்டதெல்லாம் துலங்கியது. அந்தத் தொடரில் மட்டுமல்ல அதற்குப் பின்னரான தொடர்களிலும்கூட பாகிஸ்தானுக்கு எதிரான இறுதியாட்டத்தில் இந்திய அணியிடம் இருந்து கிண்ணம் சென்றுவிட்டது என்கிற நிலைப்பாடு இருக்கையில் 'பேக் லோங்' திசையில் சிறிசாந்தை நிற்கவைத்து மிஸ்பா உல் ஹக்கை வீழ்த்திய துணிச்சலும், திறமையும் டோனியால் மட்டுமே முடியும்.

### டோனி செய்தால் சரி

'டோனி செய்தால் சரி' என்கிற எண்ணவோட்டம் இந்திய கிரிக்கெட்டுக்குள் ஆழமாக ஊடுருவுவதற்கு 2007ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடர் முக்கிய காரணமாக அமைந்தது என்றால் அது மிகை என்று கூறுவதற்கில்லை. அதன் பின்னர் டோனியின் ஆதிக்கம் இந்திய கிரிக்கெட்டில் அதி உச்சம் பெற்றது. டோனி தெரிவு செய்வதுதான் அணி என்கிற அளவுக்கு அவரின் முடிவுகள் முக்கியத்துவம் மிக்கனவாக அமைந்தன. இந்த முடிவின் அடிப்படையில்தான் ஜாபர், கங்குலி போன்ற ஜாம்பவான் வீரர்களை இந்தியா இழக்க வேண்டியிருந்தது. இதற்காக டோனிக்கு ஏகப்பட்ட எதிர்ப்பலை இருந்தாலும் அவர் எதையும் கண்டுகொள்ளவில்லை.

### டோனிக்கு மாற்று இல்லை

1983ஆம் ஆண்டு இந்திய அணி கபில்தேவின் தலைமையில் உலகக்கிண்ணம் வென்றதன் பின்னர் சுமார் 3 தசாப்த காலமாக மற்றொரு உலகக்கிண்ணத்துக்காக இந்தியா தவமிருந்தது. சச்சின், ராவிட், மியான்தத், கங்குலி என்று ஜாம்பவான்கள் பலரும் பலதையும் செய்து பார்த்துவிட்டார்கள். ஆனால் மற்றொரு உலகக்கிண்ணம் என்பது சாத்தியப்படாததாகவே இருந்தது. இந்த ஏக்கமும் டோனியால் போனது. 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரை டோனியின் தலைமையில் கைப்பற்றியது இந்தியா. டோனி இல்லையேல் உலகக்கிண்ணம் என்ற கனவு மெய்ப்படாமலேயே சச்சின் தனது ஓய்வை அறிவித்திருப்பார். இதனால்தானோ என்னமோ "நான் ஏகப்பட்ட தலைவர்களின் கீழ் விளையாடியுள்ளேன் ஆனால் எவரையும்போல் டோனியில்லை. டோனிபோலும் எவருமில்லை" என்று சச்சின் குறிப்பிட்டிருந்தார். இந்திய கிரிக்கெட்டுக்கு இன்னொரு சச்சின் சாத்தியம். அது கோக்லியாகக்கூட இருக்கலாம். ஆனால் எவரும் டோனியாகமுடியாது.

### மலைபோல் சாதனைகள்

ஓர் இலக்குக் காப்பாளர் ஆட்டமிழக்காமல் 183 ஓட்டங்கள் எடுத்தமை, ஓர் இன்னிங்சில் அதிக பிடியெடுப்புக்கள், 50 ஆட்டங்களுக்கும் மேல் விளையாடிய இந்திய வீரர்களில் அதிகபட்ச சராசரி, ஒருநாள் ஆட்டங்களில் 7ஆவதாகக் களமிறங்கி அதிகபட்சமான ஓட்டங்கள் குவிப்பு, ஓர் இன்னிங்சில் 6 பேரை வீழ்த்திய இலக்குக் காப்பாளர், அதிக பிடியெடுப்புக்கள், அதிக ஸ்டம்பிங், ஆட்ட நாயகன் விருதுகள், தொடராட்ட நாயகன் விருதுகள் என்று டோனியின் சாதனைப் பட்டியல் மிகமிக நீளமானது. எல்லாவற்றுக்கும் மேலாக மூன்று உலகக்கிண்ணங்களையும் கைப்பற்றி மூவகைத் தரப்படுத்தலில் தனது அணியை முதலிடத்துக்குக் கொண்டுசென்ற ஒரேயொருதலைவர் டோனி மட்டுமே. இந்தச் சாதனையை இன்னொரு தலைவர் படைப்பது என்பது சாத்தியமே இல்லை என்கின்றனர் கிரிக்கெட் வல்லுனர்கள்.

### ஓய்வா? அவ்வாறென்றால்

எவராவது பட்டமரத்துக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு கல்லெறிவார்களா?. இல்லவேயில்லை. காய்க்கும் மரத்துக்குத்தான் கல்லெறி விழும். டோனியும் இதற்கு விதிவிலக்கல்ல. ஓய்வு எப்போது என்கிற வினாதான் டோனி இப்போது வாங்கிக்கொண்டிருக்கும் கல்லெறி. நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் அதிகம் சாதித்து தன்மீதான விமர்சனங்களை தற்காலிகமாக தடை செய்துள்ளார் டோனி. தான் செய்த அனைத்தையும் மீண்டும் ஒருதடவை செய்யவேண்டும் என்கிறார் அவர். முடியாதா என்ன? ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். கிரிக்கெட்டின் அர்த்தம் தான்தான் என்று பெயரெடுத்துள்ள டோனி, தனது மைதான வாழ்க்கையை கிரிக்கெட் வீரராக அல்லாமல் ஒரு கால்பந்தாட்ட வீரராகவே ஆரம்பித்தார். தொழில்முறையில் அவர் ஒரு டிக்கெட் கலெக்டர். தலை சுற்றுகிறதா?. அதுதான் டோனி.

வீடு வாடகைக்கு
யாழ்.நகரில் சகல வசதிகளுடனும்
கூடிய வீடு வாடகைக்கு.
072 699 5175

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான
மாபெரும் கருத்தரங்கு
தமிழ் – T.S.குகன் (B.A.)
தொடர் 10 நாள்கள் கருத்தரங்கு
இரு இடங்களில்
ஆரம்பம்
- HAC சித்தன்கேணி
08.07.2018 ஞாயிற்றுக்கிழமை
8.00 AM - 1.00PM வரை
- NEC மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்.
09.07.2018 திங்கட்கிழமை
2.30 PM - 5.30 PM வரை
- வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்.
- முற்றிலும் எதிர்பார்க்கை வினாவிடைகள் கலந்துரையாடப்படும்.
தொடர்பு - 077 532 7709




வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று ஆரம்ப மானது. ஆரம்ப நிகழ்வின் பதிவுகள் சில. (ம-23)

**பும்ரா இல்லை**

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்தும் காயம் காரணமாக இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் பும்ரா விலகினார்.

கடைத் தொகுதி வாடகைக்குண்டு
(4 கடைகள்)



சுழிபுரம் மத்தி சுழிபுரம் பொன்னாலை வீதியில் விக்டோரியா கல்லூரிக்கு அருகில் கடைத் தொகுதி வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 3530203
(C17111)(10)

மணமகள் தேவை
யாழ்ப்பாணம் இந்து குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை. 1981 இல் பிறந்த தற்போது வெளிநாட்டில் வசிக்கும் (வெளிநாட்டு பிரஜை உரிமையுடையவர்) படித்த நற்குணமுடைய (28 - 33) வயது உடைய மணமகளைத் தேடுகின்றோம்.
(தரகர்மாரும் தொடர்பு கொள்ளலாம்)
தொடர்புகளுக்கு
நிரந்தர நம்பர் :- 0041 - 78 690 4093 (தாய், தந்தை)
(Viber, Whats app, imo)
076 193 2816
தற்காலிக நம்பர் :- (3 Week மட்டும்)
(AKN/492)(11.17)

# அரையிறுதிக்கு பிரான்ஸ் தகுதி



உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் உருகுவேயை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது பிரான்ஸ்.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே பிரான்ஸ் அதிகளவான பந்துடைமையைக் கொண்டிருந்தது. எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று மப்பே மீதுதான் உருகுவேயின் கவனம் குவிந்திருந்தது. இதனால் கிரீஸ்மன், போக்பா இருவரும் கூடுதல் பொறுப்பெடுத்திருந்தனர். உருகுவே அவர்கள் இருவரையும் நெருக்கடி இல்லாமல் விளையாடக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தியிருந்தது என்று சொன்னாலும் அதில் மிகையொன்றுமில்லை.



22 ஆவது நிமிடத்தில் உருகுவேயின் கோல் பரப்பை மிகவும் நெருக்கமாகச் சென்றார் கிரீஸ்மன். எனினும் கோலைப் பதிவு செய்ய விடாமல் தடுத்தது உருகுவேயின் பின்வரிசை. 28ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் கோல் கம்பங்களை நெருங்கினார் சுவாரஸ். பிரான்ஸின் பொக்ஸ் பகுதி வரைக்கும் சுவாரஸ் சென்றிருந்த போதிலும் அவரால் கோலைப் பதிவுசெய்ய இயலவில்லை. 40ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி கோலைப் பதிவு செய்தார் வரானி. முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது பிரான்ஸ்.

இரண்டாம் பாதியிலும் பிரான்ஸின் ஆதிக்கம் தொடர்ந்தது. 61ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தினார் கிரீஸ்மன். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது பிரான்ஸ்.

ஆட்டத்தின் 57 வீதமான நேரங்களில் பிரான்ஸ் பந்துடைமையைக் கொண்டிருந்தது. 43 வீதமான நேரங்களில் உருகுவே பந்துடைமையைக் கொண்டிருந்தது. பிரான்ஸ் இரு உதைகளை உருகுவே கோல் காப்பாளரை எதிர்த்து மேற்கொண்டு இரண்டையும் கோலாக்கியது. உருகுவே 4 உதைகளை மேற்கொண்ட போதிலும் எதுவும் கோலாகவில்லை. இரு அணிகளும் தலா 2 மஞ்சள் அட்டைகளைப் பெற்றன. உருகுவே செய்த பந்துப்பரிமாற்றம் 336. பிரான்ஸ் செய்த பந்துப்பரிமாற்றம் 529. ஆக, அனைத்து வகையிலும் உருகுவேயை விட நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது பிரான்ஸ். (ம)

கொக்குவில் இந்துக் கல்லூரி
சாரண இயக்கம் -
பவளவிழா - 07.07.2018
இன்று உதயமாகின்றது-
முருகண்டி அறக்கட்டளை
- கல்லூரி சாரணர்களுக்கு வருடந்தோறும் பாராட்டுப்பரிசுகள்
- சாரணிய கல்வி உதவுதொகை
- சாரண பயிற்சி உதவுதொகை
இவ் விழாவிற்கு எமது பழைய மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.